# திருக்கோயில்

ஜூன் 1981 ரூ. 1-25



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு





தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், அணைக்கரை அருள்மிகு வில்லியாண்டவர் திருக்கோயிலின், அருள்மிகு பூரணை - புஷ்கலை என்னும் தேவியர் இருவருடன், அருள்மிகு வில்லியாண்டவர் உற்சவத் திருவுருவம், மற்றும் அவர்தம் யானை வாகனம்.



கோவை மாநகரில் நிகழ்ந்த அரசுப் பொருட்காட்சியில், அறநிலையத் துறையின் அரங்கை, அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள், குத்துவிளக்கு ஏற்றி வைக்குத் துவக்கி வைத்தல். (7-6-1981).




சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டப அடிக்கல் நாட்டு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ். அவர்களும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. யு. எஸ். வெங்கடேசன், எம்.எல்.சி., அறங்காவலர் குழுத்தலைவர் திரு. இர. வேலாயுதம், அறங்காவலர்கள் திரு. ப. நடராசன், திரு. செ. ஜோதி, திரு. இரா. மூர்த்தி, செயல் அலுவலர் திரு. மே.வே. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

உ

தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்குக!

**அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்**

திருவான்மியூர், சென்னை – 600 041.

## திருமணக்கூடம் அடிக்கல் நாட்டு விழா அழைப்பிதழ்

பேரன்புடையீர்!

திருவள்ளுவராண்டு 2012 வைகாசித் திங்கள் 10ம் நாள் (23-5-81) சனிக் கிழமை மாலை 6-00 மணிக்கு இத்திருக்கோயிலின் திருமணக்கூடம் அடிக்கல் நாட்டு விழா

**திரு. இர. வேலாயுதம்**

(தலைவர், அறங்காவலர் குழு, அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில்)

அவர்கள் தலைமையிலும்

திருமிகு **E. S. வெங்கடேசன்,** M.L.C.

(தலைவர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்) அவர்கள் முன்னிலையிலும்

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை, சுற்றுலா மற்றும் செய்தித்துறை அமைச்சர்

# திரு. இராம. வீரப்பன்

அவர்கள அடிக்கல் நாட்டவும்,

உயர்திரு **யு. சுப்ரமணியன்** [இ.ஆ.ப.]

ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அவர்கள்

பெயர்பலகை திறந்து வைக்கவும் இசைந்துள்ளார்கள். அன்பர்கள் கிளாக வருகை தந்திருந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

**இர. வேலாயுதம்** [அறங்காவலர் குழு தலைவர்]

**மே. வெ. திருநாவுக்கரசு** [செயல் அலுவலர்]

**ப. நடராசன். செ. ஜோதி. இரா. மூர்த்தி**

(அறங்காவலர்கள்)



சென்னை, திருவான்மியூர் அருள்மிகு மருந்தீசுவரர் திருக்கோயில் திருமண மண்டப அடிக்கல் நாட்டு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களும், ஆணையர் திரு. யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ். அவர்களும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு. யு. எஸ். வெங்கடேசன், எம்.எல்.சி., அறங்காவலர் குழுத்தலைவர் திரு. இர. வேலாயுதம், அறங்காவலர்கள் திரு. ப. நடராசன், திரு. செ. ஜோதி, திரு. இரா. மூர்த்தி, செயல் அலுவலர் திரு. மே.வே. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired
HR&CE Administration Dept

[முகப்பு]

சுசீந்திரம்
அருள்மிகு தாணுமாலயப் பெருமான்
திருக்கோயிலின் அழகிய தோற்றம்

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

மாலை : 23 || திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு — ஆனி [சூன் 1981]. || மணி : 9

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப் பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

பழநி மகளிர் கலைக்கல்லூரிக் கட்டிடத்தின் திறப்புவிழாச் சிறப்புரை
—மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்

தமிழ் மக்களின் வாழ்வியல்
—திரு. டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம்

நீர்வண்ணன்
—மகாவித்துவான் திரு. பி. ப. அண்ணங்க ராச்சார்ய சுவாமிகள்

நக்கீரரும் கச்சியப்பரும்
—ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

பிரதியங்கிராதேவி

வேண்டத்தக்கது அறிவோய் நீ
—திரு. டாக்டர் இரத்தினவேல்சுப்பிரமணியம்

திருமகள் மாலை
—கவிஞர் திரு. இராகவன்முத்து, பி.எஸ்ஸி.

ஏகம்பம்
—கவிஞர் திரு. அ. சச்சிதானந்தம், பி.எஸ்ஸி.

வைகுண்டநாதன்
—திரு. டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், எம்.ஏ., பிஎச்.டி.

திருமுருகாற்றுப்படை காட்டும் தமிழர் சமயம்
—திரு. டாக்டர் அ. ம. பரிமணம், எம்.ஏ., பிஎச்.டி.

இராமனை விரும்பிய இருமகளிர்
—பேராசிரியர் திரு. செ. வேங்கடராமச் செட்டியார்

சப்த மாதர்கள்

பெரியபுராணத்தில் தத்துவநெறி விளக்கம்
—ந.ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.

சிவபெருமான் திருப்பெயர்கள்

தேனில் விளைந்த தெள்ளமிழ்தம்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

பழநி மகளிர் கலைக் கல்லூரிக் கட்டிடத்தின்

# திறப்புவிழாச் சிறப்புரை


மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள்

அறநிலைய **அ**மைச்சர்


மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அருமைச் சகோதரர் அரங்கநாயகம் அவர்களே! அறநிலையத்துறை ஆணையர் அவர்களே! அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் திருமதி இராதா தியாகராஜன் அவர்களே! சட்டமன்ற உறுப்பினர் அருமை நண்பர் பழனிவேல் அவர்களே! பராசக்தி கல்லூரியினுடைய முதல்வர் அவர்களே! பெரியவர் இலட்சுமிபதிராஜ் அவர்களே! அறங்காவலர்குழு உறுப்பினர்களே! இந்த விழாவைச் சிறப்பிக்க வருகை தந்து இருக்கிற பெருமக்களே! பேராசிரியர்களே! தாய்மார்களே! மாணவ சகோதரிகளே!

அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் சார்பில் நடைபெற்று வருகின்ற மகளிர் கலைக் கல்லூரிக்காக, இருபது இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டு, அழகும் கலைச் சிறப்பும் கொண்ட, ஒரு கட்டிடத்தை உருவாக்கி, அதை மாண்புமிகு கல்வித்துறைஅமைச்சர் அவர்களைக் கொண்டு திறந்து வைக்கின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுகின்ற வாய்ப்பை, எனக்கு அளித்த அறங்காவலர் குழுத் தலைவர் அவர்களுக்கும், அறங்காவலர் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும், அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கல்லூரிக் கட்டிடம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த, சுமார் 36 ஏக்கர் நிலத்தை வழங்கிய, நம்முடைய அன்பிற்குரிய மணிநாயக்கர் என்கிற திரு. வெங்கட்ராமன் அவர்களை, எல்லோரும் வாழ்த்தி நன்றி கூறியிருக்கின்றார்கள். ஆனால் அறநிலையத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற முறையில், நான் நன்றி சொல்லத் தவறுவேனானால், நன்றியை மறந்த குற்றத்திற்கு ஆளாகிவிடுவேன் என்ற காரணத்தினால், நானும் அறநிலையத்துறையின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், தமிழ்நாட்டு மகளிர் சமுதாயத்தின் சார்பிலும், அவருக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இங்கே நம்முடைய அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் சார்பில், பல்வேறு நிறுவனங்கள் நடத்தப்பட்டு வருகின்றன என்றாலும், மகளிர்க்கான இந்தக் கலைக்கல்லூரி, ஒரு மிகப் பெரிய நிறுவனமாக நடைபெற்று வருவதை, இந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் அனைவரும் அறிந்து பாராட்டி வருகின்றனர். இக்கல்லூரிக்கு ஒரு சிறந்த கட்டிடம் வேண்டும் என்று எண்ணுகின்ற நேரத்தில், கல்லூரிகள் பொதுவாக நெருக்கடியும், சந்தடியும் மிகுந்த இடங்களில் அமையக் கூடாது என்றிருக்கின்ற தத்துவத்திற்கேற்ப, நல்ல அமைதியும் தூய சுற்றுப்புறச் சூழ்நிலையும், மாணவிகளுக்கு ஏற்ற வகையில் அமையும் வண்ணம், முப்பத்தாறு (36) ஏக்கர் நிலத்தைத் திரு. மணிநாயக்கர் அவர்கள் தாராளமாகத் தந்து உதவியிருக்கிறார்கள். அதிலும் மகளிர் கலைக்கல்லூரி கட்டவேண்டும் என்ற நிபந்தனையோடு வழங்கியிருக்கிறார்கள். கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே துவங்கப்பெற்ற இந்தக் கட்டிடம், இந்த ஆண்டுதான் முடிவுற்று இன்றைக்கு நாம் திறப்புவிழாச் செய்து மகிழ்கின்றோம். இந்த மகிழ்ச்சியில், இதற்கு ஏன் இவ்வளவு தாமதம் ஆகியிருக்கிறது என்பதற்குரிய காரணங்களையெல்லாம், முன்னர்ப் பேசியவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் தமக்கிருந்த எல்லாச் சந்தேகங்களையும் சொல்லிவிட்டு, அவற்றிற்கெல்லாம் இன்றைக்கு விளக்கம் கிடைத்துவிட்டது என்பதையும் பெரியவர் இலட்சுமிபதிராஜ் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இன்றைக்கு இந்தக் கட்டிடம் இங்கே வருவதற்குப் பெரியவர் இலட்சுமிபதிராஜ் அவர்கள் மிகவும் மனநிறைவோடு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் என்பது, நமக்கெல்லாம் பெரிதும் மகிழ்ச்சியைத் தந்திருக்கின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், நான் இந்தப் பழனி தேவஸ்தான சம்பந்தமான ஒரு நிகழ்ச்சிக்கு வந்திருந்தேன். அப்பொழுது இந்த இடத்தை வந்து பார்வையிட்டு, அரைகுறையாக அன்றைக்குக் கட்டப்பெற்றுக் கொண்டிருந்த இந்தக் கட்டிடத்தை, விரைவிலேயே கட்டி முடிக்கவேண்டும் என்கிற முடிவை அறிவித்தேன். அப்பொழுது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பழநிவேல் உள்பட, இந்தக் கட்டிடம் இங்கே வருவது அவ்வளவு உகந்ததாக இல்லை: நம்முடைய மாணவிகளுக்கு அவ்வளவு பாதுகாப்பு இருக்காது; இங்கு வந்த பிறகு அவர்கள் கஷ்டப்படுவார்கள் என்கிற உணர்வையெல்லாம், அன்றைக்கு அந்த

நிகழ்ச்சியிலே தெரிவித்தார்கள். நான் அதற்கான விளக்கத்தை அந்த விழாவிலேயே கொஞ்சம் விவரமாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. அதற்குப் பிறகு தான், நான் ஆணையரிடத்திலே சொல்லி, நீண்ட காலமாக முடிவுபெறாமலிருக்கிற இந்தக் கட்டிடத்தை விரைவிலேயே கட்டிமுடிக்க வேண்டும் என்பதற்கான ஆணைகளைப் பிறப்பித்து அதற்கான அனுமதிகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதன் பயனாக, பத்து ஆண்டுகாலமாகத் தடைபட்டுக் கொண்டிருந்த இந்தக் கட்டிடம், இன்றைக்கு ஓராண்டு காலத்திற்குள்ளே, ஓர் அற்புதமான எழில் மிக்க ஒரு கல்வி நிறுவனமாக வளர்ந்து காட்சி தருகின்ற மாட்சியைக் கண்டு, மகிழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இன்றைக்கு நம்முடைய நாட்டிலேபொதுவாகக் கல்வி நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாகப் பெண்களுக்கான கல்வி நிறுவனங்களுக்குரிய கட்டிடங்களுக்கு, அவைகள் ஊரிலேயே இருப்பதா? அல்லது வெளியிலே இருப்பதா? என்கிற விவாதத்தைக் கிளப்புகின்ற உணர்வு இருந்து வருகின்றது. இத்தகைய நிலை ஏதோ இந்தக் கல்வி நிறுவனங்களுக்கு மாத்திரம்தான் வருகிறது என்பதல்ல. தமிழ்நாட்டில் அல்லது இந்தியத் துணைக் கண்டத்தில், எந்தத் திட்டத்தை உருவாக்கினாலும், அதை எதிர்ப்பது என்பதுதான், இந்த நாட்டுமக்களுக்குப் பரம்பரை பரம்பரையாக இரத்தத்தில்ஊறிவளர்ந்து வருகின்ற உணர்வுபோலும்! சாதாரணமாக ஒரு பேருந்து நிலையத்தை, நகரத்திற்குள்ளே மிகுந்த நெருக்கடியாக இருக்கிறது, போக்குவரத்துக்கு வசதியாக இல்லை, மக்களுக்குத் தொல்லை தருகிறது, அதைக் கொஞ்சம் நல்ல இடத்திலே கொண்டுபோய்க் கட்டலாம் என்று ஆரம்பித்தால்கூட, அதற்கும் தடைவரும்.

அதைப்போலவே மருத்துவமனை வசதியாக இல்லை, இடம் போதவில்லை, நெருக்கடியாக இருக்கின்றது, நோயாளிகளின் தொகை பெருகிய காரணத்தாலே, அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும். மக்கள் தொகை பெருகிக்கொண்டு வருகின்றது, அதனால் நோயாளிகளும் பெருகிக் கொண்டு வருகின்றார்கள். 1947ஆம் ஆண்டு நாடு விடுதலை பெற்றபொழுது 34 கோடியாக இருந்த மக்கள் தொகையை, மேலும் 34 கோடியாக அதிகப்படுத்தியிருக்கின்றோம். அந்த அளவுக்கு மக்கள் தொகையைப் பெருக்குவதில் நாம் தீவிரம் காட்டிவருகிறோம். மக்கள் தொகை பெருகுகிறபொழுது பிணியாளர்களும் மிகுதியாகின்றனர். அதற்கு ஏற்ப ஒரு மருத்துவ மனையை ஒரு நல்ல இடத்திலே, சுகாதாரமுள்ள இடத்திலே, காற்றோட்டமுள்ள தகுந்த இடத்திலே கொண்டுபோய்க் கட்டவேண்டும் என்று ஆரம்பித்தால், அதற்கும் தடை. ஆகவே நம்முடைய நாட்டிலே மக்களுடைய பழக்க வழக்கங்கள் உணர்வுகள் எப்படி உள்ளன என்றால், அவர்கள் இருக்கின்ற இடத்தைச் சுற்றியே எல்லா வசதிகளும், அவர்களுக்கு வேண்டும் என்று எதிர்பார்க்கும் நிலையில் உள்ளது. இதன்படி எந்தவொரு திட்டத்தையும் எளிதில் நிறைவேற்ற முடியாது. ஆதலால் இத்தகைய மனப்பான்மைகள், நம்மிடையே மாறுதல் வேண்டும் என்று, நான் எல்லோரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த மகளிர் கலைக்கல்லூரிக் கட்டிடம் கட்டப்பெறாமல், ஒரு பத்து ஆண்டுகாலம், தடைபட்டு நின்றதற்குக் காரணம், அந்தக் காலத்திலே இதற்குத் திட்டம் போட்டவர்கள், அவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு போட்டிருப்பார்கள் என்பதுதான். அறநிலையத்துறையில் இது ஒன்றுதானா, போட்டது அப்படியே இருக்கிறது? இதைப்போல நூற்றுக்கணக்கான திட்டங்கள்! கல்யாண மண்டபத்திற்குக் கால் கோள்விழா நாட்டியதோடு இருக்கிறது. அங்கே மண்டபம் இல்லை. சில இடத்திலே சுவர்கள் மாத்திரம் எழும்பிக் குட்டிச்சுவராக நிற்கின்றன. மேலே ஒன்றும் இல்லை. அதையெல்லாம் இப்பொழுது நாங்கள் முடித்துக்கொண்டு வருகின்றோம். அப்படி அரைகுறை வேலையிலே ஆரம்பித்த திட்டம்தான் இந்தத் திட்டம்.

இன்றைக்கு இந்தக் கல்லூரியில் 340 மாணவிகள் பயில்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்தக் கல்லூரியில் நீங்கள் உடற்பயிற்சிக்கும் விளையாட்டிற்கும் முக்கிய இடத்தைத் தந்தாகவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு இங்கு எத்தனை இடமிருக்கிறது என்று தெரியவில்லை. உடற்பயிற்சிக்கு இக்கல்லூரியில் விளையாட்டு ஆசிரியைகள் இருக்கிறார்களா? என்றும் தெரியவில்லை. இந்தக் காலத்திலே பெண்களுக்குக் கராத்தே பயிற்சியே கற்றுக் கொடுக்கிறார்கள் பல இடங்களில். பெண்களை நீங்கள் விளையாட்டு வீரர்களாக, வீரம் உள்ளவர்களாக மாற்றுங்கள். சோவியத் ரஷ்யாவிலே 6 இலட்சம் விளையாட்டுத் திடல்கள் இருக்கின்றன என்று கணக்குத் தருகிறார்கள். அதனாலே தான், ஐந்து வயதிலிருந்தே பெண்கள் அங்கே விளையாட ஆரம்பிக்கிறார்கள். சோவியத் நாட்டில் ஆண்கள் பெண்களுக்குப் பாதுகாப்புத் தருவதில்லை. தேவைப்பட்டால், பெண்கள் தான் அங்கே ஆணுக்குப் பாதுகாப்பாக இருக்கிறார்கள். அந்த அளவுக்கு அங்கே பெண்மையினுடைய வீரம் வளர்க்கப்பட்டிருக்கின்றது. ஜப்பான் நாட்டிலே போய்ப் பாருங்கள். அங்கேயும் பெண்கள் துணிவோடும் வீரத்தோடும் விளங்குகின்றார்கள். நம்முடைய நாட்டிலும் நம்முடைய பெண்களும் அவ்வாறு பலதுறைகளிலும் முன்னேறிச் சிறப்புற்று வாழவேண்டும்.

மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்கள், ஓர் உண்மையைச் சொன்னார்கள். கல்வி என்பது ஏதோ வசதியிருக்கிறவர்கள் பெற்றுக்கொண்டு, அக்கல்வியைப் பெற்ற காரணத்தினாலே, சமுதாயத்தில் தாங்கள் உயர்ந்தவர்கள் என்று நினைத்துக்கொண்டு, மற்றவர்களை அடிமைப்படுத்துகிற சாதனமாகக் கல்வி இன்றைக்கு மாறிக்கொண்டு வருகின்றது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் இன்னொரு கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். கல்வித்துறை அமைச்சரும், பராசக்தி கல்லூரி முதல்வரும், பல கல்லூரி நிறுவனங்களை நடத்திக் கொண்டிருக்கின்ற டாக்டர் இராதா

தியாகராஜன் அவர்களும், இங்கே இருக்கின்றார்கள் என்ற காரணத்தினாலே, இங்குப் பெண் கல்வியைப் பற்றி, ஒரு கருத்தை உங்களிடையே பரிசீலனைக்கு வைக்கின்றேன். கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தொழிற் கல்வி வேண்டும் என்றார்கள். ஆணையர் அவர்கள் கலைக்கல்லூரி வேண்டும் என்று சொன்னார்கள். வேறு சிலர் வேறு கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆம், பெண்களுக்குக் கல்வி வேண்டும். பெண்களை அடுப்பங்கரையில் அடிமைகளாக நாம் வைத்திருக்கக் கூடாது. அடுப்பு ஊதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்று ஒரு காலத்திலே கேட்டார்கள். அதை மறுத்து நாம் பெண்கல்விக்காக வாதாடினோம். அடுப்பூதும் பெண்களுக்கும் படிப்பு வேண்டும் என்ற நிலை, இப்போது வந்திருக்கிறது.

பெண்களுக்குக் கல்வி மிகமிக இன்றியமையாதது. இங்கு 340 மாணவிகள் பயில்வதாகக் கணக்குத் தந்திருக்கிறீர்கள். இவர்களுடைய பெற்றோர்களிடத்தில் ஒரு கேள்வித்தாளைக் கொடுங்கள். இந்தப் பெண்களைக் கல்லூரிப் படிப்பு முடிந்த உடனே என்ன செய்யப்போகிறீர்கள்? என்று கேளுங்கள். இந்நேரம் பல பேருக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருப்பார்கள். இந்நிலையில் இவர்களுக்கு எதற்காகக் கல்லூரிப் படிப்பு? இன்றைக்கு வயதுவந்த பெண்கள்தான் கல்லூரிக்குள்ளே வருகிறார்கள். 10-ஆம் வகுப்பிலேயே தடைபோடவேண்டும் என்று நான் கருதிக் கொண்டிருக்கின்றேன். 10-ஆம் வகுப்பைத் தாண்டி, 10 பிளஸ் 2க்கு வருகிறார்களே, அங்கேயே ஒரு கேள்வித்தாளைக் கொடுங்கள். பத்தாம் வகுப்பு என்பது அடிப்படைக் கல்வி! ஆணானாலும், பெண்ணானாலும் கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டிய கல்வி. ஒருவன் தன்னை மனிதன் என்று சொல்லிக் கொள்ள வேண்டுமானால் அடிப்படைக் கல்வியைப் பெற்றாக வேண்டும்.

திருவள்ளுவர், ''நீ உன் முகத்திலே இருப்பது கண் என்று சொல்லவேண்டுமானால், நீ கற்றவனாக இருக்க வேண்டும்'' என்கிறார். அவ்வையார், ''சபையிலே நீ மரமாக இல்லை என்று சொல்லவேண்டுமேயானால், கொடுத்ததை நீ படிக்க வேண்டும்'' என்றார். ஆகவே ஆணோ பெண்ணோ அடிப்படைக் கல்வியைக் கற்று ஆகவேண்டும். 10ஆவது என்று வைத்துக்கொள்வோம். அதற்கு மேலேபோவது 10 பிளஸ் 2 என்று, நாம் இன்றைக்கு ஒரு அற்புதமான கல்வித்திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். அது தொழிற் கல்வியினுடைய அடிப்படையிலேயே அமைக்கும் திட்டம். 10வது படிப்பைத் தாண்டுகிற பொழுதே நம்முடைய நாட்டுப் பெண்கள், 15-16 வயதைத் தாண்டிவிடுகிறார்கள். அங்கே யாவது ஒரு கேள்வியைக் கேளுங்கள். அம்மா, நீ இதற்கு மேலே படிக்கப்போகிறாயா? படித்துவிட்டு என்ன செய்யப் போகிறாய்? என்ன தொழில் செய்யப் போகிறாய்? எந்தத் தொழிலில் உனக்கு அக்கறை? என்று மாணவியினிடத்திலே கேளுங்கள்.

இன்றைக்கு, ஒரு நாளைக்கு ஒரு கோடிக்கு மேல் அரசாங்கம் இந்தக் கல்வித்துறைக்குச் செலவு செய்கிறது. இது போதாது என்று, அறநிலையத் துறையில் உள்ளவர்களும், மற்றவர்களும் எல்லாம் சேர்ந்து செலவு செய்கின்றோம். ஆதலால் நம்முடைய பெண்கள் ஒரு லட்சியத்தோடு கல்விகற்க முன்வருதல் வேண்டும். இந்தச் சமுதாயத்திலே பயன்மிக்க ஒரு தொழிலைக் கற்றுக்கொண்டு வாழவேண்டும். அதன் மூலம் தாம்பெற்ற கல்வியை நாட்டுக்குப் பயன்படுத்தவேண்டும்.

நான் பல இடங்களில் காண்கிறேன். நேற்று முன்தினம்கூடச் சிதம்பரம் நந்தனார் பள்ளியிலே பார்த்தேன். ஆண்கள் 34 சதவிகிதம் தேறியிருக்கிறார்கள். பெண்கள் 42 சதவிகிதம் தேறியிருக்கிறார்கள். இதைத் தஞ்சை மாவட்டம் முத்துப் பேட்டையிலேயும், பார்த்தேன். அது அறநிலையத்துறையின் உயர்நிலைப் பள்ளி. அதுவும் பெண்கள் பள்ளிதான். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த பெண்கள் படிக்கிறார்கள். அங்கேயும் பெண்கள்தான், பெருமளவில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். படிக்கின்ற பெண்களுக்கு லட்சியம் வேண்டும். படிக்கவைக்கின்ற பெற்றோர்களுக்கும் லட்சியம் வேண்டும். நான் பராசக்தி கல்லூரிக்குப் போனபோது அங்கே பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். பல தொழில்களைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கே பெண்கள் நாற்காலிகள், மேசைகள் முதலியன செய்கின்றார்கள். பெண்கள் முயன்றால் இஞ்சினியராக வர முடியாதா? இன்றைக்குக் காவல்துறைக்கே நாம் பெண்களை நியமித்துக் கொண்டிருக்கின்றோம். ஆகவே பெண்கள் ஒரு குறிப்பிட்ட அளவு பொதுக்கல்வியைக் கற்றதற்குப் பிறகு, ஏதேனும் ஒரு நல்ல தொழிலைக் கற்றுக்கொண்டு, நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நன்கு பயன்படவேண்டும்.

நம்முடைய பெண்கள் ஏதோ கொஞ்சம் பி.ஏ., எம்.ஏ., படித்துவிட்டால், அடுப்பங்கரைக்குப் போய் வேலை செய்ய மறுக்கிறார்கள். தம்முடைய குடும்ப வேலைகளைச் செய்வதே கவுரவக் குறைவு என்று கருதுகிறார்கள். இது ஒரு தவறான மனப்பான்மை. இதனால் ஒரு வேலைக்காரனைத் தேடி அலையவேண்டி நேர்கிறது. வேலைக்காரர்கள் எளிதாகக் கிடைப்பதில்லை. கிடைத்தாலும், அவர்கள் சரிவர வேலை செய்வது இல்லை. அதனால் பலதொல்லைகள் விளைகின்றன. நம்மவர்கள் பலர் இங்கிருந்து அமெரிக்காவுக்குப் போகின்றார்கள். அங்கே ஆணும் பெண்ணும் சேர்ந்து வீட்டு வேலைகளைச் செய்கின்றார்கள். ஆனால் அதே ஆண்களும் பெண்களும், இங்கே வந்துவிட்டால், ஆளைக்கூப்பிடு; தண்ணீர் கொண்டு வரச்சொல்; இலையை எடுத்துவரச் சொல்; சாப்பாட்டைப் போடச்சொல் என்று, பிறரை வேலை வாங்குகிறார்கள். அமெரிக்காவில் இருந்தபொழுது தாங்களாகவே எல்லா வற்றையும் செய்து கொண்டவர்களுக்கு, இங்கே மட்டும் ஏன்? அத்தகைய உணர்வு வருவதில்லை. இத்தகைய தவறான மனப்பான்மைகள், சோம்பேறி இயல்புகள், போலிப் பகட்டான எண்ணங்கள் மாறியாக வேண்டும்.

இங்கேகூடப் பலபேர்கள் என்னிடத்தில் ''வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்'' என்று பெயர்வைத்துக்கொண்டு, சில விண்ணப்பங்களைக் கொண்டு வந்தார்கள். நான் கேட்டேன்-என்னப்பா! வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் என்கிறீர்களே? உங்களுக்குஎன்னவேலை தெரியும்? என்று கேட்டேன். அவர்கள் எங்களுக்கு ஒரு வேலையும் தெரியாது என்றார்கள். அப்படியானால் ''வேலை தெரியாத பட்டதாரிகள் சங்கம்'' என்று பெயர் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னேன். ஒரு வேலையும் தெரியாதவர்கள், பட்டம்பெற்றுப் பட்டதாரிகளாக இருந்து பயன் என்ன? பட்டம் எதுவுமே பெறாத சாதாரண ஒரு தொழிலாளி, தமிழ் நாட்டில் 30 ரூபா சம்பாதிக்கிறான்; இவனே அரேபியா நாட்டுக்குப் போனால், ஒரு நாளைக்கு 250 ரூபா சம்பளம் வாங்குகிறான். இன்றைக்கு ஒரு கொத்தனார் ஒரு நாளைக்கு 25, 30 ரூபா வீதம் கூலி வாங்குகிறார். ஆனால், பி.ஏ., எம்.ஏ., என்று பட்டத்தை நெற்றியிலே ஒட்டிக் கொண்டு, எந்தவேலையும் தெரியாமல், எந்த உடலுழைப்பையும் செய்யவிரும்பாமல், பலர்வேலைதேடிஅலைந்து வருந்திக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நாட்டில் நாம் எப்படி பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறோம்? என்று தெரியவில்லை. இது ஆண்களுடைய நிலை என்றால், பெண்களின் நிலை பற்றிச் சொல்லத் தேவையில்லை. பெண்களும் எல்லாத் துறைகளிலும் தொழில்களிலும் ஈடுபட்டுச் சமமாக உழைக்கத் துணிவோடு முன் வந்தாலன்றிப் பெண்களுக்கு உரிமை கிடைக்காது, விடுதலையும் வராது.

ஆகவேதான், பெண்கள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளை உணர்ந்து வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உரிமைபெற்றவர்களாக, அதே நேரத்தில் சிறந்த பண்பாடு உள்ளவர்களாகத் தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதற்குக் கல்லூரிக் கல்வி வழி வகுத்துத் தரவேண்டும். இங்கே எவ்வளவு பெரிய இடம் இருக்கிறது! அருமையான விளையாட்டுத் திடல்களை ஏற்படுத்துங்கள்! விளையாட வையுங்கள்! நல்ல பயிற்சிகளை அளியுங்கள்!

இந்தப் பழநி அருள்மிகு பழநியாண்டவர் கலைக்கல்லூரியிலே இருந்து, நல்ல விளையாட்டுக் குழுக்கள் அமைத்து, இந்த மாநிலத்திலே அவர்கள் முதல் பரிசு பெறுகின்ற அளவுக்கு நீங்கள் மாணவிகளைத் தயார் செய்யுங்கள். மற்றும் தற்காப்புக்கு என்று, இன்றைக்குப் பல பயிற்சிகளைப் பெண்களுக்குக் கற்றுத் தருகின்றார்கள். அவற்றையெல்லாம் கற்றுத் தருகின்ற முயற்சியிலே, பாட திட்டங்களை வகுத்து, அவற்றில் மாணவிகளை ஈடுபடுத்தவேண்டும்.

படிக்கின்ற பெண்கள், எந்த அளவிற்கு நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் பயன்படப் போகின்றார்கள் என்று சிந்தித்தல் வேண்டும். அத்தகைய ஒரு லட்சியத்தை மாணவிகள் பெற்றிருக்கவேண்டும். ஓய்வுநேரத்திலே உல்லாசமாக வருவதற்கே கல்லூரி என்கிற, ஒரு நிலையை மாற்றியாகவேண்டும். இல்லையேல் அவ்வாறு வருபவர்களிடத்தில், கட்டணம் வாங்கலாமா? என்பதுகூடப் பரிசீலித்து ஆக வேண்டியிருக்கிறது. பணம் செலுத்திப் படிக்கின்ற பள்ளிக்கூடங்கள்தான் உயர்வு என்றும், இலவசக் கல்வி கற்றுத் தருகின்ற பள்ளிக்கூடங்கள் தாழ்வு என்றும், ஒரு சிலர் கருதுகின்றனர். இத்தகைய உயர்வு தாழ்வு மனப்பான்மைகளும் மாறியாகவேண்டும். பெண் கல்வியைப் பற்றி, அதிலும் பெண்களுடைய மேற்படிப்பைப் பற்றித் தீவிரமாக ஆராய்தல் வேண்டும். ஒரு சிறந்த லட்சியத்தின் அடிப்படையில் பெண் கல்வியின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படவேண்டும். அதற்கு இந்தக் கல்லூரி வழிவகுத்துத்தர வேண்டும். இந்தக் கல்லூரியே கூட, ஒரு தொழில்நுட்பக் கல்லூரியாகவும், வளர்ந்து ஓங்குகின்ற ஒரு சிறந்த நிலைஏற்படவேண்டும். அம்முயற்சியில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் ஈடுபடவேண்டும் என்று, நான் பெரிதும் விரும்புகின்றேன்.

இந்த என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டு, அறநிலையத்துறையின் சார்பில், இத்தகைய நல்ல பணிகள் நடைபெறுதல் வேண்டும். இதற்கு வெறும் முயற்சி இருந்தால் மாத்திரம் போதாது, பணமிருந்தால் மாத்திரம் போதாது, இவற்றையெல்லாம் நிறைவேற்றுகின்ற ஆற்றல் படைத்தவர்கள் வேண்டும். திறமைபடைத்தவர்கள் வேண்டும்; அதையும் எப்படியும் நிறைவேற்றிவைக்கின்ற துணிவும் உறுதியும் மிக்க மனம் பெற்றவர்கள் வேண்டும். அத்தகையவர்கள் இன்று அறநிலையத்துறைக்கு வந்து கிடைத்திருக்கின்றார்கள். அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயிலின் அறங்காவலர் குழுவின் தலைவராக வந்து கிடைத்திருக்கின்ற டாக்டர் இராதா தியாகராஜன் அவர்களை, நான் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலே பாராட்டி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்களுடைய முயற்சியினால் இன்னும் மேலும் பல திட்டங்களை, இந்தப் பழநியிலே நாம் பெற இருக்கின்றோம். இந்தக் கோயில் சிறப்புப் பெற இருக்கிறது. ஆகவே நடைபெறுகிற எந்தத் திட்டங்களுக்கும், அறிவிக்கப்படுகின்ற எந்தத் திட்டங்களுக்கும் அவற்றிலே சங்கடங்கள் இருந்தால், அந்த சங்கடத்தைத் தீர்க்க வழி காணவேண்டுமே தவிர, எதையெடுத்தாலும் முட்டுக்கட்டை போடுவது என்கின்ற முயற்சியிலே இனிமேல் யாராவது ஈடுபட்டால், அவர்களை ஒதுக்கித் தள்ளிவிடவேண்டும் என்று கேட்டு, இப்படி ஒரு நல்ல நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததற்கு, நான் அறங்காவலர் குழுவினருக்கு நன்றிகூறி, அதே நேரத்தில் அறநிலையத்துறையின் சார்பிலே கட்டப்பட்ட இந்தக் கல்லூரிக் கட்டிடத்தைத் திறந்துவைக்க வந்த, அருமைச் சகோதரர் கல்வி அமைச்சர் அவர்களுக்கு, அறநிலையத்துறையின் சார்பிலே, நான் என்னுடைய நன்றியைக்கூறி விடைபெற்றுக் கொள்ளுகின்றேன். வணக்கம்.

***

# தமிழ் மக்களின் வாழ்வியல்

''முத்தமிழ்க் காவலர்'' — ''கலைமாமணி''
டாக்டர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திருச்சி.

கலை பலவகை. தமிழ் மக்களின் வாழ்வியல் ஒரு தனிக்கலை. கலையே வாழ்வாகவும், வாழ்வே கலையாகவும் கொண்டு வாழ்ந்து வந்தவர்கள், வாழ்ந்து வருபவர்கள் தமிழ்மக்கள். தமிழ்நாடு மிகத் தொன்மையானது. மக்கள் முதன்முதல் தோன்றிய லெமூரியாக் கண்டத்தின் வடபகுதியே தமிழகம். இன்றைய பரப்பளவு 50 ஆயிரம் சதுர மைல். மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 5 கோடி.

தமிழ் மொழி மிகப் பழைமையான மொழி. அது என்று பிறந்தது? அது என்று பிறந்தது என எவராலும் அறிய முடியாத ஒரு மொழி. உலகின் முதன் மொழி எனவும், உலக முதன் மொழிகள் நான்கில் ஒரு மொழி எனவும் கூறப் பெற்று வருகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கம் வைத்து வளர்த்த மொழி. தமிழகத்தில் அடிக்கடி கடற்கோள்கள் தோன்றின. அப்போது தமிழ்ச்சுவடிகள் பல அழிந்தன என்பது வரலாறு கண்ட உண்மை. அப்படி கடற்கோள்கள் தோன்றித் தமிழ்ச் சுவடிகளை அழித்த காலமே ஐயாயிரம் ஆண்டுகளா, ஏழாயிரம் ஆண்டுகளா, பதினோராயிரம் ஆண்டுகளா, என அறிய முடியாதபோது, அச்சுவடிகள் தோன்றிய காலத்தை, எவ்வாறு அறிந்து கூறுவது? கூறவேண்டுமானால் அது தோன்றிய காலம் மனித அறிவுக்கு எட்டாத காலமென்றே கூறியாகவேண்டும். என்றாலும் இலக்கணம் தோன்றி 3000 ஆண்டுகளுக்கு மேலாயின எனத் துணிந்து கூறலாம்.

தமிழ் மக்கள் மிகப் பழங்குடியினர். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்த குடியினர் எனத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. எங்கிருந்தும் குடியேறி வராமல், எந்த மொழியும் கலந்து பேசாமல், தம் நாட்டிலிருந்து தம் மொழியைப்பேசி, தம் வழியில் வாழ்பவர் தமிழர். அளவுக்கு மீறிய பொறுமையையும், அளவுக்கு மீறிய வீரத்தையும் அன்றுங் கொண்டிருந்தனர். இன்றுங் கொண்டுள்ளனர். பொய் சொல்லுதல் புலாலுண்ணுதல் கள்ளைக் குடித்தல், களவு செய்தல், சூது விரும்புதல் ஆகியவற்றை வெறுப்பது மட்டுமல்ல, அவற்றைக் கொலைப் பாவத்திலுங் கொடிய ஐம்பெருங் பாவங்கள் என வகுத்தும் ஒதுக்கினர். ''ஆய கலைகள் 64'' எனக் கண்டனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கது கட்டடக்கலை, சிற்பக்கலை, மருத்துவக் கலை, காவியக்கலை, ஓவியக்கலை, நாட்டியக் கலை, இசைக்கலை என்னும் ஏழுமாம். இவையனைத்தும் தமிழ் மக்களின் வாழ்வியலோடு ஒன்றி ஊறிவிட்டது.

தமிழர் வாழ்வியல் என்பதே தமிழர் நாகரிகமாகும். தமிழர் நாகரிகம் காவிரிக்கரையிலிருந்து தோன்றியது. அது கங்கைக்கரை நாகரிகத்திலும் சிறந்தது என்பது வரலாற்றுப் பேராசிரியர்களின் முடிவு. அவர் பண்புகளே ''பண்பாடு''என உயர்ந்து தமிழ்ப்பண்பாடு, தமிழரின் பண்பாடு, தமிழகப் பண்பாடு என விரிந்தது.

தென்னன், தென்னவன், என்பன பாண்டிய மன்னனின் பெயர்கள். ஒருமொழி வைத்துலகாண்டவன் என்று ஒரு தமிழ் மன்னனைக் கூறுவதுண்டு. பாரதப் போரில் இரு சாராருக்கும் சோறு வழங்கிய உதியன் என்பது ஒரு சேர மன்னனின் பெயர். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் மூவருமே இமயமலையில் தங்களின் கொடிச் சின்னங்களைப் பொறித்து ஆட்சி செய்து வந்திருக்கின்றனர். இந்தியா முழுதும் அசோகருடைய கொடி பறந்து கொண்டிருந்த போது, தமிழகத்தில் தமிழ் மன்னர்களின் கொடியே பறந்து கொண்டிருந்தது.

உலகம் முழுவதும் வெற்றி பெற்ற அலக்சாண்டரின் படைகூடக் காவிரிக் கரையைக் கடக்கத் துணிந்து வரவில்லை. வாழ்வியலின் பெருமை உலகில் இரு நாடுகளுக்கே உண்டு. ஒன்று அபிசீனியா, அஃது ஓராயிரம் ஆண்டு தொடர்ந்து ஒரே ஆட்சியில் இருந்தது. மற்றொன்று தமிழகம். இஃது ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஒரே ஆட்சியிலிருந்தது.

தமிழ் மன்னர்கள், உள்நாட்டை மட்டும் ஆண்டு வாழ்ந்தவர்களல்லர். கங்கையை, கடாரத்தை, பர்மாவை, மலாயாவை, சிங்கப்பூரை, சாவாவை, இலங்கையை ஆண்டு வந்தவர்கள். தமிழ் மொழியால் நாடாள முடியுமா என்பது கேள்வியே அன்று. ஏனெனில் அது நாடாண்ட மொழி. உள்நாட்டை மட்டுமன்று; வெளிநாடுகளையும் ஆண்ட ஒரு வல்லரசு மொழி என நன்கு தெரிகிறது. அந்நாடுகளில் தமிழ்மன்னர்களின் காசுகள் இன்றும் கிடைக்கின்றன. தமிழகத்தின் சிற்பக்கலைகள் அங்கு உயிரோடு காணப்படுகின்றன. அங்குள்ள கல்வெட்டுகளும், புதைபொருள்களும் இவ்வரலாற்றைக் கூறிக்கொண்டிருக்கின்றன. அக்காலம் தமிழ் மக்களின் வாழ்வியல் மிக உச்ச நிலையில் இருந்த காலமாகும்.

குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம் என நிலத்தை ஐந்தாகவும்-கோடை, கொண்டல், வாடை, தென்றல் எனக் காற்றை நான்காகவும்-இயல், இசை, நாடகம் என மொழியை மூன்றாகவும்-அகம், புறம் என இலக்கணத்தை இரண்டாகவும்- ஒழுக்கத்தை

ஒன்றாகவும் கண்டவர் தமிழர்! இவ்வாறுகண்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்னும் இவற்றில் மாறுதல் காணப்பெற வில்லை. ஐந்து நிலங்களுக்கும், மக்கள், மரம், பூ, விலங்கு, பறவை, உணவு, பண், பறை முதலியவைகளை ஆய்ந்து கண்டு, அவற்றைத் தொகைப்படுத்தி, வகைப்படுத்தி, பெயர்ப்படுத்தி, செயல்படுத்தி வாழ்ந்து வந்த தமிழர்களின் வாழ்வியலை எண்ணும்போது, நம் உள்ளமெல்லாம் மகிழ்வடைகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, தமிழ் மக்கள் கடல் வாணிகஞ்செய்து வாழ்ந்து வந்தனர். கிழக்கே சாவகமும், தெற்கே சிங்களமும், மேற்கே எகிப்து, பாபிலோனியா போன்ற நாடுகளும், தமிழகக் கடல் வணிகத்தினாற் பயன்பெற்றவை. முதன்முதலில் கடலில் கட்டுமரத்தைக் கட்டி விட்டவன் தமிழன். அதனாலேயே அவன் அதற்குக் 'கட்டுமரம்' என்று வைத்தபெயர் இன்று உலக முழுவதும், ''கட்டமரான்'' ( catamaran ) என்ற பெயரில் வழங்கப்பெற்று வருகிறது. நம் தமிழகத்திலிருந்து பொன்னும், மணியும், துணியும், அகிலும், சந்தனமும், தோகையும், அரிசியும், மிளகும் கடல் வாணிகத்தின் மூலம் வெளிநாடுகளுக்குப் போனவைகளிற் குறிப்பிடத் தக்கவை.

தமிழ்ப்புலவர் பெருமக்கள், தாங்கள் எழுதும் இலக்கியங்களிலெல்லாம் முதற்பாட்டில் முதல் வரியில் உலகத்தை வைத்தே எழுதி வருகின்றனர். 'உலகெலாம்' என்று தொடங்குவது பெரியபுராணம். 'உலகம் யாவையும்' என்று தொடங்குவது கம்பராமாயணம். 'உலகம் உவப்ப' என்று தொடங்குவது திருமுருகாற்றுப்படை. 'மலர்தலை உலகத்து' என்று தொடங்குவது நம்பி அகப்பொருள். 'ஆதிபகவன் முதற்றே உலகு' எனத் தொடங்குவது திருக்குறள். ''உலகத்தீரே, உலகத்தீரே'' எனத் தொடங்குவது கபிலர் அகவல். இந்தப் பரம்பரையில் தோன்றிய திரு.வி.க. அவர்களும், தமது ''படுக்கைப் பிதற்றல்'' என்னும் நூலில் முதலடியை 'உலகை நோக்குமின், உலகை நோக்குமின்' எனத் தொடங்கியிருக்கிறார். இது தமிழ் மக்களின் வாழ்வின் ஒரு பெரு நோக்கைக் காட்டுகிறது.

இவ்வுலகிலுள்ள ஊர்களெல்லாம் 'என் னூர், எல்லோரும் என் உறவினர் என்ற பொருளில் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்பதும், மதங்கள்தோறும் கடவுள் பலர் இல்லை, மக்கள் பிறவியில் உயர்வு தாழ்வுகளில்லை என்ற பொருளில் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்பதும், தமிழ்மக்கள் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுவதாகும்.

மிளகு, சீரகம், கடுகு, வெந்தயம், பூண்டு மஞ்சள் முதலிய கடைச்சரக்குகளெல்லாம் மருந்து. காய்கறிகள் அனைத்தும் மருந்து. கீரை வகைகள் யாவும் மருந்து. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் அனைத்தும் மருந்து, ஆகவே, உணவுப் பொருள்களையே மருந்தாகவும், மருந்துப் பொருள்களையே உணவாகவும் கண்டு, உண்டு வாழ்பவர்கள் தமிழ் மக்கள். இது சித்த மருத்துவம் எனப்பெறும். இது தமிழகத்தில் செடி, கொடிகள் தோன்றியகாலத்தில் தோன்றிய ஒன்று. சித்த மருத்துவத்தில் ஒரு பெரும் பகுதி ''சாகாக்கலை'' என்பது. அது ''பெற்ற உடம்பு சாகடிப்பதற்கல்ல'' எனக் கூறுவது.

தமிழர்தம் வாழ்வியலில் தலைசிறந்தது ஒழுக்கம். உலகம் என்பது உயர்ந்தோரை மட்டுமே குறிக்கும். உயர்ந்தோர் என்பவர் ஒழுக்கத்திற் சிறந்தோர் என்பது, தமிழரின் பண்பு. அறத்தின் வழிநின்று, பொருளைத் தேடி, இன்பத்தைப் பெறு என்பது, தமிழகப் பண்பு. மானத்தை இழப்பதா, உயிரை இழப்பதா, என்ற ஒருநிலை வந்துவிட்டால் '' உயிரை இழந்தேனும் மானத்தைக் காப்பாற்று'' என்பது தமிழர் நெறி. ''எல்லாம் தலைவிதி எனச் சும்மா இராதே, முயற்சிசெய், வெற்றி பெறுவாய்'' என்பது, தமிழரின் திட்டம்.

''பிச்சை எடுப்பது இழிவு எனினும், இரப்பவர்க்கு இல்லையென்பதோ, அதைவிடஇழிவு என்பது புறநானூறு காட்டும் புதுமை. குற்றமற்ற ஒருவனுக்குக் கொலைத் தண்டனை கொடுத்தவன் மன்னனாக இருப்பினும் அவன் பழி பரவுமுன்னே உயிர் போக்கிக் கொள்வான்' என்பது சிலம்புச் செல்வத்தின் ஒலி. ''தீமை செய்தவனுக்குச் சமயம் பார்த்து ஒரு நன்மை செய்துவிடு. அதைவிட அவனுக்குக் கடுந்தண்டனை வேறில்லை'' என்பது குறள்காட்டும் நெறி. தமிழ் மன்னர்கள் தங்களைவிடத் தமிழ்ப் புலவர்கள் உயர்ந்தவர் எனக் கருதி வாழ்ந்தவர். சில மன்னர்கள் புலவர்களாகவே வாழ்ந்திருக்கின்றனர். சில மன்னர்கள் தம்மைப்பாடிய புலவர்க்குப் ''பொன்னும், மணியும், புகழ்ந்து கொடுத்தனர்'' என்பதும், ''மலையும் நிலமும் மகிழ்ந்து கொடுத்தனர்'' என்பதும் பத்துப் பாட்டு வரலாறு. தமிழுக்குத் தலைகொடுத்தான் என்பது குமணன் வரலாறு. நந்திக் கலம்பகம் கேட்டுத் தமிழுக்கு உயிர்கொடுத்தான் என்பது நந்திவர்மன் வரலாறு. இதனால் தமிழ் மன்னர்களின் வாழ்வியல் தமிழோடு ஒன்றியது என நன்கறியலாம்.

## தமிழ் மக்களின் காதல் !

ஒருவரை ஒருவர் கண்டு, காதலித்து, பிறகே மணவாழ்க்கையில் ஈடுபடுவது என்பது பண்டைத் தமிழகத்தில் வாழ்வியல். தன் மகளொருத்தி காதலனுடன் சென்று விட்டதைக் கண்டு மனம் புழுங்கிய தாய் அவளைத் தேடிப் போகிறாள். அதே வழியில் வந்துகொண்டிருந்த காதலர் இருவரைக் கண்டு ''என் மகள் ஒருவனோடு இவ்வழியே செல்லக் கண்டதுண்டோ?'' என வினவுகிறாள். அதற்கு அவன் ''ஆம் திரண்டதோளும் பரந்த மார்பும், உயர்ந்த நெற்றியும், அகன்ற கண்களும் உள்ள காளையொருவன் செல்லக் கண்டேன்'' எனக் கூறி ''அயலே'' எனத் தன் காதலியை நோக்க, அவள் கூறினாள். ''ஆம், கற்பினுக்கணிகலமாகிய நற்குணங்கள் அனைத்தையும் கொண்ட கன்னியொருத்தி உடன் செல்லக் கண்டேன்'' என. ஒருத்தியைக் காதலித்தவன் மற்றொருத்தியை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை என்பதையும், ஒருவனைக் காதலித்தவள் மற்றொருவனைக் கண்ணாலும் காண்பதில்லையென்பதையும் இப்பழந்தமிழ்க் காட்சி நமக்குக் காட்

டிக் கொண்டிருக்கிறது. எப்படி-தமிழகத்தின் காதல்!

தன் மகளைத் தேடியலையும் தாய்க்கு மற்றொருவன் கூறும் ஆறுதலைக் கேளுங்கள். அம்மா! வீணாகத் தேடியலைந்து வருந்தாதீர்கள். அமைதியாகவிருங்கள். அவள் சில நாட்களில் தானாக வந்து சேர்வாள். அவள் நீ பெற்று வளர்த்த மகள்தான். எனினும் அவள் உன்னிடமே இருந்தால் அவளுக்குத்தான்என்ன பயன்? உனக்குத்தான் என்ன பெருமை? குளத்திலே பிறந்த தாமரை மலர், குளத்திலேயே கிடந்து அழுகி அழியாமல் அதைவிட்டு வெளியேறி இறைவனது திருமுடியைச் சேரும்போது தான் இறைவனுக்கும் அழகு, தாமரைக்கும் சிறப்பு. காட்டிலே பிறந்த சந்தனம் அதை விட்டு வெளியேறி மக்களின் மார்பை அடையும் போதுதான் சிறப்படைகிறது. மக்களும் மணம் பெறுகின்றனர். கடலிலே பிறந்த முத்து கடலிலியே ஆழ்ந்து கிடப்பதால் கடலுக்குத்தான் என்னசிறப்பு? முத்துக்குத்தான்என்னபெருமை? அது கடலிலிருந்து வெளியேறி மன்னர்களின் மார்பையடையும்போதுதான் மன்னனும் பெருமையடைகிறான். முத்தும் சிறப்படைகிறது'' என்பதே. எப்படி-தமிழ் மக்களின் காதல்.

## தமிழ் மொழியின் காதல்!

''முல்லை மலர்ந்தும் தங்கள் காதலன் ஏன் வரவில்லை''-தோழியின் கேள்வி. தலைவியின் விடை-''அதைத்தான் எண்ணிக்கொண்டிருக்கிறேன்.'' ''ஒருகால் வழியில் கள்வர்கள்...?'' ''போடி என் காதலனை எதிர்த்த எவருமே இதுவரை உயிர் பிழைத்ததில்லை''. பின் ஏன் இன்னும் வரவில்லை?''-''அதுதான் தெரியவில்லை''. ''ஒருகால் காட்டில் வனவிலங்குகள் ...?'' ''போடி பைத்தியக்காரி, என் காதலன் ஏவாமலேயே அவன் கையிலுள்ள அம்புகள் அவற்றைக் கொன்றுவிடும்''. ''அப்படியா? பின் ஏன் வரவில்லை?''. ''அதுதான் தெரியவில்லை''...''ஏனம்மா ஒருகால் சென்றவிடத்தில் வேறெந்தப் பெண்ணையாவது கண்டு அவளழகில் மயங்கி....'' ''போடி, என் காதலனுடைய நெஞ்சத்தில் என்னைத் தவிர வேறு எவருக்கும் இடமில்லை''. ''அப்படியானால், பின் ஏன் வரவில்லை?'' ''அதுதான் தெரியவில்லை''. ''ஏனம்மா, தங்கள் காதலர் சென்றது மதுரைக்குத்தானே?'' ''ஆமாம்''. ''அங்குச் சங்கம் இருக்குமோ?'' ''ஆமாம், ஆமாம்''. ''சங்கத்தில் தமிழ்ச் சுவடிகள் இருக்குமே''. ''ஆமாம், ஆமாம், ஆமாம்''. ''ஒருகால் அவைகளைப் படித்துக் கொண்டிருப்பாரோ?'' ''ஆமாடி'' ''ஆமாடி'', அப்படித்தானடியிருக்கும். ஐயோ! ஒண்தீந்தமிழ்த் துறைவாய்ப்புகுந்தனையோ! பின் எப்படி என் நினைவு வரும்? எப்படித் திரும்ப முடியும்? பின் என்கதி? ஐயோ, ஐயோ! என் வாழ்வு என்னாவது?'' என அழுது புலம்பத் தொடங்கிவிட்டாள். எப்படி-தமிழ் மொழியின் காதல்.

## தமிழகத்தில் கற்பியல்!

உலகின் பல பகுதிகளிலும் கற்பு விரும்பப்பெறுகிறது. சில நாடுகளில் கற்பு கணவன் மனைவி ஒற்றுமைக்காக என்றும், சில நாடுகளில் கற்பு உடல் நலத்திற்காக என்றும், சில நாடுகளில் கற்பு குடும்ப நலனைக் கருதி என்றும், சில நாடுகளில் கற்பு சமூக நலனுக்காக என்றும் வற்புறுத்தப்பெறுகிறது. ஆனால், தமிழகத்தில் அவைகளுக்காக மட்டுமல்ல. ''கற்பு வணக்கத்திற்கு உரியது'' எனப் போற்றப்பட்டு வருகிறது. ''கற்புடைய பெண்ணை விடப் பெருமையுடைய பொருள் இவ்வுலகத்தில் எதுவுமேயில்லை'' என்பது வள்ளுவரது முடிவு.

தமிழரது வாழ்வியலில் கற்பு பெண்ணுக்கு மட்டும் உரிய ஒன்றன்று. ஆணுக்கும் வற்புறுத்தப்பெற்று வருவது. ''ஆண் மகனே! இதோ பெண்மக்களைப் பார்! அவர்கள் எப்படித் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளுகிறார்களோ அப்படி நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்ளாவிடில் உனக்கு ஏது பெருமை!'' என்ற பொருளில் ''ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு'' எனக் குறள் கூறுவது தமிழர் நெறி.

தமிழரின் வீரம் ஒரு தனி வீரம், வந்த தூதர் வாய்த்துடுக்காகப் பேசினும் அவரைத் துன்புறுத்தார். போருக்கு அஞ்சார். போர் நிகழும் காலத்தையும் இடத்தையும் முன்னதாக அறிவித்து அந்த இடத்தைவிட்டுப் பெண்டிரும் பிள்ளைகளும், பிணியாளரும், பெரியோரும் விலகிப்போய்விட வேண்டுமென முரசறைந்து அறிவிப்பர். போர்ப்பறை கேட்டதும் புயம் வீங்கி மகிழ்வர். போரில் புறங்காட்டாது சண்டை செய்வர். முறத்தை உயர்த்திப் புலியைத் துரத்தும் பெண்கள் போர்க்காலங்களில் தமது நாட்டைக் காக்கக் கணவனை, தம்பியை மக்களை மகிழ்வோடு பொட்டிட்டுப் போருக்கு அனுப்புவர். பிணிவாய்ப்பட்டு அரண்மனையில் இறந்த மன்னனது நெஞ்சிலும் மாற்றானது வேலைப்பாய்ச்சி அடக்கம் செய்வதும், மார்பில் காயம்படாமல் முதுகில் புண்பட்டதற்காக வருந்தி வெட்கி, உணவும் நீரும் அருந்தாமல் வடக்கிருந்து உயிர்விடுவதும் தமிழ் மக்களின் வீரம்.

## தமிழகத்தின் காதல்!

நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல்லோடு இன்னா எவ்வுயிர்க்கும் செய்யாமை, கல்வியொடு ஒப்புரவாற்றலறிதல், அறிவுடைமை, நல்லினத்தாரோடு நட்டல் ஆகிய இவைகள் தமிழர்களின் அறநெறி.

இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமிழர் தனித்து உண்ணார். பாவச் செயல்களைச் செய்வதற்குப் பெரிதும் அஞ்சுவர். புகழ் எனில் உயிருங் கொடுப்பர். பழி எனில் உலகுடன் பெறினுங் கொள்ளார். தமக்கென முயலார், பிறர்க்கென முயலுவார் என்பது தமிழரின் பண்பு.

இதுகாறுங் கூறியவாற்றான் தமிழ் மக்களின் உயர்ந்த வாழ்வியலை ஒருவாறு நன்கறியலாம். இவை அனைத்தும் இன்றும் அழியாது நிலைத்து நிற்பவை. இவற்றைப் போற்றிப் பாதுகாத்துப் பின்பற்றி நடந்து பயனடைய வேண்டியது தமிழக மக்களின் கடமை மட்டுமன்று; உலக மக்களின் கடமையுமாகும். வாழ்க தமிழகம்! வளர்க தமிழ்மொழி !!

# "நீர்வண்ணன்"

'மகாவித்துவான்'—'மகாமகிமோபாத்யாய'

திரு. பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

எம்பெருமான் திருநீர்மலையிலே நீர்வண்ணன் என்றும், கச்சியூரகத்தில் 'நீரகத்தான்' என்றும் திரு நாமம் பெற்றிருப்பது பிரசித்தம். நீர்க்கும் எம்பெரு மானுக்கும் ஒப்புமைத் தன்மை பற்பல வகைகளில் உண்டு.

(1) நீர் பள்ளத்தில்தான் பாயும், மேட்டில் ஏறுவது அருமை. எம்பெருமானும் சாதி முதலியவற் றால் குறைந்தாரிடத்தே எளிதாகச் செல்லுவன்; உயர்ந்தோம் என்று மார்பு நெறித்திருப்பாரிடத்தே செல்ல விரும்பான். பாண்டவர்களுக்காகத் தூது எழுந்தருளும்போது, ஞானத்தால் சிறந்தோம் என்றி ருக்கும் பீஷ்மாச்சாரியரையும், குலத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரோணாச்சாரியரையும், செல்வத்தால் சிறந்தோம் என்றிருக்கும் துரியோதனனையும், ஒரு பொருளாக மதிக்காமல், இவையெல்லாவற்றாலும் தாழ்ந்தவராகத் தம்மை நினைத்திருந்த விதுரருடைய திருமாளிகையிலே தானாகவே சென்று ''முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாதிபப் பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ? கருதி நீ யெய்தற்கு, என்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடிலென்றான்'' என்று அவர் உள் குழையுமாறு இருந்து அமுதுசெய்தருளினான் கண்ண பிரான். ஆகவே, பள்ளத்தே ஓடிப் பெருங்குழியிலே தங்கும் இயல்பு நீருக்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும்.

(2) நீர் இல்லாமல் ஒரு காரியமும் ஆகாது. அப்படியே எம்பெருமானின்றி ஒரு காரியமும் ஆகாது. ''உலோகோ பிந்நருசி'' என்கிறபடியே ஒருவன் விரும்பினதை மற்றொருவன் விரும்பாதபடி உலகம் வெவ்வேறு விருப்பத்தையுடையதாயினும், எல்லோ ரும் நீரை விரும்பியேயாக வேண்டும். அதுபோலவே எம்பெருமானையும்.

(3) நீர்க்குக் குளிர்ச்சி இயற்கை : சூடு வந்தேறி. எம்பெருமானுக்கும் தண்ணளி இயற்கை யாய்ச் சீற்றம் வந்தேறியாயிருக்கும். ''நீரிலே நெருப்புக் கிளருமாபோல, குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்'' என்ற முமுட்சுப் படித் திவ்விய சூக்தி காண்க.

(4) நீர் சுட்டாலும் அதை ஆற்றுவதற்கு நீரே வேணும்; எம்பெருமான் சீறினாலும் அவன்றானே தெளிவு பெறவேணும். ''தருதுயரந் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை'' என்றார் குலசேகரப் பெருமாள்.

(5) நீர் நம் விருப்பப்படி தேக்கிவைக்கவும் ஓடவிடவும் உரியதாயிருக்கும். எம்பெருமான் படியும் அப்படியே. ஆண்டாள் தான் சூடிக் களைந்த மாலை யிலே விலங்கிட்டு வைத்து அநுபவிக்க நின்றான் எம்பெருமான். பாண்டவர்கட்காகக் கழுத்திலே ஓலை கட்டித் தூது போகவிடப்பெற்றான். ஆண்டாள் தேக்கி வைத்தனள். பாண்டவர்கள் ஓடவிட்டனர்.

(6) நீரானது மற்ற பண்டங்களைச் சமைப்ப தற்குக் கருவியாயிருக்கும்; தனிப்படத் தானே குடிக் கத் தக்கதுமாயிருதகும். எம்பெருமானுக்கும் உபா யத்துவம் உபேயத்துவம் என்ற இரண்டு ஆகாரங் களுண்டே. எம்பெருமானைக் கொண்டு வேறு பலன் களைப் பெற விரும்புவாரும், எம்பெருமான் தன் னையே சுவயம் புருஷார்த்தமாகக் கொள்வாரும் உள்ளமை காண்க.

(7) சோறு முதலானவை தமக்குப் பிரதிநிதி களைப் பொறுக்கும்: அதாவது, காய் கனி கிழங்கு வேர் பால் முதலியவற்றால் தேகதாரணம் பண்ண லாம்; பண்ணுவாருமுளர். நீரானது அப்படி பிரதி நிதி ஒன்றையும் பொறுக்கமாட்டாது; நீர்க்கு நீரே வேணும். அப்படியே எம்பெருமானுக்கும் பிரதிநிதி கிடையாது: குணாநுஸந்தாநத்தாலும் போது போக்க வரிது: ''ஒருநாள் காண வாராயே'' ''அடியேன் தொழவந்தருளே'' என்று பிரார்த்தித்துப் பெற்றே தீர வேண்டும். உணவுப் பொருள்களில் அரிசிக்குப் பதிலாகக் கோதுமையோ பாலோ மற்றும் எந்தப் பொருளோ அவரவர்களின் சுவைக்கு ஏற்றபடி வைத்துக்கொள்ளப்படுவதுண்டு. ஆனாலும் நீருக்குப் பதிலாக வேறெதுவும் வைத்துக் கொள்ளப்படுவ தில்லை: நீர் ஒருவராலும் விடமுடியாதது. அதுபோல கர்மஞானபக்தி பிரபத்தி முதலியவற்றில் எதைவிட்டு எதைப் பற்றினாலும் எம்பெருமான் ஒருபடியாலும் விடத்தகாதவன் என்றதாயிற்று. இது மிக நுட்ப மான தத்துவப்பொருள்.

(8) சோறு உண்ணும்போது நீர் இல்லாமல் முடியாது: அப்படி நீர் வேறொன்றை வேண்டா நிற்பதன்று. எம்பெருமான்படியும் அப்படியே. உபாயாந்தரங்களுக்கு எம்பெருமான் வேணும்; எம் பெருமான் இதர நிரபேட்சன். அதாவது எதையும் எதிர்பாராதவன். ''உன்னாலல்லால் யாவராலும் ஒன்றுங் குறைவேண்டேன்'' என்றாரே நம்மாழ்வார்.

(9) கொள்ளும் பாத்திரங்களின் தாரதம்மிய மேயன்றி நீர் தான் குறைய நில்லாது; எங்கும் நிரம்பவல்லது; எம்பெருமானும் ''வேண்டிற்றெல்லாந் தருங்கோதில் வள்ளல்'' என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி எங்கும் நிரப்பவல்லவன். கொள்வார் குறையே யத்தனை; ஐசுவரியமே போதும் கைவல்யமே போதும் கை என்பாருமாகக் குறையக் கொள்வா ருடையே குற்றமே. அற்பமான ஐசுவரியம் உத்தம மான முத்தியளவும் எதையும் அளித்து நிரப்பவல்லவன் இறைவன்.

(10) நீர் ஐவகைப்பட்டிருத்தல்போல எம்பெரு மானும் ஐவகைப்பட்டிருப்பவன்: எங்ஙனேயென்னில்;

(1) பூமிக்குள்ளே பதிந்து கிடக்கின்ற நீர். (2) அண்டத்துக்குப் புறத்தேயுள்ள நீர். (3) பாற்கடல் நீர். (4) பெருக்காற்று நீர். (5) தடாகங்களில் தேங்கும் நீர்— என நீர் ஐவகைப்படும். விடாய்த்தவனுக்கு வேறோரிடம் தேடிப்போக வேண்டாதபடி நிற்கிற விடத்திலேயே உண்டாக்கியிருக்கச் செய்தேயும் கொட்டும் குந்தாலியுங் கொண்டு கல்லினால் அல்லது குடிக்கக் கிடையாத பூமிக்குள் பதிந்த நீர் போலே யாயிற்று அந்தர்யாமித்துவம்; கண்டு பற்ற வேணுமென்று ஆசைப்பட்டவனுக்கு இருதயத்திலே யிருக்கச் செய்தேயும், கண்ணுக்குப் புலப்படாமல் அட்டாங்க யோகமாகிற முயற்சியாலே, காணவேண்டும்படியான தன்றோ இது. விடாய்த்தவனுக்கு, அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கிற ஆவரண நீர் போலேயாயிற்று — கண்டு பற்றவேணுமென்றிருக்கிறவனுக்கு லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்துவம். (3) அப்படி அதிதூரத்திலுமன்றியே அண்டத்துக்கு உட்பட்டிருக்கச் செய்தேயும் விடாய்த்தவனுக்குக் கிடைக்க அரிதான பாற்கடல் போலேயாயிற்று, சென்று காண அரிதாம்படி யிருக்கிற வியூகம். அருகேயிருந்தும் தற்காலத்திலிருந்தவர்களுக்கு மட்டும் உபயோக யோக்யமாய்ப் பிற்பட்டவனுக்கு அரிதான பெருக்காறு போலேயாயிற்று, இராமகிருஷ்ண அவதாரங்களான விபவம்; பூமியிலே அவதரித்துச் சஞ்சரித்தும், தற்காலத்திலிருந்தவர்களுக்கே அடையத்தக்கதாய்ப் பிற்காலத்தில் உள்ளவர்களுக்குக் கிட்டாதபடியாய் இருப்பதன்றோ இது. விடாய்த்தவனுக்கு விடாய் தீரப் பருகலாம்படி பெருக்காற்றிலே தேங்கின மடுக்கள் போலேயாயிற்று கோயில்களிலும் இல்லங்களிலும் எங்குமொக்க எல்லார்க்கும் கண்ணுக்கு இலக்காம்படி நிற்கிற அர்ச்சாவதாரம். ஆக இந்த ஐந்து வகைகளினாலும் ஐவகை நீரை ஒத்திருப்பான் எம்பெருமான்.

(11) நீரானது இயற்கையிலே பரிசுத்தமாயினும் ஆதாரவசத்தாலே கொள்ளத்தக்கதும் தள்ளத்தக்கதுமாகிறது. அப்படியே பிறதெய்வங்களில் அந்தர்யாமியான எம்பெருமான் உபேட்சிக்கத்தக்கவனாகவும், கூராராழி வெண்சங்கேந்தின எம்பெருமான் உத்தேசியனாகவும் உள்ளமை காண்க.

(12) தோண்டச் தோண்டச் சுரக்கும் நீர்; எம்பெருமானும் கொள்ளமாளா இன்பவெள்ளமாய்ப் பேசப் பேச வளர்ந்திடுவன். ''செலக்காண்கிற்பார் காணுமளவும் செல்லுங் கீர்த்தியாய்'' என்றாரே நம்மாழ்வார். "பேசுவர் எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாசமலர்த் தண்டுழாய் மார்பன் வடிவு" என்றார் பேயாழ்வார்.

(13) நீர் தனக்கொரு பிரயோசனமும் இன்றிப் பரார்த்தமாகவே இருக்கும்; அதுபோலவே எம்பெருமானுடைய இயல்பு ரூபம் குணம் விபூதிகள் ஆகியவெல்லாம் நம்போன்றஅடியார்களுக்காகவேயிருக்கும்.

(14) நீர் தானே பெய்யவேணுமே அன்றி, ஒருவரால் வடிம்பிட்டுப் பெய்விக்க முடியாதது; எம்பெருமான்படியும் இப்படியே; அவன் தனது இயற்கையின்னருளால் இரங்கினாலுண்டு.

(15) நீர் கடலிலிருந்து காளமேகம் வழியாக வந்தாலன்றி உபயோகிக்க முடியாது. எம்பெருமானும் சாஸ்திரங்களிலிருந்து ஆசாரியர்முகமாக வந்தே அருள்கிறான். ''மேகம் பருகின சமுத்ராம்பு போலே நூற்கடற்சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே சர்வதா சர்வோப சீவியமாமே" என்ற ஆசாரிய இருதய சூக்தி காண்க.

(16) சிறியார் பெரியாரென்கிற விபாகமின்றியே அனைவரும் ஓர் துறையிலே படிந்து குடைந்தாடலாம்படி யிருக்கும் நீர். எம்பெருமானும் 'நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே' என்றும், 'கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்' என்றும் சொல்லுகிறபடியே பெரியார், சிறியார் என்னும் வாசியற ஒக்க வழிபடலாம்படி யிருப்பன்.

(17) நீர் சிறிது துவாரம் கிடைத்தாலும் உட்புகுந்துவிடும். எம்பெருமானுக்கும் சிறிது காரணமே போதும். ''திருமாலிருஞ்சோலைமலை யென்றேனென்னத், திருமால் வந்தென்நெஞ்சு நிறையப் புகுந்தான்" என்றும் "மாதவன் என்றதே கொண்டு என்னுள் புகுந்திருந்தான்" என்றும் அருளிச் செய்தார் நம்மாழ்வார்.

(18) தஞ்சை, காவிரி, திரிவேணி முதலான தீர்த்த க்ஷேத்ரங்களிலே நீருக்குப் பெருமை அதிகம்: எம்பெருமானுக்கும் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான திருப்பதிகளிலே சிறப்புப் பொலியும்.

(19) தாபம் மிக்கவர்கள் நீரை முகத்திலே ஏறட்டுவது, முதுகில் கொட்டுவது, உள்ளில் செலுத்துவது, படிந்து குடைந்தாடுவதுபோல், ''வாக்கினால் கருமந்தன்னால் மனத்தினால் சிரத்தை தன்னால், வேட்கை மீதூர வாங்கி விழுங்குவர்கள்" எம்பெருமானையும் என்கிறார் திருமங்கையாழ்வார்.

(20) நீர் வேண்டியவன் ஒரு துளி நாக்கு நனைக்கக் கிடைத்தால் போதுமென்பான்: ''கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய் ஒருநாள் மண்ணும் விண்ணும் மகிழவே" என்றும், ''ஒருநாள் காணவாராயோ" என்றும் ஆழ்வார்கள் கூறுவர் எம்பெருமானை நோக்கி.

(21) நீரில் சிறிய கல்லும் அமிழும்; பெரிய தெப்பமரமும் மிதக்கும். எம்பெருமான் பக்கலிலும் "பிரம்மாவாய் இழந்துபோதல் இடைச்சியாய்ப் பெற்றுவிடுதல் செய்யக் காணா நின்றோமிறே" என்கிறபடியே பெரியார் இழக்கவும் சிறியார் பெறவுமாகும். ''நேரே கடிக்கமலத்துள்ளிருந்துங் காண்கிலான், கண்ணனடிக் கமலந்தன்னை யயன்" என்று பிரமன் இழந்ததைப் பொய்கையார் கூறினர். ''மருவுநின் திருநெற்றியில் சுட்டி யசைதர மணிவாயிடை முத்தந் தருதலும், உன்றன் தாதையைப் போலும் வடிவு கண்டுகொண்டு உள்ளம் உள் குளிர விரலைச் செஞ்சிறுவாயிடைச் சேர்த்து வெகுளியாய் நின்றுரைக்கும் அவ்வுரையும் திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம் தெய்வநங்கை யசோதை பெற்றாளே" என்று இடைச்சி பெற்றதைக் குலசேகராழ்வார் கூறினர். பகவத் குணங்களில் சிறுமாமனிசர் அமிழ்தலும், ஊன்மல்கிமோடு பருப்பார் வாய்க் கரையில் நிற்றலுங்கொள்க.

(22) ''துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத், துப்பாயதூ உம் மழை" (திருக்குறள்) என்கிறபடியே உணவு பெருக விளைதற்குக் காரணமாகையாலே சாதனமாயும், விடாய்தீரப் பருகுகையாலே தானே போக்கியமாயுமிருக்கும் நீர்; உபாயமும் தானாய் உபேயமும் தானாயிருப்பன் எம்பெருமான் என்பது நூற்கொள்கை. இங்ஙனே மற்றுங் காண்க.

**

# நக்கீரரும், கச்சியப்பரும்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

**நக்கீரர் :**

நக்கீரர், இற்றைக்குச் சற்றேறத்தாழ 1800 ஆண்டுகளுக்கும் முன் வாழ்ந்திருந்த சிறந்த செந்தமிழ்ப்பெரும் புலவர். இவரை, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் எனவும் வழங்குவர். பத்துப்பாட்டு என்னும் சங்ககாலத் தொகை நூலில், திருமுருகாற்றுப் படையும்,நெடுநெல்வாடையும் இவரால் பாடப் பெற்றன. இவைகளேயன்றி, நற்றிணை குறுந் தொகை அகநானூறு புறநானூறு முதலிய சங்ககால நூல்களிலும், நக்கீரர் பாடிய பலப் பல பாடல்கள் உள்ளன. ''வில்லில் சேரன், சொல்லில் கீரன்'' எனவழங்கும் பழமொழியால் இவர்தம் புலமைச் சிறப்பு இனிது விளங்கும். செந்தமிழ்க் கடவுளாகிய திருமுருகனின் அரு மைபெருமைகளையெல்லாம் விரித்து விளக்கும் திறனால், முருகனின் துதிநூல்களிலெல்லாம் திருமுருகாற்றுப்படையே மிக்க பழமையும் பெருமையும் வாய்ந்து தலைசிறந்து திகழ்கின் றது; அவ்வாறே முருகனின் அடியவர்களிலெல் லாம் முதற்பெரும் அடியவராகப் பெரிதும் மதித்துப் போற்றத் தக்கவராக விளங்குபவர் நமது நக்கீரரே யாவர்.

**கச்சியப்ப சிவாசாரியர் :**

முருகனின் அளப்பரும் பெருமையினை யும், அளவிலா அருட்பெருந் திறங்களையும் வியந்து புகழ்ந்து, விளக்கிப் பாடியருளிய செந் தமிழ்ச் சான்றோர்கள், எண்ணில்லாத எத்த னையோ பலர் இருப்பினும்,அவர்களுளெல்லாம் மிகப்பெரிதும் வியந்து போற்றிக் குறிப்பிடத் தக்க சிறப்புடையராகத் திகழ்பவர், கந்தபுரா ணம் என்னும் செந்தமிழ்ப்பெரும் காவியம் பாடியருளிய கச்சியப்ப சிவாசாரியரே யாவர். அவர் காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் எழுந் தருளியுள்ள முருகப்பெருமானை, முப்போதும் திருமேனி தீண்டிப் பூசிக்கும் பேறுபெற்ற சிவா சாரியராகத் திகழ்ந்திருந்தார். இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்து, திருப்புகழ் என்னும் சிறப்புமிக்க செந்தமிழ்ச் சந்தக் கவிதைகள் பற்பல பாடியருளிய, அருண கிரிநாதப் பெருமானுக்கு முற்பட்டவர், இவர்! அருணகிரிநாதர் தமது திருப்புகழ் பாடல் களில் கச்சியப்பசிவாசாரியார், தாம் பாடியரு ளிய கந்தபுராணத்தினை அரங்கேற்றும்போது, அதன் தொடக்கத்தில் வரும் முதற்பாடலில் ''திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்'' என் னும் தொடர்பற்றி எழுந்த ஐயப்பாட்டினை நீக்குதற்கு, முருகப்பெருமான் ஒரு புலவர் வடி வில் எழுந்தருளிய அருள்நிகழ்ச்சி பற்றிக் குறிப் பிட்டிருத்தலால், கச்சியப்பர் அருணகிரிநாதர்க் கும் முற்பட்டவர் என்பது தெளியப்படும். ஆத லின், கச்சியப்பசிவாசாரியர் சற்றேறத்தாழ இற்றைக்கு எழுநூறு அல்லது எண்ணூறு ஆண்டு களுக்கு முன்பு வாழ்ந்திருந்தார் எனக் கொள்ள லாம்.

**கந்தபுராணத்தில் நக்கீரர் :**

கந்தபுராணம் என்னும் கவின்மிகு செந் தமிழ்ப் பெருங்காப்பியம் பாடிய கச்சியப்ப சிவாசாரியர்க்கு, முருகன் அடியார்களுள் மிக்க முதன்மை வாய்ந்தவராய், திருமுருகாற்றுப் படை பாடியருளிய நக்கீரர்மீது அளவிலா அன் பும் மதிப்பும் பக்தியும் அமைந்திருந்தன. இவ் வுண்மை, நக்கீரரைப் ''பொய்யற்ற கீரன்'' என்றும், அவர் புலவர்களுளெல்லாம் மிக்க முதன்மையும் தலைமையும் வாய்ந்தவராதல் பற்றி ''முதலாம் புலவோர்'' என்றும் கச்சி யப்பர் புகழ்ந்து போற்றி யிருத்தலாற் புல னாகும்.

''பொய்யற்ற கீரன் முதலாம்
புலவோர் புகழ்ந்த
ஐயற்கு எனது சிறுசொல்லும்
ஒப்பாகும்; இப் பார்
செய்யுற்றவன் மால் உமை பூசைகொள்
தேவ தேவன்
வையத்தவர் செய் வழிபாடும்
மகிழும் அன்றே''

என்று கந்தபுராண இறுதியில், அவர் அருளிச் செய்துள்ள அழகிய இனிய பாடலால் தெளிவு றப்புலனாகின்றது. நக்கீரர்பால் கச்சியப்பர் கொண்டிருந்த மிக்கபெரும் மதிப்பிற்கும் அன் பிற்கும் சான்றாக, நக்கீரர் திருமுருகாற்றுப் படையிற் பாடிய முறையினையே முழுவதும் தழுவி, முருகனின் ஆறு படைவீடுகளையும் புகழ்ந்து போற்றித் துதித்திருக்கும் திறனால் நன்கினிது விளங்குகின்றது. அதுபற்றி இங்குச் சிறிது இயன்றவரை ஆராய்ந்து இன்புறுவோம்.

## ஆறுபடை வீடுகள்:

முருகன் தமிழ்த்தெய்வம். தமிழ்நாட்டுச் சிவாலயங்களிலெல்லாம் முருகப் பெருமான் எழுந்தருளி விளங்குகின்றான். எனினும், முருகனுக்கேயுரிய சிறப்புத் தலங்கள் பலவுண்டு. அவைகளுள்ளும் தொன்றுதொட்டு மிகவும் சிறந்த தலங்கள் எனப் போற்றப்பெறுபவை, ஆறு. முருகனின் திருமுகங்கள் ஆறு ஆதல் போல, அவனுடைய சிறந்த தலங்களும் ஆறு எனத் திகழ்கின்றன. முருகனுக்குரிய சிறந்த ஆறு தலங்களுக்கும் சென்று தரிசனம் செய்து தொழுவதும், அவனுடைய ஆறெழுத்து மந்திரத்தை இடையறாது ஓதி வழிபடுவதும், மிகச் சிறந்த புண்ணியச் செயல்கள் ஆகும். 'தன்னுடைய ஆறு தலங்களைத் தரிசித்துவணங்குபவர்களுக்கும், ஆறெழுத்து மந்திரத்தை ஓதி வழிபடுபவர்களுக்கும், முருகப்பெருமான் பெரிதும் தண்ணளி புரிந்து மகிழ்கின்றான். அவர்களின் சிந்தையிலேயே எப்பொழுதும் பிரிவறக் குடிகொண்டு வீற்றிருந்தருள்கின்றான். இதனை வற்புறுத்தியுணர்த்தும் முறையில்,

''ஆறு திருப்பதிகண்டு
ஆறெழுத்தும் அன்பினுடன்
கூறும் அவர் சிந்தை
குடிகொண்டோனே''

—கந்தர் கலிவெண்பா

எனக் குமரகுருபரர் கூறுதல் காணலாம். சிறந்த ஆறு திருத்தலங்களையும், ''ஆறு படை வீடுகள்'' எனவும் வழங்குவர். இவ் வழக்காறு பழைமையானது அன்றிச் சமீப காலத்தில் தோன்றியதே என்றும் ஒரு சிலர் கூறுவதுண்டு. எனினும், அருள்நந்திசிவம் சிவஞான சித்தியாரிற் குறிப்பிடுதல்போல,முருகன் ''வீரர் வீரன்'' ஆதலானும், முருகனே ''தேவசேனாபதி'' எனப்படுதலானும், ''வீரர்களுக்குள்யான் சேனானி (முருகன்) ஆக விளங்குகின்றேன்'' எனக் கண்ணபிரான் கீதையில் அருளிச் செய்திருத்தலானும், முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள தலத்தினை ''படைவீடு'' எனக் கூறுதல் பொருந்துவதேயாகும். படை-படைவீரர்கள், வீடு-விடுதல், தங்குதல். எனவே 'படைவீடு' என்பது படைவீரர்கள் தங்கியுள்ள இடம் எனப் பொருள்பயக்கும்.

## கந்தபுராணத்தில் ஆறுபடைவீடு:

இம்முறையில் முருகன் ஆகிய வீரர் வீரனுக்குரிய ஆறு படை வீடுகள், திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்றுதோறாடல் பழமுதிர்சோலை என்பனவாகும். ஆசிரியர் நக்கீரர் தாம் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படை எனும் பழந்தமிழ்ப் பனுவலில் ,இந்த ஆறு தலங்களையும் தனிச் சிறப்பாக எடுத்துக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். ஆதலின் அவருக்குப் பிற்போந்த சான்றோர்கள் அனைவரும்கூட, இந்த ஆறு தலங்களையும் சிறந்தனவாகக்கொண்டு தழுவிப் போற்றி மகிழ்ந்துள்ளனர். அம்முறையில் நக்கீரரைப் பெரிதும் போற்றிப் பின்பற்றியே, கச்சியப்பசிவாசாரியார் தமது கந்தபுராணக் கடவுள் வாழ்த்துப் பகுதியில், முருகனைப் போற்றும் இடத்தில், ஆறு படைவீடுகளையும் வீறுபெற அமைத்துப் புகழ்ந்து துதித்து மகிழ்கின்றார்.

ஒவ்வொரு படைவீட்டின் பெயரையும் பாடலின் ஈற்றடியில் அமைக்கின்றார்; அவ்வமைப்பிற் கேற்பச் சொற்பொருள் நலங்களும் எதுகை மோனை முதலிய செய்யுள் அமைதிகளும், பாடலின் ஏனைய மூன்று அடிகளில்இயல்பாக எழிலுறப் பொருந்தும்படி செய்கின்றார். இத்திறம் எல்லாக் கவிஞர்களுக்கும் இயல்வதொன்றன்று. உயர்ந்த சிறந்த பெருங் கவிஞர்களுக்கு மட்டுமே உரியதொன்றாகும். அழகும் அருமையும் பொருந்த இம்முறையில் ஆறுபடைவீடுகளுக்கும், ஆறு அழகிய துதிப்பாடல்கள், கச்சியப்பரால் கவின்மிகப் பாடப்பெற்றுள்ளன. இவற்றிற்குப் பின்னர், தாம் இருந்து பூசித்து வணங்கி வழிபட்டு வந்த குமரகோட்டம் கோயில் பற்றிய துதிப்பாடல்ஒன்றனையும்பாடி முருகனை வணங்கியுள்ளார் அவர்!

மிகச் சிறந்த முருகன் அடியாரும், முருகனின் அருள்பெற்ற முதுபெருங்கவிஞர் பிரானும் ஆகிய கச்சியப்பசிவாசாரியர், முருகனின் ஆறு படைவீடுகளையும் முறையே பல்காற்சென்று தரிசித்து மகிழ்ந்தனர் போலும்! அங்ஙனம் சென்று வழிபட்டு மகிழ்ந்ததன் பயனாக, அவ்வத் தலத்து மூர்த்திகளை எவ்வெப்பொழுதும் தம் சிந்தையில் தியானித்து இடையறாது வழிபடுதற்கு இனிது துணையகும் வண்ணமே, அவர் இத் துதிப்பாடல்களை அருளிச் செய்தனராதல் கூடும். அவரைப் பின்பற்றி நாமும் காலை மாலை வேளைகளிலோ, இயலும் சமயங்களிலோ இவ்வழகிய இனிய துதிப்பாடல்களைப் பாடித் தியானித்தால், ஆறுபடைவீடுகளையும் ஒருங்கே தரிசனம் செய்த உயர்ந்த பயனை அடைந்து உய்யலாம். ஆதலின் அப்பாடல்களின் பொருளை ஈண்டுச் சுருங்கக் காண்போம்.

### 1. திருப்பரங்குன்றம்:

இருப்பரங் குறைத்திடும் எஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றுஅமர் சேயைப் போற்றுவாம்

பொருள்: இரும்பாற் செய்த அரம் என்னும் கருவி கொண்டு அராவிச் செய்யப்பெற்ற கூர்மையான ஈட்டிகளையுடைய மலைநில வேடர்கள், போர்க்களத்தில் மயங்கி விழுந்தும் பின்னர் உணர்வுபெற்று எழுந்திடுமாறு செய்து அவர்களுடைய மகள் ஆகிய வள்ளியம்மையார் மீது,தான் கொண்டுள்ள மிக்க காதல் விருப்பத்தினை, அங்கே தான் நிகழ்த்திய போரின்கண் அவர்களைக் கொன்றொழிக்காமையினால் விளங்கும்படி தெளிவாகக் காட்டியருளிய, திருப்பரங்குன்றம் என்னும் தலத்தின்கண் விரும்பித் தங்கி வீற்றிருக்கின்ற முருகப்பெருமானை, நாம் துதித்து வணஙுங்குவோம்.

குறிப்புரை: இரும்பு+அரம்-இருப்பரம்; சிலம்பு+அதிகாரம்- சிலப்பதிகாரம் என்பது போல. குறைத்தல்-அராவிச்செய்யப்பெறுதல். எஃகு-கூர்மை. 'வேல்' இங்கு வேடர்களின் ஈட்டியைக் குறித்தது. பொருப்பர்-மலைநிலத்தில் வாழும் வேடர்கள். பொருப்பு-மலை. உணர்வுற-தூக்கத்தினின்று எழுவதுபோல எழுந்திருக்க. வண்டு 'வண்டர்' என வருதல் போல, விருப்பு என்பது 'விருப்பர்' என எதுகை நோக்கி வந்தது. விருப்பு-காதல். 'விருப்பர் அங்கு அமர் இடை' எனப் பிரிக்க. அமர்-போர், போர்க்களம். சேய்-முருகன் ,செம்மை நிறம் உடையவன்; குழந்தை எனினுமாம். 1

## 2. திருச்சீரலைவாய் :

சூரலை வாயிடைத் தொலத்து மார்புகீண்டு
ஈரலை வாயிடும் எஃகம் ஏந்தியே
வேரலை வாய்தரு வெள்ளி வெற்பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.

பொருள்: சூரபதுமனை அலைகளையுடைய கடலின்கண் தோல்வியுறச் செய்து, அவனது மார்பைப் பிளந்து ஈரலை வாயிலே இட்டு விழுங்குகின்ற வேற்படையினை ஏந்திக் கொண்டு, மூங்கில்கள் பொருந்தியிருக்கின்ற வெள்ளிமலையினை விட்டு நீங்கித் திருச்சீரலைவாய் என்னும் தலத்தின்கண் வந்து எழுந்தருளியிருக்கின்ற முருகனை, நாம் துதித்து வணங்குவோம்.

குறிப்புரை: சூர்-சூரபதுமன். அலைவாய்-கடல். தொலைத்து-தோல்வியுறச் செய்து, வெற்றிகோண்டு. கீண்டு-பிளந்து. 'ஈரலைவாய் இடுதல்' என்பது உலக நவிற்சி; கொல்லுதல் என்னும் பொருளில் வந்தது. எஃகம்- வேற்படை. வேரல்-மூங்கில். வாய்தரு-பொருந்தியிருக்கின்ற. மூங்கில்கள் வளர்தல் என்பது மலைகளுக்கெல்லாம் உரிய பொதுத் தன்மை. அஃது ஈண்டு வெள்ளிமலைக்கும் ஏற்றிக் கவி மரபு பற்றிக் கூறப்பட்டது. வெள்ளி வெற்பு-திருக்கயிலாயமலை. ஒரீஇ-நீங்கி; சொல்லிசை அளபெடை. சீரலைவாய் -திருச்செந்தூர் என்னும் தலம். 2

## 3. திருவாவினன்குடி:

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவாம்

பொருள்: கற்பகச் சோலையையுடைய தேவேந்திரன், தனது அரண்மனை பொருந்தியிருக்கின்ற அழகிய பொன்மயமான அமராவதி என்னும் நகரத்தின்கண்,மீண்டு வந்து குடியேறவும், சூரபதுமன் ஆகிய அசுரர் தலைவன் மடிந்தொழியவும், தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவன் பிரணவம் ஆகிய மந்திரத்தின் சிறந்த பொருளை அறியாமல் மயங்கி விழிக்கவும், திருவாவினன்குடி என்னும் தலத்தின்கண் எழுந்தருளி விளங்கும் முருகனை, நாம்துதித்து வணங்குவோம்.

குறிப்புரை: கா-சோலை; ஈண்டுக் கற்பக மரச் சோலையை உணர்த்திற்று. காவினன்-தேவேந்திரன். காமர்-அழகிய. பொன்நகர்-தேவருலகின் தலைநகரம் ஆகிய அமராவதி. ''ஓங்கு அமராவதியோர் தொழச் செல்வதும் உண்மையே'' என்பது சம்பந்தர் தேவாரம். மேவுதல் திரும்பிவருவதல். இந்திரன் சூரபதுமனுக்கு அஞ்சி ஓடி ஒளிந்திருந்தனன். ஆதலின், 'மேவினன் குடிவர' என்றார். 'குடிவரல்' என்பது உலகவழக்கு. சூர்முதல் -சூரபதுமன் ஆகிய தலைவன்: இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. விளிதல்- மடிதல், இறத்தல். மால் உறல்-மயங்கி விழித்தல். ஆவினன்குடி என்பது ஆவினன்குடி என எதுகை நோக்கி வந்தது. 'ஆவியர்' என்னும் வீரக் குடிமக்கள் பண்டைக் காலத்தில் வாழ்ந்து வந்து இடமாதலின், இப் பெயர் பெற்றது. திருமால் காமதேனு சூரியன் நிலமகள் அக்கினி வழிபட்ட தலம் (திரு ஆ இனன் குடி) எனவும் பொருள் உரைப்பர். இது பழநியிற் கீழேயுள்ள கோயில். அமலன்-மலம் அற்றவன், கடவுள், முருகன். (3)

## 4. திருவேரகம்:

நீரகத் தேதனை நினையும் அன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை எய்திய
ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவாம்

பொருள்: நல்ல நீர்மைகளை யுடைய மனத்தின்கண், தன்னை நினைந்து போற்றி வழிபடுகின்ற அன்புமிக்க அடியார்கள், பெரிய இவ்வுலகத்தின்கண் சுழன்று அலைந்து வருந்துகின்ற, பிறவியாகிய பெருங்கடலினின்று நீந்திக் கடக்குமாறு செய்தருள்கின்ற பிரணவ மந்திரத்தின் வடிவமாக விளங்குகின்ற தலைமைப்பாட்டை அமைந்துள்ள, திருவேரகம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள ஆறுமுகங்களையுடைய முருகப்பெருமானின் திருவடிகளைத் துதித்து வணங்குவோம்.

குறிப்புரை: நீர்மை அகம்-நீரகம் எனவந்தது. நீர்மை-நற்பண்புகள் பலவும் உடைமை. 'நீரின்கண் நின்றுகொண்டு தியானித்துத் தவம் புரிபவர்' எனவும் சிலர் பொருள் கூறுவர். பேரகம்-பெரிய இவ்வுலகம். (பெருமை அகம்). அலமருதல்-சுழலுதல், வருந்துதல். நீத்திடுதல்-நீந்திக் கடக்குமாறு செய்தல். நீந்து தன்வினை. நீத்து பிறவினை. 'நீக்கிடும்' எனவும் சிலர் பாடம் ஓதுவர். தாரகம்-பிரணவம், எல்லாவற்றையும் தரிப்பது, தாங்குவது என்பது பொருள். முருகன் பிரணவ வடிவம் கொண்டு விளங்குபவன் என்பது கருத்து. ''ஓங்காரத்து உள்ளொளிக்கு உள்ளே முருகன் உருவம் கண்டு தூங்கார், தொழும்பு செய்யார்,

என் செய்வார் எமதூதருக்கே?'' என்பது கந்தர் அலங்காரம். ஏர் அகம்-அழகிய தலம்; திருவேரகம். இது சுவாமிமலை எனவும், மலைநாட்டில் உள்ளதொரு கோயில் எனவும் கூறுவர். (4)

## 5. குன்றுதோறாடல் :

ஒன்றுதொ றாடலை ஒருவி ஆவிமெய்
துன்றுதொ றாடலைத் தொடங்கி ஐவகை
மன்றுதொ றாடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ றாடிய குமரற் போற்றுவாம்.

பொருள்: உயிர்கள் எல்லாம் ஊழிக்காலத்தில் ஒடுங்குந்தோறும் தனது திருநடனத்தினை விடுத்து நீங்கியும், உயிர்கள் எல்லாம் படைப்புக் காலத்தில் உடல் கருவி உலகு நுகர்ச்சி என்பவற்றை அடையுந்தோறும் தனது திருநடனத்தினை மீட்டும் தொடங்கியும், ஐந்து வகைப்பட்ட மன்றங்களிலும் ஆடியருள்கின்ற வள்ளல் ஆகிய சிவபிரான் உவந்து பெருவிருப்பங் கொண்டு மகிழுமாறு, குன்றுகள்தோறும் எழுந்தருளித் திருவிளையாடல் புரிகின்ற குமாரன் ஆகிய முருகனை, நாம் துதித்து வணங்குவோம்.

குறிப்புரை: ஒன்றுதல்-சேர்தல், ஒடுங்குதல். ஒருவி-நீங்கி, நிறுத்தி. ஆவி-உயிர். மெய்-உடல். துன்றுதல்-அடைதல். மன்று-பொது இடம், சபை. பொன்மன்று தில்லை, வெள்ளி மன்று மதுரை, மணிமன்று திருவாலங்காடு, செப்புமன்று திருநெல்வேலி, ஓவியமன்று திருக்குற்றாலம். இவ்வைந்து மன்றங்களிலும் சிவபிரான் திருக்கூத்து நிகழ்த்துதலின் சிவபிரானை ''ஐவகை மன்றுதோறு ஆடிய வள்ளல்'' என்றார். குன்றுதோறாடல் என்பது, திருத்தணிகை வள்ளிமலை கதிர்காமம் என்பர், எல்லா மலைகளையுமே பொதுவாகக் குறிக்கும் பெயர் எனவும் கொள்ளலாம். கு-குற்சிதம், அ-அருவருக்கத்தக்க பண்புகள். மாரன்-அழித்தருள்பவன். குமரன் -முருகன். (5)

## 6. பழமுதிர் சோலை :

எழமுதி ரைப்புனத்து இறைவி முன்புதன்
கிழமுதிர் இளநலம் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்

பொருள்: ஓங்கி வளர்ந்து செழித்த அந்தத் தினைப்புலத்தின்கண், வள்ளியம்மையாகிய இறைவியின் திருமுன்னிலையில், தன்னுடைய உரிமை மிகுந்த இளமைப் பருவத்து இன்பப் புணர்ச்சி கிடைத்தற் பொருட்டு, தனக்குத் தமையன் ஆகிய விநாயகப் பெருமான், வலிமை மிகுந்த ஆண் யானை வடிவத்தில் வந்து தோன்றுதலை விரும்பியருளிய, பழ முதிர் சோலை என்னும் தலத்தில் எழுந்தருளி விளங்குகின்ற, அழகிய பகவான் ஆகிய முருகனை, நாம் துதித்து வணங்குவோம்.

குறிப்புரை: எழுதல்-ஓங்கி வளர்தல், எழு அ முதிரை-எழமுதிரை என வந்தது. அ-அந்த: உலகறி சுட்டு. முதிரை-தினை. முதிரைப் புனம் -தினைப் புனம். தினைப் பயிர் வளர்கின்ற இடத்தைப் புனம் என்பது மரபு. 'இறைவி' என்பது பொதுப்பெயராய், ஏற்புழிக் கோடல் என்னும் உத்திபற்றி, ஈண்டு வள்ளியம்மையைக் குறித்தது. கிழமை முதிர்-கிழமுதிர் என அமைந்தது. கிழமை-உரிமை. கிழப்பருவம்எனிமாம். இளநலம்-இளமைப்பருவ இன்பம். முன்னவன்-தமையன், விநாயகர். விநாயகர் யானை வடிவில் தோன்றி வள்ளியம்மையாரை அச்சுறுத்தி முருகனை மணக்கச் செய்தார், என்பது வரலாறு. இதனைத் தமிழ் அகப்பொருள் இலக்கண நூல்கள் களிறுதரு புணர்ச்சி என வழங்கும். மெய்யுணர்வு நிலையில் ஞானாசிரியன் தோன்றிப் பிரணவ மந்திர உபதேசம் செய்தலை இந்நிகழ்ச்சி குறிக்கும் எனவும், தத்துவ நுண்பொருள்கொள்ளலாம். பழமுதிர்சோலை என்பது மதுரைக்கு அருகே இந்நாளிற் கள்ளழகர் கோயில் என வழங்கும் தலம் என்பர். பழம் முதிர்சோலை எனவும், பழம் உதிர் சோலை எனவும் பிரிக்கலாம். (6)

## அருணகிரிநாதரும், ஆறுபடை வீடுகளும்:

நக்கீரர் ஏறத்தாழ 1800 ஆண்டுகளுக்கு முற்பட்டவர். அவர் அருளிய திருமுருகாற்றுப் படையினை, அவருக்குப் பின்னர் ஏறத்தாழ 1000 ஆண்டுகள் கழித்துத் தோன்றிய கச்சியப்ப சிவாசாரியார் பலகால் ஓதிப் பாராயணம் செய்து பயன்பெற்றார். அதனால் அவர் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையினை அடியொற்றி, ஆறுபடை வீடுகளையும் முறையே ஆறுபாடல்களால் அழகுறத் துதித்துப் போற்றினார். அக் கச்சியப்பசிவாசாரியருக்குஏறத்தாழ 400 ஆண்டுகள் கழித்துப் பதினைந்தாம் நூற்றாண்டில் பிரபுடதேவமாராயன் காலத்தில் வாழ்ந்திருந்த அருணகிரிநாதர், கச்சியப்பரைப் பின்பற்றி ஆறுபடை வீடுகளையும் ஒரு பாடலிலேயே சுருக்கித் தொகுத்துத் துதித்தருள்கின்றார்.

திருவாவி னன்குடி பங்காளர்
எண்முது சீருரைச
திருவாவி னன்குடி வானார்
பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி ஏரகம்
குன்றுதொ றாடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்ட
தண்கார் வரை செப்புமினே

—கந்தர்அந்தாதி

இப்பாடலில் முருகனின் சிறந்த ஆறுதலங்களையும், ஒருசேர வரிசையாகத் தொகுத்துச் சொல்லியிருப்பது, ஒரு பெருஞ் சிறப்பு. அதற்கும்மேலே மடக்கு அல்லது யமகம் எனப்படும்

சொல்லமைப்புத் திறன் விளங்க, நான்கு அடிகளிலும் திருவாவினன்குடி என்னும் ஒரே சொற்றொடர் எதுகையாக அமைந்து வெவ்வேறு வகையான பொருள் தரும்படி செய்திருப்பது, மிகவும் மகிழத் தருவது. அதன் பொருள் வருமாறு.—

பொருள்: திருமகளுக்கு உயிர்போன்ற திருமாலும், நல்ல மனைவியாகிய உமாதேவியினைத் தம் இடப்பாகத்திற் கொண்டிருக்கும் சிவபிரானும், மதிக்கத் தக்க பழமையான சிறப்புப் பொருந்திய வேதாகமங்களைச் சொல்லிய, சதுரப்பாட்டையுடைய இளம்பூரணன் ஆகிய முருகனுக்கு உறைவிடம் ஆகிய, வானை அளாவிய திருப்பரங்குன்றம் திருச்சீரலைவாய் திருவாவினன்குடி திருவேரகம் குன்றுதோறாடல், திரளாகச் சென்று பிளிறுகின்ற யானைக் கூட்டங்கள் தங்கிக் குடியிருந்து வாழ்கின்ற, குளிர்ச்சியான மேகம் தவழ்கின்ற மலையாகிய பழமுதிர்சோலை, ஆகிய தலங்களைத் துதி செய்யுங்கள்.

குறிப்புரை: திருஆவி-திருமகளுக்கு உயிர் போன்ற திருமால். நன்குடி-நல்ல மனைவி, உமாதேவி. எண்-எண்ணி மதிக்கத்தக்க. முதுசீர்-பழமையான சிறப்பு; அதனையுடைய வேதாகமங்கள். சதிர் உவாவினன். சதிர்-சதுரப்பாடு, மிக்க திறமை. உவா-பூரண சந்திரன் முழுநிலைா, உவாவினன்-முழு நிலாப்போன்ற இளம்பூரணன் என்னும் முருகன். 'வானோர்' என்றும் பாடம், முப்பத்து முக்கோடி தேவர்களும் முருகனைக் காண்டல் குறித்து மண்மிசை வந்து உறைதலாற் ''பரங்குன்று இமயக் குன்றம் நிகர்க்கும்'' என்று பரிபாடல் என்னும் சங்கநூலில், நல்லந்துவனார் என்னும் புலவர் பாடியிருத்தல் கருதி ''வானோர் பரங்குன்று'' எனஅருணகிரிநாதர் பாடியதாகக்கொள்ளலாம். தேவேந்திரன் மகள் ஆகியதெய்வயானையின் திருமணம் நிகழ்ந்த தலமாகலின் ,தேவர்கள் அங்கு வந்து எப்போதும் உறைகின்றார் எனலும் பொருந்தும். சென்று அதிர் உவா இனம் முடிகொண்ட தண்கார்வரை. இது பழமுதிர் சோலையைக் குறிக்கும் தொடர். அதிர்தல்-பிளிறுதல், உவா -யானை. இனன்-கூட்டம். கார்வரை-மேகம் தவழும்மலை, சோலை என்க.

முடிவுரை:

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படையினை ஓதியுணர முடியாதவர்கள், கச்சியப்பர் பாடிய ஆறு கவிதைகளையும் பாடி, முருகனைத் துதிக்கலாம். அதுவும் இயலாதவர்கள் அருணகிரிநாதர் அருளிய இவ்வொரு திருப்பாடலையாவது, காலை மாலை வேளைகளில் எப்பொழுதேனும், எவ்விடத்திலேனும் ஓதி முருகனை வழிபடலாம். இவற்றை இயன்ற பெற்றி இடைவிடாமல் பாராயணம் செய்து வருதல், ஆறுபடைவீடுகளையும், ஒருங்கே கண்டு தொழுது வழிபடும் பயனை, நமக்கு நல்கி நலம் செய்யும் என்பது திண்ணம்.

---

# பாஞ்சராத்திரம்

P. RAJU, Dy. Commissioner H.Qrs (Retired) HR&CE Admn. Religion Dept

'பாஞ்சராத்திரம்' என்பது வைணவர்களுக்குரிய ஆகமம் ஆகும். விகனசர் என்னும் முனிவர் செய்தருளிய வைகானசம் என்னும் ஆகமமும், வைணவப் பெருமக்களுக்கு உரியதாகும். பாஞ்சராத்திரம் என்னும் ஆகமத்தைப் பின்பற்றி ஒழுகும் வைணவப் பெருமக்களுக்குப் பாஞ்சராத் திரிகள் என்பது பெயர். வைணவர்களின் ஆகமத்திற்குப் பாஞ்சராத்திரம் எனப் பெயர் அமைந்தமைக்குப் பின்வருமாறு பலவகை விளக்கங்கள் அறிஞர்களாற் கூறப்படுகின்றன. அவ்விளக்கங்கள் வருமாறு:-

1. சாங்கியம் யோகம் பௌத்தம் ஆருகதம் காபாலிகம் என்னும் கொள்கைகளைக் கூறும் ஐந்து நூல்களையும், தன் முன்னே ஒளியிழந்து இருள் அடையுமாறு செய்வது.
2. ஞாயிற்றின் முன்னிலையில், இரவானது (ராத்திரி), வலிமைக் குறைவு (பஞ்சத்வம்) அடைந்து அழிதல்போல், தன் முன்னிலையில் பிற மதக் கொள்கைகளும் நூல்களும் சிறப்பிழந்து அழியச் செய்வது.
3. ஐந்து வகையான அறிவு (ராத்ரா) நிலைகளை யுணர்த்துவது.
4. அஞ்ஞானம் (ராத்ரா), அழிவு (பஞ்சத்வம்) அடையும்படி செய்வது.
5. பரம் விபவம் வியூகம் அவதாரம் அர்ச்சை என்னும் திருமாலின் நிலைகள் ஐந்தையும் உடன்பட்டு உணர்த்துவது.
6. கடவுளை உணர்தலினால் அங்ஙனம் உணர்ந்த மாத்திரத்திலேயே, நாம் நம்முடைய ஐம்பொறிகளினால் நிகழும் அஞ்ஞானங்கள் (பாஞ்சராத்திரம்) நீங்கி, உய்யப் பெறலாம் என்று விளக்கி உரைப்பது.
7. திருமால் ஐந்து இரவுகளில், அனந்தன், கருடன், விஷ்வக்சேனன், பிரமன், உருத்திரன் என்னும் ஐந்துபேர்களுக்கு உணர்த்தியது.
8. திருமால் தன்னுடைய பஞ்ச ஆயுதங்களின் அம்சமாகத் திகழும் சாண்டில்யர் ஔபகாயனர் மௌஞ்சாயனர் கௌசிகர் பாரத்துவாஜர் என்னும் ஐந்து பெரு முனிவர்களும் உபதேசித்தது. திருமாலின் பஞ்ச ஆயுதங்களாவன: சுதர்சனம் என்னும் சக்கரம்; பாஞ்சசன்யம் என்னும் சங்கு; சார்ங்கம் என்னும் வில்; நந்தகம் என்னும் வாள்; கௌமோதகி என்னும் கதை ஆகிய ஐந்து படைக்கலன்கள் ஆகும்.

—ஆசிரியர்

# பிரதியங்கிராதேவி

உலக அன்னையாகிய பராசக்தியே, வெவ்வேறு வகையான பெயர்களும், இயல்புகளும், வடிவங்களும் தாங்கி, அவ்வவ் வுயிர்களின் பரிபக்குவ நிலைக்கு ஏற்பத் தண்ணருள் புரிந்து, பாதுகாத்து வருகின்றாள். ''முத்துநற் றாமம் பூமாலை தூக்கி, முளைக்குடம் தூபம் நற்றீபம் வைம்மின்! சத்தியும் சோமியும் பார்மகளும் நாமகளோடு பல்லாண்டு இசைமின்! சித்தியும் கௌரியும் பார்ப்பதியும் கங்கையும் வந்து கவரி கொள்மின்! அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே'' எனவரும் திருவாசகப் பாடலில், மணிவாசகப்பெருமான் சக்தி சோமி பார்மகள் நாமகள் சித்தி கௌரி பார்ப்பதி கங்கை முதலிய பல்வேறு சக்திகளைப் பற்றிக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

செந்தமிழ்ப் பெருங்காப்பியம் ஆகிய சிலப்பதிகாரம் என்னும் சிறந்த பெரு நூலில் சக்தி வழிபாடு பற்றிய பலதிறக் குறிப்புக்கள், அமைந்திருக்கக் காண்கின்றோம். ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னரே,

''அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை; இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு; சூருடைக்
கானகம் உகந்த காளி; தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்;
செற்றனள்போலும் செயிர்த்தனள் போலும்!''

எனவரும் வரிகளில், சக்தியின் வெவ்வேறு திறக்கூறுகள் ஆகிய கொற்றவை பிடாரி பத்திரகாளி துர்க்கை காளி என்னும் பெண் தெய்வங்கள் பற்றி, இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டிருத்தல், நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது. அம்முறையில், உலக அன்னையாகிய பராசக்தியே பிரதியங்கராதேவியாகவும் திகழ்ந்து, தன்னை வழிபடும் அடியவர்களுக்கு அருள் வழங்கி, நலம் புரிந்து வருகின்றாள்.

பிரதியங்கிராதேவியை, அதர்வணவேதம் பத்திரகாளி என்று சிறப்பித்துப் புகழ்ந்து போற்றுகின்றது. அடியார்களுக்கு நேரும் இடர்களைக் களைந்தும், இன்னல்களை நீக்கியும், இன்னருள் புரிதலில், பிரதியங்கிராதேவி மிகவும் சிறப்பு வாய்ந்தவள். அவளது சென்னியின் இடப்புறத்தில் இளம்பிறையும், வலப்புறத் தோளில் சீறியெழும் பாம்பும் அணியுறத் திகழும். அவள் தன் வலச்செவியில் குழையும், இடச்செவியில் தோடும் அணிந்திருப்பாள். அவளுக்கு எட்டுத் திருக்கைகள் உண்டு. உலக உயிர்களையெல்லாம் வசீகரித்து நலம்புரிதலில் சிறந்தவள் பிரதியங்கிராதேவி. காமபீச கூடத்தில், ''க்லீம்'' என்னும் நாத மந்திரத்தில், அவள் உறைகின்றாள்.

பிரதியங்கிரா தேவியின் வலப்புறத் திருக்கைகள் நான்கில், சூலம்-கத்தி-உடுக்கை-வெட்டுண்ட அசுரனின் தலை, ஆகியவைகள் விளங்கும். இடப்புறத்துக் கைகள் நான்கில், முறையே கேடயம் பாசம் மணி கபாலம் ஆகியவற்றை, அவள் ஏந்தியிருப்பாள். அவளுடைய கூந்தல் நெருப்புப் போலச் சிவந்து ஒளிவிடும். அவளது திருமுகத்தில் அழகிய இரண்டு கோரைப் பற்கள் திகழும். பகைவர்களை வென்று அழித்தலில், அவள் மிகவும் புகழ்பெற்றவள். மகிஷாசுரனை மார்பில் உதைத்து வதைத்து வென்றவள் அவளே. சண்டி சாமுண்டி காளி பத்ரகாளி முக்கண்ணி என்ற பலவகையான பெயர்கள் அவளுக்கு உண்டு. அவள் மேகம் போன்ற நிறத்தை உடையவள். தனது திருவருளாகிய கருணையை மாரிபோல் வாரிவழங்குதல், அவளுக்கேயுரிய சிறப்பியல்பு. நிகும்பலை வேள்விக்குரிய அதி தெய்வம், பிரதியங்கிரா தேவியே யாவள்.

அங்கிரஸ் பிரதியங்கிரஸ் என்னும் இரு பெரும் முனிவர்களும், தங்கள் தவ வன்மையால், பிரதியங்கிராதேவிக்குரிய மந்திரத்தைக் கண்டுணர்ந்து, உலகுக்கு வெளிப்படுத்தியருளினர். ''ஓம்க்ஷம் பக்ஷ ஜ்வாலா ஜிஹ்வே கராள தம்ஷ்ட்ரே பிரதியங்கிரே, (ஓம்) க்ஷம் ஹ்ரீம் ஹூம்பட் ஸ்வாஹா'' என்பது, பிரதியங்கிரா தேவியின் திருமந்திரமாகும். இதனை,

'' ஓம்க்ஷம் பக்ஷ ஜ்வாலா ஜிஹ்வே
கராள தம்ஷ்ட்ரே பிரதியங் கிரே
(ஓம்)க்ஷம் ஹ்ரீம் ஹூம்பட் ஸ்வாஹா''!
உனைநினைந் தரியஇம் மந்திரம் ஓதித்
தீம்பழச் சாற்றினை மாந்திய மகிழ்வில்
திளைத்துநின் றனுதினம் வழுத்துகின் றேனே!
மேம்படு நிலையினை எய்துவேன், உன்றன்
மெல்லிய பூவடி நீழலில் யானே!

— திருமதி சௌந்தராகைலாசம்

எனவரும் இனிய பாடலின் மூலம், நாம் நன்கு தெளியலாம். பிரதியங்கிராதேவி, வாயுவின் அம்சமாக விளங்குகின்றாள். இத்தேவியை வணங்குபவர்களுக்கு மேன்மேலும் இன்பமும் செல்வச் செழிப்பும் வளர்ந்தோங்கும்; பாவங்களும் துன்பங்களும் அகலும்; எதிரிகள் அறவே மாய்ந்து கெடுவர்.

அதனாலேயே, கண்ணபிரான் அர்ச்சுனனை நோக்கி ''நீ உன் பகைவர்களைப் போரில் வெல்ல, அதர்வண பத்ரகாளியாகிய பிரதியங்கிராதேவியை வழிபடுக'' என்று பணித்தார். 'ஐம்' என்னும் மந்திரத்தால் தன்னை வழிபடுவோர்க்குப் பிரதியங்கிரா தேவி பெரிதும் அருள் சுரப்பாள். 'ரீம்' என்னும் மந்திரத்தால் தன்னைப் போற்றுவோர்களின் கவலைகளைப் போக்கி, வாழ்க்கையில் இன்பவளம் பெருகச் செய்வாள்; 'க்லீம்' என்னும் மந்திரத்தைச் செபித்துத் தியானிப்பவர்களுடைய தீமைகள் எல்லாவற்றையும் தீர்ப்பாள். அஷ்டமி திதியில் பிரதியங்கிரா தேவியை முறைப்படி நோன்பிருந்து வழிபட்டு வருபவர்களுக்கு, எல்லா நலன்களும் ஓங்கும்; எல்லாத் தீங்குகளும் நீங்கும்.

— ஆசிரியர்

# "வேண்டத் தக்கது அறிவோய் நீ! வேண்டட முழுதும் தருவோய் நீ!"

'' மருத்துவப் பேரறிஞர் ''
திரு. டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம்,
B.Sc., M.D., F.R.C.P. (Lond)., F.C.C.P. (U.S.A.), F.A.M.S.

ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு சமயம் இல்லாவிட்டாலும் ஒருசமயம் ஏதேனும் ஒரு தேவைஏற்படுகிறது. குழந்தை கர்ப்பத்தில் இருக்கும்போதே, தாயாரை டாக்டரிடம் அழைத்துப்போய், தாயார் உடல்நிலை சரியாக இருக்கிறதா, குழந்தை சரியாகப் பிறக்குமா என்றெல்லாம் பரிசோதனை செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பிறகு குழந்தை பிறந்தவுடன் நோய் வராமல் இருப்பதற்குத் தடுப்பு ஊசி போடுகிறார்கள். அதையும் மீறி வருமானால் அந்த நோயை அடக்குவதற்கும், குழந்தையை ஒரு நல்ல வைத்தியரிடம் எடுத்துச் சென்று காட்ட வேண்டியிருக்கிறது. பிறகு அந்தப் பையனுக்கு 3, 4 வயது ஆனவுடன், ஒரு பள்ளியில் சேர்க்க வேண்டும். பள்ளியில் சேர்ப்பதற்கு ஒரு சிபாரிசு வேண்டும். அப்பொழுது ஒருவரை நாடிச் செல்கிறோம். அப்படி நாடிச் செல்வோமானால், நாம் கேட்பதை எல்லாம் அவர் கொடுத்து விடுவாரென்று சொல்ல முடியாது. அவர் கொடுக்கலாமென்று நினைத்தாலும், அவருக்குச் சக்தி இல்லாமல் இருக்கலாம். அப்படி அவருக்குச் சக்தி இருந்தாலும், அன்று காலை அவரிடம் பலபேர் வந்து அவரது உதவியை நாடியதன் காரணமாக, அவர் நமக்கு ஒத்தாசை செய்வதற்குத் தயங்கலாம். அல்லது முடியாது என்றுகூட சொல்லி விடலாம். பிறகு பையன் படித்து நல்ல மார்க்கும் வாங்கிப் பாஸ் செய்து விடுவானானால், அவனுக்கு ஒரு வேலை வாங்கித் தர வேண்டும். மார்க்கு வாங்கிவிட்டான் என்றால் மட்டும் போதாது, அதிர்ஷ்டம் வேண்டும். மற்றும் பல சிபாரிசு வேண்டும்.

இப்படி பிறப்பதற்கு முன்பிருந்தும், சிறு பிள்ளைப் பிராயத்திலும், குமாரப் பருவத்திலும், எவ்வளவு வயதானாலும், இன்னொருவர் தயவு வேண்டுமென்று இருந்துகொண்டே இருக்கிறது. இப்படி வாழ்நாள் முழுவதும் நாம் இன்னொருவர் தயவை வேண்டி இருக்கிறோம். இப்படி யாராய் இருந்தாலும், இன்னொருவர் தயவை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இன்னொருவரை நாம் அணுகும்போது அவருடைய சக்தி எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் விரும்பிய பலனை அடையலாம் என்று நாம்கருதலாம்.

ஒரு ஏழையிடம் கடன் கேட்டால் அவனால் என்ன கொடுக்க முடியும். அவன்கையில் இருப்பது 10 காசு அல்லது 20 காசு இருக்கும். அதைத்தான் அவனால் கொடுக்க முடியும். ஆனால் லட்சாதிபதி, கோடீஸ்வரனைக் கேட்டால், ஏழைபோல் இல்லாமல், அவன் கையில் இருக்கும் சிறிய தொகையைக் கொடுத்தால், அது ஏழையின் கையில் இருப்பதைப் போல் ஆயிரம் மடங்கு இருக்கும். ஒரு கோடீஸ்வரன் ரூ. 100 கொடுப்பானானால், அந்த ஏழை கொடுத்ததைவிட ஆயிரம் மடங்கு அதிகமாகிவிடும். அப்படி ஒரு சாதாரண மனிதன் அவ்வளவு ஒத்தாசை செய்யும்போது எல்லாம் வல்ல ஈசன் நமக்குக் கொடுக்கக்கூடிய அளவு இவ்வளவுதான் என்று சொல்ல முடியாது. இதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள்,

வேண்டத் தக்கது அறிவோய் நீ!
வேண்ட முழுவதும் தருவோய் நீ!
வேண்டும் அயன் மாற்கு அரியோய்நீ!
வேண்டி, என்னைப் பணிகொண்டாய்;
வேண்டி நீ யாது அருள் செய்தாய்,
யானும் ,அதுவே வேண்டின் அல்லால்,
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்,
அதுவும் உன்தன் விருப்பு அன்றே''

என்று பாடியிருக்கிறார். இந்தப் பாட்டை நான் அடிக்கடி என் மனதில் பாடுவது உண்டு. சிற்சில சமயங்களில் மனதைவிட்டு உரக்கப் பாடுவதும் உண்டு. இப்படி நான் மனதை விட்டுப் பாடிக்கொண்டிருக்கும்போது, என் அருகில் வந்த என் மகள் ''என்ன அப்பா! வேண்டத்தக்கது எல்லாம் சுவாமிக்குத் தெரிந்திருக்கலாம். ஆனால் அவர் எங்கே நீங்கள் கேட்டதை எல்லாம் கொடுக்கிறார்?'' என்றாள். அதற்கு நான் நீ முதல் வரியைச் சரியாகக் கவனிக்கவில்லையா? ''வேண்டத்தக்கது அறிவோய் நீ'' என்று அல்லவோ, பாடலின் முதல் வரியே தொடங்குகின்றது என்பேன்.

அதாவது நாம் எதனை வேண்டலாம், நமக்கு எதுவேண்டும் அல்லது தேவை என்பது கடவுளுக்குத் தெரியும். நமக்கு அதைக் கொடுக்கவும் அவருக்குத் தெரியும் என்று சொல்லிவிட்டு, ஒரு உதாரணம் சொன்னேன். மூன்று வயதுள்ள ஒரு குழந்தை, தன் தாயாரை எனக்கு அதுவேணும், இது வேணும் என்று கேட்கிறது. தாயாருக்கு அந்தக் குழந்தையிடம்

அளவுகடந்த ஆசை. ஒரே குழந்தை. அந்தக் குழந்தை வரமிருந்து தவமிருந்து பெற்ற குழந்தை. கல்யாணம் ஆகிப் பல வருடங்கள் புண்ணியத் தலங்களுக்கெல்லாம்போய்ப்பூசித்த தன் பலனாகப் பெற்ற குழந்தை. இந்தக் குழந்தை, அம்மா எனக்கு சாக்லேட் வாங்கித் தா என்று சொன்னால், சாக்லேட் வாங்கிக் கொடுக்கிறார்கள். கோவிலுக்குப் போகும் போது வழியில் கடையில் ஒரு சொப்பைக் காட்டி, அந்தச் சொப்பு அழகாக இருக்கிறது, அது வேண்டுமென்று கேட்டால், உடனே வாங்கிக் கொடுக்கிறார்கள். அந்தத் தாயார் வாங்கும்போது, அந்த வீட்டு வேலைக்காரன், இந்தக் கடைக்காரன் விலை அதிகமாகச் சொல்கிறான், இந்தச் சொப்பை நான் நேற்றுப் பாதி விலைக்கு வாங்கினேன் என்று சொல்கிறான். அவன் சொல்வதைத் தட்டிவிட்டு, குழந்தை அழுகிறது என்று நினைத்து விலையைப் பொருட்படுத்தாமல் உடனே வாங்கித் தருகிறார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்தக் குழந்தை ஒரு அகல் விளக்கு எரிவதைப் பார்க்கின்றது. அதைப் பார்த்து அம்மா எனக்கு எரியும் அந்த அகல் விளக்கு வேண்டுமென்று கேட்கிறது. குழந்தை கேட்டதை எல்லாம் வாங்கித் தந்த தாயார், இந்த எரியும் அகல்விளக்கை வாங்கிக் கொடுப்பாரா? கொடுக்கமாட்டார்கள். ஏனென்றால் எரியும் அகல்விளக்கைக் கொடுத்தால், துணியையும் உடலையும் கொளுத்திக் கொள்ளும். ஆகவே எரியும் அகல்விளக்கைக் கொடுக்க மாட்டார்கள். குழந்தை அழுகிறது, அடம் பிடிக்கிறது. எரியும் அகல் விளக்கை மறுப்பதற்காக, எவ்வளவோ விளையாட்டுக் காட்டி அதை மறக்கச் செய்வார்கள்.

இதைப்போலவே எல்லாம் வல்ல கடவுளுக்கு, நமக்கு எது நல்லது? எதனால் நாம் பயன் அடைவோம்? என்று தெரியும். ஆனால் நம்முடைய சிறிய அறிவினால், நமக்கு எது நல்லது, எது கெட்டது என்று தெரிந்துகொள்ள முடிவதில்லை. எவ்வளவு கெட்டிக்காரனாக இருந்தாலும், தப்புச் செய்ய மாட்டான் என்று சொல்ல முடியாது. உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தாலும், தப்பு செய்யலாம். அப்படி அவர் தப்பு செய்வாரானால், உச்சநீதிமன்ற நீதிபதி, அதைத் திருத்த இருக்கிறார். அந்த உச்ச நீதிமன்றத்தில் தவறு ஏற்படுமானால், அதை யார் திருத்துவது? இப்படி ஓரளவுதான் மனித முயற்சி. எல்லாம் வல்ல கடவுள் ஒருவரால்தான், தவறு ஒன்றும் இல்லாமல், எப்பொழுதுமே நியாயமாக எதையும் செய்ய முடியும். 1,000 பேர் அல்லது 10,000 பேர் இருந்தாலும், எல்லோருக்கும் கொடுக்கக்கூடிய சக்தி அவர் ஒருவருக்கே உண்டு. இதே பொருளைத்தான் இராமலிங்க சுவாமிகளும், பரசிவ நிலை என்ற பதிகத்தில்,

அருட்சோதித் தெய்வம்எனை ஆண்டுகொண்ட
தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்,
பொருட்சாரும் மறைகள்எலாம் போற்றுகின்ற
தெய்வம்,
போதாந்தத் தெய்வம்உயர் நாதாந்தத்
தெய்வம்,
இருட்பாடு நீக்கிஒளி ஈந்தருளும் தெய்வம்,
எண்ணியநான் எண்ணியவா றெனக்கருளும்
தெய்வம்,
தெருட்பாடல் உவந்தெனையும் சிவமாக்கும்
தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்றதெய்வமேதெய்வம்

இதில் ''எண்ணிய நான் எண்ணியவாறு எனக்கு அருளும்தெய்வம்'' என்று பாடுகின்றார் இராமலிங்க சுவாமிகள். கேட்டால்தான் கடவுள் கொடுப்பார் என்று கிடையாது. கேளாமலும் கடவுள் நமக்குக் கொடுப்பார். நான் மேலே சொன்னபடி, நாம் பெறுவதற்குத் தகுதி உடையவராக இருக்க வேண்டும். நாம் கேட்டதால் நமக்கோ பிறருக்கோ கெடுதல் வரக் கூடாது. ஏனென்றால், கடவுளுக்கு உலகத்திலுள்ள அனைத்துச் சீவராசிகளும் சமம்; எல்லாம் அவருடைய குழந்தைகள். அதனால் அவர் எந்தச் சீவனும் துன்பப்படச் சம்மதிக்க மாட்டார். இப்படியெல்லாம் இயற்கைக்கு விரோதமில்லாதவாறும், அதே சமயத்தில் நம்மால் பிறரும் முன்னேற முடியுமானால் அதற்கு ஏற்றவாறும், எதனையும் கடவுள் நமக்குக் கருணையுடன் தருவார். அவரை அண்டி அன்புடன் வணங்கி, யார் எதைக் கேட்கிறார்களோ அதை அவர் கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கேட்பவர்கள், சில சமயங்களில் சிறியபொருளைக் கேட்கிறார்கள். நம் வீட்டிலேயே சில விசேட நாட்களில், பல தின்பண்டங்கள் செய்கிறார்கள். பல தின்பண்டங்களை ஒரே மேசையில் வைத்திருக்கிறார்கள். நம்மை அழைத்து வேண்டுவதை எடுத்துக்கொள் என்று சொல்கிறார்கள். அப்பொழுது எல்லோருமே நல்ல பண்டத்தைத்தான் எடுக்கிறார்கள் என்று கிடையாது. விலை உயர்ந்த பாதம் அல்வாவாக இருக்கலாம், மட்டமான சுண்டலாகவும் இருக்கலாம். பாதம் அல்வாவை விட்டுவிட்டுச் சுண்டலைச் சாப்பிட்டால், அது நம்முடைய குற்றமே தவிர, விருந்துக்கு அழைத்தவர்களுடைய குற்றமில்லை. கந்தர் அனுபூதியில் அருணகிரிநாதர்,

ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியானை சகோதரனே!

இதில் அவர் கேட்பது முருகப்பெருமானைக் குறித்து, ''அய்யனே! எனக்கு ஒரு வேலை வேண்டும். என்ன வேலை என்றால், நான் உன்னுடைய ஆடுகின்ற மயிலையும் வேலையும் சேவலையும் பாட வேண்டும். அவை முருகனுடைய அணிகள். ஆடுகின்ற மயில் முருகனுக்கு வாகனம். வேல் அவனுடைய சிறந்த ஆயுதம். முருகனுடைய கொடி சேவற்கொடி. அதைப் பற்றிப் பாடவேண்டுமென்று, அதையே தொழிலாகக் கொடுக்க வேண்டுமென்று பாடுகிறார். முருகனிடம் போய் எனக்குக் காசு பணம் கொடு என்று கேட்காமல், அவனுடைய சின்னங்களைப் பாடும் பணியையே கேட்கிறார். முருகா என்று நேரிடையாகச் சொல்லாமல், அடைமொழியாகக் கஜமுகாசுரனைச் சண்டையில் அழித்த விநாயகப் பெருமானின் சகோதரனே என்று முருகனை அழைத்து அந்த வரத்தைக் கேட்கிறார். நாம் எப்பொழுதும் ஒருவரை அணுகி அவரிடம் நேரிடையாகப்

பேசாமல், உன் அண்ணன் தெரியும், அப்பாவைத் தெரியும், அவர் சிறந்தவர் என்றெல்லாம் சொல்லி, பிறகு இந்த வேலையாக வந்தேன் என்று சொல்லுவோம். இப்படி ஒரு வரம்போ எல்லையோ இல்லாத சக்தி வாய்ந்த ஒருவருடைய சிபாரிசு வேண்டுமானால், அவர் கடவுள் ஒருவர்தான். அவரிடம் இன்னதுதான் கேட்கலாம். இன்னது கேட்கக்கூடாது என்று கிடையாது. நாம் எதை வேண்டுமானாலும் கேட்கலாம். எது நல்லதோ அதைக் கொடுப்பார். கேட்பதற்கு நமக்கு உரிமை உண்டு. அதைப் பெறுவதற்கு நாம் தகுதி உள்ளவர்களாக இருக்க வேண்டும். என் கடன் பணி செய்து கிடப்பதே என்று இருக்க வேண்டும்.

கீதையில் பல இடங்களில் அர்ச்சுனன் கண்ணபிரானிடம் பல வரங்கள் கேட்கிறான். மகாபாரத யுத்தம் ஆரம்பிக்கப்படுகிறது. அர்ச்சுனன் எதிர்ச்சேனையில் உள்ளவர்களைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். அப்படிஅவன் ஆசைப்படுவதற்கிணங்கக்கண்ணபிரானும் தேரை எதிர்ச் சேனைக்கு எதிராகக் கொண்டு நிறுத்துகிறான். அப்போது அர்ச்சுனன் எதிர்ச் சேனையில் உள்ள தனது குருமார்களையும், பாட்டன்மார்களையும், சகோதரர்களையும், புத்திரர்களையும், பேரன்மார்களையும், இப்படி பலவிதமான உறவினர்களையும் சிநேகிதர்களையும் பார்க்கிறான். பார்த்து அவர்களை எப்படிக் கொல்வது? அவர்களைக் கொன்று அரசாட்சியை அனுபவிப்பதைவிட, பிச்சை எடுத்து உயிர்பிழைப்பது நல்லதல்லவா? என்று பகவானைக் கேட்கிறான். அதே சமயத்தில் கையில் இருந்த வில்லைத் தூர எறிந்துவிட்டு, மனத்தில் எழும்துயரத்தினால்சோர்ந்து வீழ்ந்து விடுகிறான். போர் செய்ய மாட்டேன் என்று சொல்கிறான். இப்படி பலவிதமாக ஒன்றுக்கொன்றான மாறுபாடான செய்கைகளை அர்ச்சுனன் செய்கிறான். அதைப்பார்த்த கண்ணபிரான் புன்சிரிப்புடன் அர்ச்சுனனை நோக்கி, மேன்மக்களுக்கு ஒவ்வாத இந்தச் செயல்கள் உனக்கு எங்கிருந்து வந்தன? போரை விரும்புவது வீரனுக்குரிய இயல்பான தருமம் அல்லவா? என்று சொல்லி, கீதை உபதேசத்தையும் ஆரம்பிக்கிறார்.

கீதை உபதேசத்தை ஆரம்பித்தவுடன் அவ்வப்போது அர்ச்சுனனுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. அந்தச் சந்தேகம் வரும்போதெல்லாம் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்கிறான். பிறகு பகவானுடைய சுய சொரூபத்தைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிறான். அதற்கிணங்க அவரும் விசுவரூப தரிசனத்தைக் கொடுக்கிறார். அப்படி காட்டும்போது, உன்னுடைய சாதாரண கண்களாலே என் உருவத்தைப் பார்க்க முடியாது என்று சொல்லி, அர்ச்சுனனுக்குத் தெய்விகப் பார்வையைக் கொடுக்கிறார். அப்போது அர்ச்சுனன் பகவானுடைய சொரூபத்தைப் பார்த்துப் பயம் மிகுந்து, சிநேகபாவனை ஒடுங்கி, தான் பகவானை 'அடே கிருஷ்ணா' 'அடே யாதவா' 'அடே நண்பா' என்று எல்லாம் முன்புஅழைத்ததை நினைந்து, அப்படி கூப்பிட்டதற்காக மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு, சிநேகிதனைச் சிநேகிதன் மன்னிப்பது போலவும், காதலன் பிழையைக் காதலி மன்னிப்பது போலவும் தன்னை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு, பழைய உருவத்தையே மீண்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறான். இதற்கிணங்கப் பகவான் பழையபடி மனித உருவத்தை எடுத்துக் கொள்கிறான். கீதையிலே பகவான் ''எனக்கு வேண்டத்தக்கவன் என்று ஒரு மனிதன் கிடையாது. வேண்டத்தகாதவன் என்று ஒரு மனிதன்கிடையாது. ஆனால் எவன் ஒருவன் என்னிடம் பக்தியுடனும் ஆசையுடனும் இருக்கிறானோ அவனிடம் நான் பிரியமாய் இருக்கிறேன்'' என்கிறார்.

அர்ச்சுனனும் அவன் சகோதரர்களும் எவ்வளவு துன்பம் வந்தாலும், பகவானிடம் அன்பிற் குறைவது இல்லை. எப்பொழுதும் பகவானிடம் அன்பு செலுத்துவதன் காரணமாகப் பல துன்பங்கள் வந்தாலும், அவற்றை அவர்களால் சமாளிக்க முடிகிறது. ஆனால் வாழ்க்கையில் நாம் கொஞ்சம் துன்பம் ஏற்பட்டாலும்கூட, மனம் உடைந்து, பகவான் என்று ஒருத்தர் இருக்கிறாரா? என்று, பகவானைச் சாதாரணமாக நிந்திக்கிறோம். நாம் செய்யும் தவறுகளை நினைப்பதே கிடையாது. துன்பம் வரும்போது பகவானை நிந்திப்பது தான் நம் வழக்கம். சுகமாய் இருக்கும்போது பகவான் என்ற ஒருவர் இருக்கிறார் என்றுகூட, நாம் நினைப்பது கிடையாது. அப்படியின்றி, பகவானிடம் உறுதியான ஆழ்ந்த அன்பு செலுத்தியதின் காரணமாக, அர்ச்சுனனுக்கு, அவன் கேட்டபோதெல்லாம், பகவான் அருள்செய்து கொண்டே இருக்கிறார்.

அர்ச்சுனனே பகவானிடம் சொல்கிறான், ''ஞானம் விசேஷம் என்று சொல்லும்போது, ஞானம்தான் விசேஷம் என்றால், என்னை ஏன் கொடுமையான யுத்தத்தைப் புரியும்படி சொல்கிறாய்'' என்று கேட்கிறான். அதற்கு அவர் ''ஞானம் விசேஷம்தான். ஆனால் அவன் அவனுக்கு வாழ்க்கையில் விதிக்கப்பட்ட கடமையைச் செய்ய வேண்டும்'' என்கிறார். விதிக்கப்பட்ட கருமத்தைச் செய்ய வேண்டுமே தவிர, இன்ன இன்ன கருமத்தால் இன்ன இன்ன பயன் வரவேண்டுமென்று கருதுவது கூடாது என்கிறார். அதே சமயத்தில் கருமம் செய்யாமலே இருக்கவும் முடியாது என்று சொல்கிறார். இது எப்படி இருக்கிறதென்றால், தாய் குழந்தையிடம் ஆசை உள்ளவளாக இருந்தால், இனிக்கும் லட்டு மிட்டாய் போன்ற தின்பண்டங்களைக் கொடுக்காமல், விளக்கெண்ணெய் கொடுப்பதுபோல இருக்கிறது. எப்பொழுது பார்த்தாலும் இனிப்பே குழந்தைக்குக் கொடுத்துக் கொண்டிருந்தால், குழந்தையின் உடல் நிலை கெட்டுவிடாதா? ஆகவே ஒரு மாதத்திற்கு ஒருமுறையாவது விளக்கெண்ணெய் கொடுத்தால்தான் நல்லது.

குழந்தை கேட்கிறது என்று எப்பொழுது பார்த்தாலும், தின்பண்டங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தால், குழந்தை தன் தாயை நல்ல அம்மா என்று சொல்லும். குழந்தை நல்ல அம்மா என்று சொல்ல வேண்டும்என்று, அதற்கு எப்பொழுதும் தின்பண்டம் கொடுத்

துக் கொண்டிருந்தால், அக்குழந்தையின் உடல் நிலை என்னவாகும். நாமெல்லாம் குழந்தை போல் இருக்கிறோம். பகவான் தாய்போல் இருக்கிறார். நமக்கு எது நல்லதோ அதைத் தயங்காமல் கொடுக்கிறார். அவர் நாம் வேண்டுகின்ற எல்லாவற்றையும் தரக்கூடிய வர்; வேண்ட முழுதும் தருவது அவர் இயல்பு தான். ஆனால் நாம் வேண்டத்தக்கதை அறிந்து, அவர் நமக்குத் தருவார். நமக்கு எது வேண்டும், எது நல்லது என்று கடவுளுக்குத் தெரியும், நமக்கு எது எது வேண்டும், எது எது நல்லது என்று உண்மையில் நமக்குத் தெரி யாது. நாம் நல்லதைத் தீயதாகவும், தீயதை நல்லதாகவும் நினைத்துக் கொள்வோம். அத னால் பின்னர், பலவகைத் துன்பங்களை அடை வோம்.

'' நம்முடைய அறியாமையினால், நாம் நமக்குத் தீமை தருவனவற்றையே இறைவ னிடம் வேண்டுகின்றோம்; ஆனால் பேராற்ற லும் பேரறிவும் மிக்க அவரோ! நம்முடைய நன்மைக்காகவே, அவற்றை நமக்குத் தர மறுக்கின்றார். அதனால் நாம் நம் பிரார்த் தனை நிறைவேறாவிட்டாலும், அதன்மூலம் நாம் பெரும்பயன் அடைவதையே காண்கின் றோம்.''

" We, ignorant of ourselves,
Beg often our own harms,
Which the wise powers
Deny us for our good. So find we profit
By losing our prayers"

—**William Shakespeare.**

அதனால்தான் மாணிக்கவாசகர், ''அடி யேன் விரும்பத்தக்க பொருள்கள் இவை என் பதை யான் விண்ணப்பிக்காமலே அறிபவன் நீ; அடியேன் அஃதறிந்து, நின் திருவுள்ளக் குறிப் பின் வண்ணம் வேண்டிக் கொள்ள, அவை முழுதையும் அருள்பவனும் நீயே; இடைவிடாது அதுவேண்டும் இது வேண்டும் என்று வேண்டிக் கொண்டேயிருக்கின்ற திருமாலுக்கும் அயனுக் கும் அரியவன் நீ; அடியேன் தகுதி அறிந்து, அடியேனை விரும்பிப் பணியாளாக ஏற்றனை. 'இவ்வடிமைக்கு இதுபோது இன்னது வேண் டும்' என்று நீ எதனை விரும்பி அருள்செய் தாயோ, அதனை அடியேனும் விரும்புவதன்றி, என்னால் விரும்பப்படும் தன்மையது ஒன்று வேறாக உண்டானால் அதுவும் தேவரீர் திரு வுள்ளக் குறிப்பேயாம்'' என்னும் கருத்தமையப் பாடுகின்றார்.''

''வேண்டத் தக்கது அறிவோய் நீ!
வேண்ட முவதும் தருவோய் நீ!
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
வேண்டி, என்னைப் பணிகொண்டாய்,
வேண்டி, நீ யாது அருள் செய்தாய்,
யானும், அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்,
அதுவும் உன்தன் விருப்பு அன்றே''

---

# 'தாண்டக வேந்தர்'

'தாண்டகவேந்தர்' என்பது திருநாவுக்கரசர்க்கு வழங்கப்பெறும் சிறப்பியற் பெயர். 'தாண்டகம்' என்பது தொல்காப்பியச் செய்யுளின்படி, எண்சீரான் வந்த கொச்சக ஒரு போகு என்னும் செய்யுள் ஆகும். அடிதோறும் நான்காம் சீரும் எட்டாஞ்சீரும் தேமாவாக நிற்ப, மூன்றாஞ்சீரும் ஏழாஞ்சீரும் பெரும்பான்மை தேமாவாகவும், சிறுபான்மை புளிமாவாகவும் அமைய, ஏனைய ஒன்று இரண்டு ஐந்து ஆறாம் சீர்கள் பெரும்பாலும் காய்ச்சீர்களாகவும், சிறுபான்மை மாச்சீர் விளச்சீர் களாகவும் வருதல், தாண்டகம் என்னும் பாவின் இலக்கணம் ஆகும்.

எண்சீரான் வரும் தாண்டகப் பாக்களில், அடிதோறும் மூன்று நான்கு ஏழு எட்டாம் சீர்களை விலக்கிவிட்டு, ஏனைய நான்கு சீர்களையும் இணைத்து நோக்கினால், அப்பாடல் கொச்சகக் கலிப்பா என்னும் செய்யுள் வடிவில் அமையும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் ஒற்றும் குற்றுகரமும் நீக்கி, 4 எழுத்து முதல் 20 எழுத்து ஈறாக வகுத்துரைத்த 17 நிலத்து 5 வகை அடிகளிலும், கழிநெடில் அடிக்கு உரிய மேல் எல்லையாகிய 20 எழுத்து என்னும் வறையறையைத் தாண்டி, இருபதின் மேற்பட்ட எழுத்தால் மிக்கு வருதலின், இக்பாடல்கள் தாண்டகம் எனக் காரணப் பெயர் பெற்றன.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருமங்கையாழ்வாரும் திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம் என்பனவற்றை அருளிச் செய்துள்ளார்.

'தாண்டகம்' என்னும் வடமொழிச் செய்யுள் வகையினை அடியொற்றிப் பிற் காலத்தவரால் பாடப்பெற்று, யாப்பருங்கல விருத்தியுரையில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ள தாண்டகச் செய்யுட்கள், தேவாரத்திலும் திவ்வியப் பிரபந்தத் திலும் அமைந்து விளங்கும் திருத்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந் தாண்டகம் என்னும் பாடல்களுக்கு வேறானவையாகும்.

திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகங்கள், கழிநெடில்அடிக்கு மேல் எல்லை யாகிய 20 எழுத்து என்னும் அளவினைத் தாண்டி, 27 எழுத்திற்கு உட்பட்டு வருவன ஆகும். யாப்பருங்கல விருத்தியுரையில், தண்டகம் என்னும் வடமொழிச் செய்யுள் இலக்கணப்படி வரும் செய்யுட்கள், 27 எழுத்து முதலாக அவற்றின் மிகுந்த பல எழுத்துக்களைக் கொண்டனவாகும். இவை இரண்டு வகைக்கும் உள்ள வேறுபாடு இது. 'தாண்டகம்' என்பது 'தண்டகம்' என்னும் சொல்லின் தத்திதாந்தப்பெயர்.

# திருமகள் மாலை

(வெண்பா அந்தாதி)

கவிஞர் திரு. இராகவன் முத்து, B.Sc., Dip.Geog. CAIIB

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired
HR&CE Administration Dept

(காப்பு)

செல்வத் திருமகள்மேல் செய்யும் தமிழ்மாலை
கல்லில் எழுதிவளர் காவியமாய்த்-தொல்லுலகில்
என்றும் வளர்ந்துயர ஈசன் தலைமகனே!
ஒன்றிடுவாய் என்றன் உளத்து. (1)

(ஆதி லட்சுமி)

உன்னைத் தொழுதேன் உயிர்க்குப் புகலுதவும்
பொன்னே! முதல்திருவே! பூவிருக்கும்-அன்னே
எனதுள்ளம் என்றும் இனிப்பே அடையக்
கனிவுனது கண்மலராற் காட்டு. (2)

(சந்தான லட்சுமி)

காட்டும் திருக்கரத்தால், கந்தன் எனஅழகு
கூட்டும் மழலையால், கும்பத்தால்-நாட்டில்
நிறைவளிக்கும் தாயே! நிகரில்லாத் தேனே!
துறையெதிலும் இன்பம் துலக்கு. (3)

(கஜலட்சுமி)

துலங்குபொற் கும்பத் துதிக்கையால் ஆனை
நலங்கெழுநீர் ஆட்ட நயந்த-இலங்கிழையே!
கையேந்தி உன்பாற் கசிந்து தொழுகின்றேன்
செய்யவளே! சீரெனக்குச் செய். (4)

(தனலட்சுமி)

செய்ய திருமேனி செம்பொன் அணிசெறியக்
கையிருக்கும் தம்பலத்துக்காரிகையே!-வையகத்தில்
என்றும்பொன் மாரியினால் இன்பம் தழைத்துயர
என்றென்றும் எம்பால் இரு. (5)

(தானியலட்சுமி)

இருக்கும் இடமெங்கும் இன்கனியும் பூவும்
பெருக்கி மகிழ்வுதவும் பெண்ணே!-பருக்கரும்பை
ஏந்தும் திருமகளே! எங்கள் கழனியெல்லாம்
சேர்ந்து வளங்கொழிக்கச் செய். (6)

(விசயலட்சுமி)

செய்யும் செயலெல்லாம் சீரோங்க வெற்றியினைப்
பெய்தளித்துக் காக்கும் பெருமாட்டி!-கையில்
வலத்தாழி சங்கிடத்தாய்! வாழ்வில் நிறைவே
நிலைத்திருக்க என்றும் நினை. (7)

(மகாலட்சுமி)

நினைத்துத் தொழுதெழுந்தோம் நேயத் திருமால்
மனைக்கு விளக்கே! மலரால்-உனக்கடிமை
செய்ஆனை போலுயர்ந்த சீர்கொண் டிலங்கவே
தையால்நீ யீவாய் தரம். (8)

(வீரலட்சுமி)

தரமுயர்ந்த வீரம் தருக்கர்களை வாட்டக்
கரவுமருவு போர்க்கருவி காட்டி-வரமளிக்க
வாகை புனைந்திலங்கும் வல்லி! நீ எம்மனையிற்
சேர்க எனப்பணிந்தோம் சேர்ந்து. (9)

(தொகை)

சேர்ந்து பொருள்வளரச் செய்வாய் திருமகளே!
ஏந்துபுகழ் செல்வமெலாம் எய்தியாம்-வேந்தரென
மன்னுலகில் வாழ மலர்மகளே! மாயனுடன்
உன்னருளை இன்னே யுதவு. (10)

# ஏகம்பம்

கவிஞர் திரு. அ. சச்சிதானந்தம், B.Sc.,
காஞ்சிபுரம்

*[''ஏகம்பம்'' என்னும் சிறந்த இனிய இந்தச் செந்தமிழ்க் கவிதை, காஞ்சிபுரத்தில் உள்ள ''திருக்கச்சி அனேகதங்காவதம்'' என்னும் திருத்தலத்தினைக் குறித்து, ஆளுடைய நம்பிகள் என்னும், சுந்தரர் பெருமான் அருளிய ''தேன்நெய் புரிந்துழல் செஞ்சடை எம்பெருமானது இடம்'' எனத் தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தினை அடியொற்றி, அழகுற இயற்றப் பெற்றுள்ளது; அரிய பொருட்செறிவும் அமைந்து திகழ்கின்றது. —ஆசிரியர்]*

தேமதுரைத் தமிழோசை கேட்குமிடம் ; அடியார்கள்
சிந்தையினில் திகழும் இடம் ;
நாமமது நாளும்மொழி நல்லார்க்கு நன்மையே
நாயகன் அருளும் இடம்;
மாமரமாய் நால்வேதம் நின்றஇடம்; வானவர்கள்
வழிபாடு செய்யும் இடம்;
சேமமுறத் தேவியொடு மேவுசிவன் வாழுமிடம்
செல்வமலி ஏகம்பமே ! (1)

மூவரொடு முனிவர்களும் மொய்த்தணுகி நின்றஇடம்;
முத்தமிழ் வளர்த்த இடம்;
ஆவலொடு மேவிவந் தன்புடன் அணுகுவார்க்கு
அனைத்தையும் அளிக்கும் இடம்;
மாவடியின் கீழ்ஈசன் மங்கைநல் லாளொடு
மகிழ்ந்தென்றும் வயங்கும்மிடம்;
பாவமது தீருமிடம்; பக்தர்பலர் கூடுமிடம்;
பார்போற்றும் ஏகம்பமே! (2)

பாயுமொரு மால்விடைப் பாகனிடம்; பாவையோர்
பாகனாய் ஆனானிடம்;
தாயனென உலகிற்கு நின்ற இடம்; ஒப்பிலாத்
தத்துவன் ஆன இடம்;
தூயதிரு நீறணிந் தைந்தெழுத் தோதியே
துதிப்பவர்கள் வாழும்மிடம்;
நேயமுடன் திருமுறைகள் பாடுவோர்க் கருளுமிடம்;
நெஞ்சில்நிறை ஏகம்பமே! (3)

ஆலமமு தாகவுணும் சீலனவன் மேவுமிடம்;
அடைக்கலம் அளிக்கும்மிடம்;
காலம்பல கண்ட இடம்; கருணைமழை பொழியுமிடம்;
கம்பைநதி பாயும்மிடம்;
கோலமிகக் கொண்டஇடம்; குமரனொடு வாழுமிடம்;
குறையாவும் தீர்க்கும்மிடம்;
ஏலவார் குழலியுடன் எம்மான் அமர்ந்தஇடம்
எழிலார்ந்த ஏகம்பமே ! (4)

நால்வரும் நற்றமிழ் பாடி நயந்தஇடம்; நாவேத்த
நாளும்நலன் நல்கும்மிடம்;
மால்வரையின் கீழன் றரக்கனை யடர்த்திட்ட
மங்கையுமை பாகன்னிடம்;
பால்வடியும் பிறைஅரவு, தும்பைநதி, கொன்றைமலர்
பாங்குற அணிந்தானிடம்;
ஆல்விழுதின் கீழமர்ந்தொரு நால்வர்க் கறஞ்சொன்ன
அண்ணலிடம் ஏகம்பமே! (5)

பண்ணிழையப் பலபதிகம் அமுதமெனச் செந்தமிழில்
பதிகள்தொறும் பாடியுருகி,
நண்ணியிவண் வந்ததிரு நம்பியா ரூரர்க்கு
நயனமொன் றளித்தஇடம்;
நுண்ணிடையள், அழகுதிரு காமாட்சி யம்மையவள்
நோற்றஇடம்; நூலோரிடம்;
மண்ணிடையே கடவுளர்கள் வந்துதுதி செய்யுமிடம்;
வளமார்ந்த ஏகம்பமே! (6)

பற்பலவாய் மதுரையிலே அற்புதம் நிகழ்த்திமுன்
பைந்தமிழை ஆய்ந்தோன்இடம்;
சிற்சபையாம் தில்லையிலே நடனமிடும் செல்வனிடம் ;
செஞ்சடையன் வாழும்மிடம்;
கற்பனைகடந்த இடம்; கங்குல்பகலற்ற இடம்;
கயிலைமலை நாதன்னிடம்;
கற்பவர்தம் சிந்தையிலே சொற்பொருள்போல் தோன்றுமிடம்
கச்சிநகர் ஏகம்பமே! (7)

மும்மலமும் மாயுமிடம்; முத்தியை யளிக்குமிடம்;
முப்புரமெரித் தானிடம் ;
கைம்மலர்கொண் டர்ச்சித்துக் காதல் கொண்டேத்துவார்
கடியவினை தீர்க்கும்மிடம்;
செம்மலென நின்றஇடம்; சேந்தனையும் கொண்டஇடம்;
செங்கண்மால் போற்றும்மிடம்;
அம்மையுடன் அப்பனும் அமர்ந்த இடம்; அழகனிடம்
அணியார்ந்த ஏகம்பமே! (8)

நீருருவன், நிலவுருவன், வானுருவன், வளியுருவன்,
நெருப்பினுரு வானோனிடம்;
காருருவன் மலரொருவன் தேடுமிடம்; கண்குளிரக்
காட்சியாம் காணும்மிடம்;
பேருமொரு ஊருமிலாப் பித்தனிடம்; பக்தர்தம்
பிழையாவும் பெயர்க்கும்மிடம்;
ஓரொருவன், ஈருருவாய் நின்றஇடம்; அருள்பொழியும்
ஓங்குதிரு வேகம்பமே! (9)

ஆசையுடன் அணுகுவோர்க் காசைக ளறுக்குமிடம்;
அழலேந்தி நின்றானிடம்;
பாசவினை தீருமிடம் பரமனருள் கூடுமிடம்;
பக்திநனி பெருகும்மிடம்;
பேசவினி யானிடம்; பேசற்கரியானிடம்;
பிறைசூடி, பெம்மானிடம்;
ஈசனிடம்; எப்போதும் இனியனிடம்; எந்தையிடம்;
எம்மான்றன் ஏகம்பமே ! (10)

# வைகுண்ட நாதன்

திரு. டாக்டர் ந. சுப்பு ரெட்டியார், M.A., Ph.D.

வைகுண்டத்தைத் திருநாடு என்றும், பரமபதம் என்றும், நலம் அந்தம் இல்ல தோர் நாடு(1) என்றும், நித்திய விபூதி என்றும் வழங்குவர் வைணவப் பெரு மக்கள். ஆழ்வார்கள் 'பெருநிலம்' 'பெரு விசும்பு' 'உம்பர் உலகு', 'விண்ணகம்' 'நாரணன் உலகு', 'இன்பவீடு', 'அமரர் உலகம், ''வானோர் கடிநகர்' என்றெல் லாம் பன்னி உரைப்பர். இந்த விளக்கம் வைணவ ஆகமங்களிலும் வேறு வைணவ நூல்களிலும் நுவலப்பெறும் நித்திய விபூதி பற்றிய விளக்கத்துடன் ஒத்துள்ளது. இந்த உலகின் ஆநந்தம் அளவிறந்து ஒப்பற்ற தாக இருக்கும் பான்மையது. இங்குத் திவ்விய கற்பகச் சோலைகள், நானாவித மலர்கள் நிறைந்த திவ்விய பூங்காக்கள், திவ்விய இள மரக்காக்கள், திவ்விய செய் குன்றங்கள், நீராடும் திவ்விய தடாகங்கள் முதலியவை நிறைந்து இருக்கும். இங்கு மிகவும் இடமகன்ற நிரதிசய ஆனந்தமய மான திருமாமணி மண்டபம் ஒன்றுண்டு. உபய விபூதியிலுள்ளவர்களும் ஒரு மூலை யில் அடங்கும்படியான மிக விசாலமானது. இங்குள்ள பொருள்கள் யாவும் சுத்த சத்துவத்தாலானவை. இங்குக் காலம் நடையாடாது; காலை - மாலை, பகல்- இரவு, இன்று-நேற்று என்ற நிலைகள் இங்கு இல்லை. முன்-பின் என்ற நிலை உண்டு. வீடுபேறு அடைவதற்கேற்ற உபா யங்களைக்கையாண்டு அவன் திருவருளைப் பெற்ற முமுட்சுகள்தாம் இந்த நீள் விசும் பினை அடைதல் முடியும். இவர்கள் இப்பூவுலகிற்குத் திரும்பி வருதல் இல்லை. பிரளய காலத்தில் 'இவர்கட்கு அழிவு இல்லை. இறைவன் திருவுளப்படி எந்த உருவத்தையும் இவர்கள் மேற்கொள்வர்.

பரமபத நாதன் வீற்றிருக்கும் இடம் இந்த மண்டபத்தில்தான். இவன் வீற்றி ருக்கும் சீரிய சிங்காசனம் அற்புதமான கோப்புடையது; பன்னிரண்டு இதழ்களை யுடைய நானா சக்திமயமான திவ்விய பொற்றாமரைப்பூவின் மீது விசித்திரமான கட்டிலைக்கொண்டது. இந்தக் கட்டிலின் மீது பல்லாயிரம் சந்திரர்களை உருக்கி வார்த்தாற்போல் குளிர்ந்த தன்மையை யுடைத்தான திருமேனியையுடையனாய கல்யாண குணங்கட்கு அந்தமில்லாமை யினால் அநந்தன் என்ற திருநாமமுடைய வனாய், எல்லாவித அடிமைத் தொழில் புரிபவர்கட்கெல்லாம் உபமான நிலமா யிருத்தலால் சேஷன் என்னும் திருநாம முடையவனாகிய திரு அனந்தாழ்வானா கிய படுக்கையில் வெள்ளிமலையின் உச்சி யில் பல்லாயிரம் பகலவன் உதித்தாற் போல் இருக்கும் ஆயிரம் பணாமுடி மண்ட லமாகிய சோதிமண்டலத்தின் நடுவில் வீற் றிருப்பன். அருள்தேவியான பெரிய பிராட்டியார் வலப்பக்கத்திலும், பொறைத் தேவியான பூமிப் பிராட்டியாரும், ஆநந்த தேவியான நீளாப் பிராட்டியாரும் இடப் பக்கத்திலும் இருப்பர். இவன், அனந் தன், கருடன், விஷ்வக்சேனர் முதலான நித்திய சூரிகளும், இவ்வுலகத் தளைகளி னின்றும் விடுபட்ட முக்தரும் அநுபவித் தற்கு உரியனாய் இருப்பன்.

இந்த எம்பெருமான் சத்தியம், ஞானம், ஆனந்தம், அனந்தம் இவற்றின் சொரூபமாக இருப்பவன். இடத்தாலும் காலத்தாலும் அளவிடப் பெறாதவன்; எங்கும் நிறைந்திருப்பவன். மூன்றுவித சேதன அசேதன பரிணாமரூபமான வேறு பாட்டின் குறைகள் (விகார தோஷங்கள்) தட்டாதவன். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகைப்பட்ட பலன் களையும் உயிர்கட்கு நல்கி அவற்றின் புக லிடமாக இருப்பவன். தனக்கு, ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். ஞானம், சக்தி, பலம், ஐசுவரியம், வீரியம், தேஜஸ் முத லிய மங்களகுணக் கூட்டங்களால் அலங் கரிக்கப் பெற்றவன். அவனிடம் இக் குணங்கள் ஆதல் அழிதலின்றி எப்பொழு தும் நிறைந்திருக்கும். இவற்றைத் தவிர, வாத்சல்யம், சௌசீல்யம், சௌலப்பியம் முதலிய எண்ணற்ற குணங்களையும் கொண்டவன். இவ்வுலகினைப் படைத் தல், காத்தல், அழித்தல் ஆகியவற்றின் காரண பூதன். சிறார் வீடுகட்டி அழிக்கு மாப்போலே இவை யாவும் இவனுக்குத் தன் இச்சையாலே உண்டாகும் கேவல விளையாட்டேயாகும்.

இறைவனுக்கு உருவம் உண்டு. அது திவ்விய மங்கள விக்கிரகம் எனப்படும்.

1. திருவாய். 2.8:4

''கண்கள் சிவந்து பெரியவாய்,
வாயும் சிவந்து கனிந்துள்ளே
வெண்பல் இலகுசுடர், இலகு
விலகு மகர குண்டலத்தன்,
கொண்டல் வண்ணன், சுடர்முடியன்,
நான்கு தோளன், குனிசார்ங்கன்
ஒண்சங்கு கதைவாள் ஆழியான்
ஒருவன்'' 3

[கனிந்து-பழுத்து; உள்ளே-அகவாயிலே; இலகு-விளங்குகிற; இலகு விலகு-மிக விளங்கி அசைகின்ற; கொண்டல்-மேகம்; குனி-வளைந்த; ஒண்சங்கு-அழகியசங்கு; ஆழி-சக்கரம்]

என்ற பாசுரப் பகுதியில் இறைவனின் திருமேனி காட்டப் பெறுகின்றதை அறியலாம். வேதாந்த தேசிகரின் 'தயாசதகத்தில்' இந்த எம்பெருமானின் திருக்கோலம் நன்கு காட்டப் பெறுகின்றது. இடக்கால் தொங்கிய நிலையிலும் வலக்கால் மடிந்த நிலையிலும் இருக்கும். வலக்கை வலது முழங்காலிலும், இடக்கை அனந்தாழ்வான் உடலில் தங்கியபடியும் இருக்கும். பின்புறத்திலுள்ள இரண்டு கைகளில் திருவாழியும் திருச்சங்கும் பொலிவு பெறும்.

வைகுண்ட நாதனைப் பொய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என்ற ஆறு ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர். பருவுடலுடன் பரமபதத்தை அடைய முடியாததால், இந்த எம்பெருமானை மானசீகமாகத்தான் சேவிக்க வேண்டும். இவன் தெற்கு நோக்கிய திருமுக மண்டலங்கொண்டு இருந்த திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்றான். தாயார், பெரிய பிராட்டியார். ''விண்ணகத்தாய்!''(4) என்று பொய்கையாழ்வாரும், ''வைகுந்தம் உறைவார்''(5) என்று பேயாழ்வாரும் ''வான் இருந்து....ஆதிதேவன்''(6) என்று திருமழிசையாரும், ''வைகுந்தக் குட்டன் வாசுதேவன்''(7) என்று பெரியாழ்வாரும் இவனைக் குறிப்பிடுவர். நம்மாழ்வார் ''அவன் மேவும் வைகுந்தம்''(8) என்றும், ''வானத்து இருக்கும் தேவபிரான்'' (9) என்றும், ''விண் மீது இருப்பாய்'' (10) என்றும் இந்த எம்பெருமானை இனங் காட்டுவர்.

நம்மாழ்வார் ஒரு திருவாய் மொழிப் பாசுரத்தில் வைகுண்டநாதனை அநுசந்திக்கின்றார்.

3. திருவாய். 8.8:1
4. முதல் திருவந்தாதி-68
5. மூன்றாம் திருவந்தாதி-61
6. திருச்சந்த விருத்தம்-48
7. பெரியாழ். திரு. 3.6:3
8. திருவாய். 4.1:1
9. திருவாய். 5.3:9
10. திருவாய். 6.9:5

''தானோர் உருவே தனிவித்தாய்
தன்னின் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்த்
தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி அதனுள் கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன்
வைகுந் தன்எம் பெருமானே''.11

[தான்-ஒருவனாகி நின்ற தான்; ஓர் உரு-ஓர் உருவமுடையவன்; தனி-தனித்த காரணன்; வித்து-உபாதான காரணம்; மூவர்-பிரமன், சிவன், இந்திரன்; பலர்-சேதனர்; மற்றும்-மானிடசாதி; மற்றும்-விலங்கு, பறவை; முற்றும்-எல்லாம்; தான்-சங்கல்பத்துடன் கூடிய தான்; வானோர்-நித்திய சூரிகள்; மாமாயன்-ஆச்சரியமான செயல்களையும் குணங்களையும் உடையவன்; வைகுந்தன்-பரமபதநாதன்.]

பாசுரத்தில் ஆழங்கால்படுவோம். 'தானோர் பெருநீர்..வானோர் பெருமான்' என்பதில் சமஷ்டி சிருஷ்டியும் (தொகுதியான படைப்பும்), 'தானோர் உருவே..முற்றுமாய்' என்பதில் வியஷ்டி சிருஷ்டியும் (வேறுவேறு படைப்புகள்) சொல்லப் பெறுகின்றன. சாந்தோக்கிய உபநிடத வாக்கியத்தில் (6.2 : 1) 'சதேவ', 'ஏகமேவ', 'அத்விதீயம்' என்ற மூன்று சொற்றொடர்கள் உள்ளன. இவை முறையே துணைக் காரணம், முதற் காரணம், நிமித்த காரணம் தவிர வேறு இன்மையைக் காட்டுகின்றன. இந்த மூவகைக் காரணங்களும் எம்பெருமானே என்று கொள்ள வேண்டும். அது போலவே, இப்பாசுரத்தில் 'தான், ஓர், தனி' என் மூன்று சொற்கள் (முதல் அடியில்) உள்ளன. இவற்றுள் 'தான்' என்பதனால் முதற்காரணம் இன்மையும், 'ஓர்' என்பதனால் துணைக் காரணம் இன்மையும், 'தனி' என்பதனால் நிமித்தகாரணம் இன்மையும் பெறப்படுகின்றன. மூன்று காரணமும் இறைவனே என்பது அறுதியிடப் பெறுகின்றது. இதனை மேலும் விளக்குவோம். சூக்கும சித்து அசித்தோடு கூடியிருக்கின்ற தன்மையால் முதற்காரணமும், சங்கல்ப்பத்தோடு கூடியிருக்கின்ற தன்மையால் நிமித்த காரணமும், ஞானம் சக்தி முதலிய குணங்களோடு கூடியிருக்கின்ற தன்மையால் துணைக்காரணமும் ஆக மூன்று காரணங்களும் இறைவனே ஆவான் என்பது தெளிவாகின்றது. கம்ப நாடனும் இக்கருத்தினையே.

''உற்றொரு தனியே தானே
தன்கணே உலகம் எல்லாம்
பெற்றவன்'' 12

என்ற பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளது ஈண்டு ஒப்பு நோக்கி உணரத் தக்கது. ''தானே தன்னந் தனியே சங்கற்பித்துத்

11. திருவாய். 1.5:4
12. கம்ப.யுத்.. வருணனை-63

தன்னுள்ளே உலகங்களையெல்லாம் தந்தவனான பரம்பொருள்'' என்பது இதன் கருத்து. ஏழு நாட்கள் தவமியற்றியும் வருணன் வாராதது கண்டு இராமன் சினங்கொள்ளலானான் என்று குறிப்பிடுமிடத்தில் இக்குறிப்பு வருகின்றது. இக்கருத்தையே வேறொரு முறையில் விளக்குவர் திருமழிசையாழ்வார்.

''தன்னுள்ளே திரைத்துஎழும்
தரங்கவெண் தடங்கடல்
தன்னுள்ளே திரைத்துஎழுந்து
அடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்துஇறந்து
நிற்பவும் திரிபவும்
நின்னுளே அடங்குகின்ற
நீர்மைநின்கண்ணே நின்றதே'' 13

[திரைத்து-கிளர்ந்து; தரங்கம்-அலை; அடங்குதல்-சாந்தமாதல்; நிற்பவும் - நிலைத்திணைப் பொருள்களும்; திரிபவும்-இயங்குதிணைப்பொருள்களும், நின்னுளே-உன் சொரூபத்திற்குள்ளே; நீர்மை -தன்மை; நின்கண்ணே -உன் பக்கலில்; நின்றது-உள்ளது]

அலை எறிவு ஒய்ந்து கிடந்த கடல் காற்று வீசுதலால் எங்கும் அலையெறியப் பெற்று மீண்டும் காற்று ஒய்ந்ததும் அவ்வலையெறிவு அடங்கிக் கடல் சாந்தமாவது போல, பகவத் சங்கல்பம் உண்டாகும் போது நிலைத்திணைப் பொருள்களும் இயங்குதிணைப் பொருள்களும் உள்ள பிரபஞ்சங்கள் தோன்றுதலும், அஃது இல்லாத பொழுது அவை அழிதலுமான நிலைகளையடைந்து இறுதியாக எம்பெருமானிடமே சேர்கின்றன என்பது ஆழ்வார் தெரிவிக்கும் கருத்தாகும்.

மீண்டும் நம்மாழ்வார் பாசுரத்திற்கு வருவோம். ''தன்னில் மூவர்....முற்றுமாய்'' தன்னுடைய சங்கல்பமாகிற சொரூபத்திலே மூவராக நின்றவர்கள் பிரமன், சிவன், இந்திரன் இவர்களுடன் தேவர்கள், சனகாதி முனிவர்கள், நிலைத்திணைப் பொருள்கள், இயங்குதிணைப் பொருள்கள், இன்னமும் சொல்லப் பெறாதவைகள் ஆகியவற்றை உண்டாக்குகைக்காக, 'மூவர் முதலாய வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றும் தன்னில் ஆய்' என்று கொண்டு கூட்டிப் பிரமன், சிவன், இந்திரன் முதலான தேவர்கள் முதலான எல்லாமும் தானேயாகி என்றும் உரைக்கலாம். கப்பும் கிளையுமான மரம் ஒரு சிறிய விதையினுள் சூக்குமமாக உள்ளது என்ற கொள்கைப்படி காரிய நிலையில் பருஉருவ நிலையில் தெரிகின்ற எல்லாப் பொருள்களும் காரண நிலையில் சூக்கும உருவமாக உள்ளன வாதலின், இங்ஙனம் சொல்லுவதில் தவறு இல்லை. இதனால் முன் இரண்டு அடிகளிலும் எம்பெருமானுடைய காரண நிலை கூறப்பெற்றதாகக் கொள்ள வேண்டும்.

''தானோர் பெருநீர்....கண் வளரும்'
இப்படிப் படைப்பதில் ஒருப்பட்ட தான் தனக்கும் கண் வளர்ந்தருளுகைக்குத் தகுதியாகப் பரப்பையுடைத்தான ஒரு பெருங் கடலைத் தன் பக்கல் நின்றும் உண்டாக்கி அதனுட் கண் வளரும். இப்படிப் பெருங்கடலில் சாய்ந்தருளுகின்றவன் ; தான் யார்? என்னில்! ''இவன் நித்திய சூரிகட்குத் தலைவன். ஆச்சரியமான குணங்களையும் செயல்களையும் உடையவன். திருநாட்டைக் கொலுவீற்றிருக்கும் இடமாக உடைய்வன். அவன் என் தலைவன்'' என்கின்றார்.

இங்ஙனம் வைகுந்த நாதனைப் பற்றிய திருப்பாசுரத்தில் ஈடுபட்டிருக்கும் நிலையில் திவ்விய கவியின் பாசுரம் நினைவிற்கு வருகின்றது.

''இடருடையேன் சொல்ல
எளிதோ பிரமன்
அடரும் விடையோற்கும்
அரிதே—தொடரும்
கருவைகும் தம்பிறவிக்
கட்டறுத்து மீளாத்
திருவைகுந் தம்பெறுவார்
சீர்'' 14

[இடர்-துன்பம்; பிரமன்-நான்முகன்; அடரும்-போர் செய்யும்; விடையோன் - எருதை வாகனமாக உடைய சிவன்; தொடரும்-தொடர்ந்து வரும்; கருவைகும்-கருவில் நுழைவதற்குக் காரணமான; தம் பிறவி கட்டு-தமது பிறவித் தளை; அறுத்து-ஒழித்து; மீளா-திரும்பிவருதலில்லாத; பெறுவோர்- அடையப் பெறுபவகளின்; சீர் -சிறப்பு]

''திருமாலோடும் சேர்த்து எண்ணப்படும் நான்முகன் சிவன் ஆகிய இருவராலும் வைகுந்த உலகினை அடைந்த முக்தர்களின் பெருமையைச் சொல்ல முடியாதென்றால் சமுசாரத்தில் உழலும் அறிவுக்கேடனான என்னால் எவ்வாறு சொல்ல முடியும்?'' என்கின்றார் திவ்விய கவி.

---

13. திருச்சந்த விருத்தம்-10

14. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி-103

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

# திருமுருகாற்றுப்படை காட்டும் தமிழர் சமயம்

திரு. டாக்டர் அ. ம. பரிமணம், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்டி.,
தமிழ்த்துறைத் தலைவர், புட்பம் கல்லூரி, பூண்டி, தஞ்சை.

திருமுருகாற்றுப்படை :

இப்போது தமிழ்மொழியிற் கிடைத்துள்ள இலக்கியங்களில் தொன்மைச் சிறப்பு மிக்கன, பாட்டும் தொகையுமென வகைப்பட்டிலங்கும் சங்க இலக்கியங்களாகும். ஒவ்வொரு பாடலும் ஒரு தனி நூல் எனக் கருதத்தகும் பத்துப்பாட்டின் முதற்பாட்டாக அமைந்து விளங்கும் திருமுருகாற்றுப்படை, அத்தொகுப்பு நூலின் கடவுள் வாழ்த்தாகக் கருதப்படும் சிறப்புக்கொண்டது. நக்கீரர் படைத்த திருமுருகாற்றுப்படை கொண்டு அறியலாகும். தமிழர் சமயக் கோட்பாடு பற்றிய செய்திகளைத் தொகுப்பது, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நக்கீரர் :

அகம் புறம் எனப் பாகுபடும் சங்கத் தொகை நூல்கள் பலவற்றில் இடம் பெற்றுள்ள பல பாடல்களின் ஆசிரியராக விளங்கும் நக்கீரர், பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை என்னும் இரு பாடல்கட்கு—நூல்கட்கு ஆசிரியராகத் திகழ்கிறார். தாமியற்றிய அகப்பாடல் பலவற்றில், பல்வேறு புறச் செய்திகளைப் பொதிந்து காட்டும் பாங்கினால் வரலாற்றுப் புலவைராய் (Historical Poet) இலங்கும் இவர், தாம் படைத்த திருமுருகாற்றுப் படையால் சமய - மெய்யுணர்வுப் புலவராகவும் ( Religious Philosophical Poet ) திகழ்கின்றார். இறையனார் களவியல் என்னும் இலக்கண நூலுக்கு இவர்தம் உரையே சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வுரையால் படைப்பிலக்கியப் புலவராகிய நக்கீரர் அரிய திறனாய்வாளராகவும் திகழ்கின்றார். இவ்வாறு தமிழின் துறை பலவற்றிலும் புலமிக்க நக்கீரர் தமிழ்மக்களின் சமய உணர்வுகளை உணர்த்தும் கருவியாகத் தம் முருகாற்றுப்படை இலக்கியத்தைப் படைத்திருப்பது போற்றுதற்குரியதாகும்.

சங்கப்பாடல்கள் சிலவற்றில் சிவன், திருமால், முருகன், கண்ணன், பலராமன் போன்ற தெய்வங்கள் பற்றிய குறிப்புக்கள் அருகிக் காணப்படுகின்றன. அங்கெல்லாம் அக்குறிப்புகள் அரசர் அல்லது அவரனைய வீரர்தம் ஆற்றல் முதலிய பண்புகளை விளக்கும் உவமைகளாகவும், செய்திகளாகவுமே பெரும்பாலும் அமைந்துள்ளன. பரிபாடலில், தனித்தனியே முருகன் பற்றியும், திருமால் பற்றியும் நெடிய பாடல்கள் பல இடம் பெற்றிருப்பினும், அவை இசைத்தமிழ் வகை சார்ந்த பாடல்களாக உள்ளன. அதனால், சங்க காலத் தமிழகத்தில் விளங்கிய, ஒரு தெய்வ வழிபாட்டு நெறியினை (அன்று சமயம் என்ற பெயர்கொண்டு வழங்கப் படவில்லையாயினும்) - சமய நெறியினை உணர்த்தி நிற்கும் முதல் இயற்றமிழ் நூலாகத் திருமுருகாற்றுப்படை திகழ்கின்றது.

முருகாறு :

ஆதி சங்கரரால் நெறிப்படுத்தப்பட்டனவாகக் கூறப்படும் அறு சமயங்களில் ஒன்றான கௌமாரம், குமரனை - முருகனைப் பரம்பொருளாகப் போற்றும் நெறியாகும். குமரன் நெறி எனும் பொருளில் பிற்காலத்தில் வழங்கப்பெற்ற கௌமார நெறி, தமிழில் 'முருகாறு' என முன்னர்ப் போற்றப்பட்ட பாங்கினைத் திருமுருகாற்றுப்படையால் உணர முடிகின்றது.

சிவன் திருமால் பற்றிய சிறு குறிப்புகள் அந்நூற்களிற் கிடைத்தாலும், சைவம் வைணவம் என முறையே போற்றப்படும் சிவநெறி மால்நெறி ஆகிய நெறிகள் பற்றி (Philosophy) அறியும் வாய்ப்பில்லாத நிலையில், முருகநெறியினைத் திருமுருகாற்றுப் படை வாயிலாக அறியக் கிடைத்தது அரிய பேறேயாகும்.

அகம் புறம் என்னும் திணையடிப்படையில் வாழ்க்கையைப் பாடுபொருளாக அமைத்துப் பாடிய சங்கப் புலவர்கள் அக்காலத்திருந்த மெய்யுணர்வியல் கோட்பாடுகளை - நெறிகளைப் பாட முற்படவில்லை. சமயநெறிச் சார்பு மிக்க திருமுருகாற்றுப் படையினைப் பாடிய நக்கீரர், தம்முடைய பிற பாடல்களில் இத்தகைய சமயச் சார்பான குறிப்புக்களைக் கூறாமலிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரும், நெடுநல்வாடை நக்கீரரும் வேறானவர் என்னும் கருத்

R. RAJU,
Dy. Commissioner, HQrs.
(Retired)
HR & CE Administration Dept

திற்கு அறிஞர்கள் ஆதரவில்லை. நக்கீரருடைய ஒரு புறநானூற்றுப் பாடலில், அரசனின் பண்பு களை விளக்கும் வகையில் சிவன், திருமால், பலராமன், முருகன் பற்றிய குறிப்புக்கள் இடம் பெறுகின்றனவேயன்றி, பிற பாடல் ஒன்றிலும் கூடத் தெய்வநெறிச் செய்தி இடம் பெற வில்லை. அதனால், சங்கப்பாடல்களின் பொது வான பொருட்போக்கிற்கு வேறாக, தெய்வ நெறிச் செய்தியைப் பாடுபொருளாகக் கொண் டமைந்த புதுப்போக்குடையது திருமுருகாற்றுப் படை என்பது வெளிப்படையாகின்றது. பிற் காலத்தில், பக்தி இலக்கியப் பாடல்களாய், காவியங்களாய், சிற்றிலக்கியங்களாய்ப் பல்கிப் பெருகிச் செழித்து நின்ற சமய இலக்கியங் கட்குத் தமது திருமுருகாற்றுப்படையால், தோற்றுவாய் செய்த பெருமை நக்கீரரையே சாரும். தனக்கு முற்பட்ட காலத்தில் தமிழகத் தில் விளங்கிய தெய்வ நெறிச் செய்திகளை உணர்த்தும் கண்ணாடியாகவும், பிற்பட்ட காலத்தில் செழித்து வளர்ந்த சமயக்கோட் பாட்டினை உணர்த்தும் மூல பண்டாரமாக வும் திருமுருகாற்றுப்படை திகழ்கிறது.

தமிழில் ஆற்றுப்படை :

வழி எனப் பொருள்படும் ஆறு என்னும் சொல்லும், படுத்தல் - செலுத்துல் எனப் பொருள்படும் படை என்னுஞ் சொல்லுங் கூடி யமைந்த ஆற்றுப்படை என்னுந்தொடர், வழிப் படுத்தல் என்னும் பொருள் உணர்த்துவதா கும். இக்கருத்தமைந்த ஒரு துறை தொல்காப் பியப் பாடாண்டிணையில் இடம் பெற்றுள்ளது. அது வருமாறு:—

'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறார்க்கறி வுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கம்'

(தொல். பொருள். 88)

'கூத்தராயினும், பாணராயினும், பொருநராயி னும், விறலியாயினும் நெறியிடைக் காட்சிக் கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளன் நுமக்கும் பெறலாகும் என வும் சொன்ன பக்கம்' என்று இளம்பூரணர் இதற்கு உரை வகுப்பர். ''.....நாற்பாலாரும் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடு'' என்பது நச்சினார்க்கினியர் உரையாகும்.

இந்த நூற்பாவில் இத்துறைக்கு ஆற்றுப் படை எனப்பெயர் கூறப்பெறாவிடினும், இதற் குரிய பெயரைத் தொல்காப்பியர், தம் சொல் லதிகாரத்தில், 'ஆற்றுப்படை மருங்கில் போற் றல் வேண்டும்' என்று ஆற்றுப்படை எனப் பெயர் சுட்டியுள்ளார். பத்துப்பாட்டில் முரு காற்றுப்படை ஒழிந்த ஏனை ஆற்றுப்படைகள் எல்லாம் இந்த இலக்கணத்திற்கு நேரே பொருந் தும் இலக்கியங்களாகும். இத்துறையிலமைந்து புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் இடம் பெற்றுள்ள பாடல்கள் அளவாற் சிறியனவாயி னும் இந்த இலக்கண அமைப்பில் குன்றாது அமைந்தனவாகும்.

நக்கீரர் புதுமை :

நத்தத்தனார் (சிறுபாணாற்றுப்படை), பெருங்கவுசிகனார் (மலைபடுகடாஅம்), உருத் திரங் கண்ணனார், முடத்தாமக்கண்ணியார் ஆகிய பத்துப்பாட்டுப் புலவர்கள், தொல்காப்பி பிய ஆற்றுப்படை இலக்கணத்திற்கு முற்றிலும் பொருந்துமாறு பாடல்கள் அமைத்திருக்க, நக்கீரர் மட்டும் புதுமை சான்ற முறையில் தம் பாடலினை அமைத்து உள்ளார். பிறரெல்லாம் தம் ஆற்றுப்படைக்கு வள்ளல்தன்மை மிக்க அரசர் போன்றோரைத் தலைவராகக் கொள்ள நக்கீரர் மட்டும் தெய்வத்தைத் தலைமையாகக் கொண்டு பாடியுள்ளார். அக்காலத்தில் இஃ தோர் புதுமையும் புரட்சித்தன்மையும் சான்ற இலக்கிய முயற்சியாகும்.

மானுடம் பாடுவதற்கமைந்த, இயற்றமிழ் வகை சாரும் இலக்கிய வடிவம் ஒன்றினைத் தெய்வத்தைப் பாடும் பாங்கினதாக அமைத்த மையால் புதுமையும், மானிட மையமாக அமைந்த இலக்கியப்பொருட் போக்கினைத் தெய்வ மையமாகவே (God-Centred) மாற்றிப் பாடியமையால் புரட்சித்தன்மையும் ஒருங்கே அமையுமாறு திருமுருகாற்றுப்படை நூலை நக்கீரர் படைத்துள்ளார். அதனால் அவர் ஒரு புதுமைப்புலவராகவும், புரட்சிப் புலவ ராகவும் திகழ்கின்றார்.

தொல்காப்பிய ஆற்றுப்படை இலக்கணப் பகுதிக்கு மற்ற உரையாளர்களைப் போல நச்சி னார்க்கினியரும், சொற்பொருள் கூறினாலும், திருமுருகாற்றுப்படைச் செல்வாக்கினால். அப் பகுதிக்குரிய விளக்கவுரையில், இல்லறத்தை விட்டுத் துறவறமாகிய நெறியிடத்து நிற்றல் நன்றென்றும், கண்ட காட்சி தீதென்றும் மாறு படத் தோன்றுகையினாலே, தான் இறைவனி டத்துப் பெற்ற கந்தழியாகிய செல்வத்தை யாண்டும் திரிந்து பெறார்க்கு, இன்னவிடத்தே சென்றால் பெறலாமென்று அறிவுறுத்தி அவ ரும் ஆண்டுச் சென்று அக்கந்தழியினைப்பெறும் படிச் சொன்ன கூறுபாடு'' என்று இறைநலஞ் சான்ற ஆன்மீக அடிப்படையில் பிறிதொரு விளக்கத்தையும் தந்துள்ளார்.

ஆற்றுப்படைச் சிறப்பு :

ஆற்றுப்படை பழங்காலத்திணை துறைப் பாங்கிலமைந்த ஒரு இலக்கிய வகையாயினும், தமிழ்ப்பண்பாட்டினை உணர்த்தி நிற்கும் பொருட்போக்கினால், துறைப் பாடலாய் அமைந்துவிடாமல் தனி நூலாக வளரும் இலக்கியச் சிறப்புப்பெற்றுள்ளது. பின்வந்த இலக்கண நூல்களும், ஆற்றுப்படை வகைகட் குத் தனித்தனியே இலக்கணங் கூறலாயின. பிற்காலத்தில், கூத்தர் பாணர் போன்றோரை மட்டுமல்லாமல், ஆசிரியர் போன்றவர்களை யும், ஐயப்பன் போன்ற தெய்வங்களையும் ஆற் றுப்படுத்தும் வகையில் இவ்விலக்கியம் வளர்ச்சி யுற்றது.

ஒருவன் பெற்ற இன்பத்தினை மற்றவர்களும் அடையவேண்டுமென நினைப்பது சிறந்த மனிதப் பண்பாகும். அஃறிணை உயிர்களிடமும் ஓரோ வழி இப்பண்பு காணப்படுவதனைக் காக்கை போன்றவை கொண்டு உணரலாம். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது வேயல்லாமல் வேறொன்றறியேன்' எனத் தாயுமானவரும், 'யான் பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம்' எனத் திருமூலரும், இந்தப் பண்பு, பொருள் உலகிலேயன்றி அருள் உலகிலும் பேணப்பட்டு வந்த மரபினைக் காட்டியுள்ளார்கள். 'பகுத்துண்டு பல்லுயிரோம்பல்' என்னும் வள்ளுவத்திலும் இதன் சாயலைக் காணலாம். இவ்வாறு அறநூல்களாலும், சமயப் பனுவல்களாலும் அரண் செய்யப்பெற்று விளங்கும் இப்பழந்தமிழ்ப் பண்பாட்டினைக் காட்டி நிற்கும் கருவியாக, இலக்கிய அமைப்பாக விளங்குவதேஆற்றுப்படையாகும். தமிழ்ப் பண்பாட்டை உணர்த்திக் காக்கும் சிறப்பினால், பத்துப்பாட்டுத் தொகுப்பில் ஐந்துநூல்கள் ஆற்றுப்படை அமைப்பில் இடம் பெற்றுள்ளன.

திருமுருகாற்றுப்படை—பொருள்

பொருநராற்றுப்படை போன்ற பிற ஆற்றுப்படைகளைப் பொருள் விளக்கஞ் செய்யுங்கால், 'பொருநனை வள்ளல்பால் ஆற்றுப்படுத்தல்' என்று எளிதாக - தெளிவாக விளக்கிக் கூறி விட முடிகின்றது. முருகாற்றுப்படையில் வள்ளல் தெய்வமாக அமைவதால் பொருள் விளக்கஞ்செய்யுங்கால் வேறுபாடு தோன்றிப் பல விளக்கங்கள் அமையலாயின.

1. முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தானோரிரவலனை ஆற்றுப்படுத்தல் என்பது நச்சினார்க்கினியரின் விளக்கம். வீடு பெறுதற்குச் சமைந்தானோரிரவலனை வீடு பெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது என்பதும் அவருடைய விளக்கமாகும்.

2. முருகனை ஆற்றுப்படுத்தல், இதனை அன்புடையவர்களில் ஒருவனாய் எண்ணப்பட்டும், முருகன் அருள் பெற்றும், முருகனானவன், அன்பர்களைத் தேடித்திரியும், எல்லா ஆற்றலுமுடைய முருகனை, அன்பர்களிடத்தில் ஆற்றுப்படுத்தியது' என்று விளக்குவர். ஏனைய ஆற்றுப்படைகட்கும், முருகாற்றுப்படைக்கும் ஆற்றுப்படுக்கப்பெறும் பொருளில் காணப்பெறும் மாறுபாடு கண்டு இவ்விருவகை விளக்கங்களும் தோன்றலாயின.

3. முருகாறு என்பதனை முருகனை வழிபடும் நெறி எனக்கொண்டு, முருகன் அருள் வேட்டு நிற்போரை முருகநெறியின்கண் ஆற்றுப்படுப்பது என்று பொருள் காண்பது எளிதாகவும் நேரியதாகவும் தோன்றுகிறது.

கூத்தன், பொருநன், பாணன் (பாண்), விறலி என்பன போலக் கூறாமல், முருகு என்னும் பண்புச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு பெயர் அமைத்திருப்பதும் இக்கருத்திற்கு ஆதரவாக அமைகின்றது. 'முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்' என்னுமிடத்தும், முருகனை நினைந்து விழவயர்வோரை அந் நெறிப்படுத்திய வியனகர் என்னும் பொருளும் இயையுமாறு முருகாற்றுப்படுத்தஎன்றதொடர் அமைந்துள்ளது.

முருகாற்றுப்படை தமிழர் மெய்யுணர்வு நெறியுணர்த்தும் கருவி :

சைவம், வைணவம், புத்தம், சமணம், கௌமாரம் எனப் பிற்காலத்தில் விரிவாக நாள் வாழ்விலும், இலக்கியங்களிலும் இடம் பெற்றுத் திகழும் சமய அமைப்புகள் போன்ற அமைப்பு, சங்க காலத்தில் இருந்தது என்று நிறுவுவதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. எனினும் திருமால், முருகன், சிவன் முதலிய தெய்வங்களை வழிபட்டமைக்குப் போதுமான குறிப்புக்கள் கிடைக்கின்றன. மாயோன், சேயோன் எனச் சிலதெய்வங்கள் திணைநிலைத் தெய்வங்களாகப் போற்றப்பட்டு வந்துள்ளன. கருப்பொருள் அடிப்படையில் உள்ளுறை கூறுங்கால், தெய்வம் ஒழிந்தவற்றைக் கொள்ள வேண்டும் என்ற வரையறையும் இருந்தது. 'கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்' என்பதனால் தெய்வவணக்கம் அமைக்கும் பாங்கும் தொல்காப்பியத்தால் அறியப்படுகின்றது. இவற்றையெல்லாம் நோக்குங்கால் அக்காலத் தமிழ் மக்கள், தாம் மேற்கொண்ட வழிபாட்டிற்குச் சில நெறிகளை வகுத்துக்கொண்டிருத்தல் கூடும் என்னும் கருத்தினை உய்த்துணரலாம்.

பிற்காலச் சமய தோத்திர - சாத்திர நூல்களிற் காணுமளவு விரிவான சமயக்கோட்பாடுகளைக் காண முடியவில்லையாயினும் அவர்கள் சில நெறிகளைப் பின்பற்றி இருந்திருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை. மால் நெறியை அறிவதற்குப் பரிபாடற் பாடல்கள் ஓரளவு உதவலாம். சிவநெறியினை அந்த அளவிற்காவது அறிவதற்கான வாய்ப்பில்லை. அன்றிருந்த முருக வழிபாட்டு நெறியை அறியப் பரிபாடல் பாட்டுக்கள் சிலவும், திருமுருகாற்றுப்படையும் மிகப் பெருமளவில் உதவுகின்றன. சிறப்பாக முருக நெறி பற்றியும், பொதுவாக அக்காலத்திலங்கிய இறைநெறிக் கோட்பாடுகள் பற்றியும் உணர்த்தும் சாதனமாகத் திருமுருகாற்றுப்படை அமைகின்றது.

தெய்வநெறி :

'தெய்வமென்பதொர் சித்த முண்டாகி' என மணிவாசகர் தனி மனித சிந்தனையில் தெய்வ எண்ணம் தோன்றுவது பற்றிக் குறிப்பிடுவார். ஒரு சமுதாயத்திற்கு முதன்முதலில் தெய்வமென்பதோர் சித்தமுண்டாவது, மானிட வரலாற்றில் அரிய நிகழ்ச்சியாகும். அந்தத்தெய்வச் சிந்தனை, தமிழ்ச்சமுதாயத்தில் தோன்றி வளர்ந்து செழித்து நின்ற மாட்சியினைத் திருமுருகாற்றுப்படையில் காண முடிகின்றது. ஒரு சமுதாயத்தில் நாகரிகமும், பண்பாடும் வளர வளர அச்சமுதாயம் கொண்டுள்ள தெய்வச் சிந்தனையிலும் - நெறியிலும் வளர்ச்சியையும் பண்பாட்டையும் காண இயலும்.

தொல் பழங்காலத்தில் தமிழ் மக்கள்பால் நிலவிய தெய்வ வழிபாட்டுச் சாயலையும் அது வளர்ந்து செம்மையுற்றநிலையில் அமைந்த வழிபாட்டுச் சாயலையும் திருமுருகாற்றுப் படை உணர்த்திநிற்கின்றது.

**முருக வழிபாட்டின் தொன்மை வடிவச் சாயல் :**

முருகன் குறிஞ்சிக் கடவுளாகப் போற்றப் பெற்ற தன்மையினைச் 'சேயோன் .மேய மைவரை உலகம்' எனத் தொல்காப்பியம் காட்டும். கல்வியும் நாகரிகமும் நிரம்பாத நிலையில் குறிஞ்சிநிலத்தில் எளிய மக்கள் மேற்கொண்ட வழிபாட்டு முறையினை, அகப்பாட்டுக்களில் இடம் பெறும் வெறியாடல் போன்றவற்றால் அறியலாம். குறிஞ்சி நில மக்கள் முருகனுக்கு விழாவெடுத்துப் போற்றிய தன்மையைத் திருமுருகாற்றுப்படைப் பழமுதிர் சோலைப் பகுதி கொண்டு உணரமுடிகிறது.

தினையும் மலரும் கலந்து வைத்தும், ஆட்டினை அறுத்தும், வாரணக் கொடிநாட்டியும் விழாக் கொண்டாடப்படுகின்றது.

கோழிக்கொடி நிறுத்தி அலங்காரம் செய்யப்படுகின்றது. முருகன் கோயிலில் நெய்யும் ஐயவியும் கலந்து அப்பப்படுகின்றது. பிறர்க்குக் கேட்காதவாறு மந்திரமாகப் புகழ்மொழிபகரப் படுகின்றது. கரம் சிரம் குவித்து, மலர் தூவி வழிபாடு செய்யப்படுகின்றது. வழிபடுவோர் வெவ்வேறு வண்ணங்களிலான ஆடைகளை அணிந்துள்ளனர். சிவப்பு நூலைக் காப்பாகக் கட்டுகின்றனர். ஆட்டுக் கிடாய் அறுக்கப்பெற்று அதன் குருதியொடு கலந்த வெள்ளிய அரிசி பலியாகச் சிதறப்படுகின்றது. மஞ்சளும் சந்தனமும் கலந்த குழம்பினைத் தெளித்து, செவ்வரளிப் பூமாலைகள் கொண்டு அலங்கரிக்கப்படுகின்றது. முருகன் கோயிலை வாழ்த்திக் குறிஞ்சி பாடி, பல்லியம், முழக்கி, பல்வண்ண மலர்கள் சொரியப்படுகின்றன. முருகன் மயில் ஊர்தியை வாழ்த்துகின்றார்கள். இவ்வாறு அக்குறிஞ்சி மக்களின் முருக வழிபாடு காட்டப்படுகின்றது. இங்குக் காட்டப் பெறுவன கொண்டு, மிகப் பழங்காலத்தில் குறிஞ்சி நிலத்தில் மேற்கொள்ளப்பெற்ற முருக வழிபாட்டினை உணர முடிகின்றது.

**உருவ வழிபாடு :**

சங்க காலத்திற்குப் பின்னர் உருவாகிய சைவசித்தாந்தம்,வழிபாட்டு நெறியில் அருவம் உருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலைகளைச் சுட்டுகின்றது. மூன்று நெறியுளும், எல்லா மக்களாலும் எளிதில் ஏற்றுப் போற்றும் பாங்கில் அமைவது உருவ வழிபாடேயாகும். குணங்குறி கடந்து விளங்கும் பரம்பொருளை ஓர் உருவிற் கண்டு வழிபடுவது உருவ வழிபாடாகும். இறைவனை உருவ நிலையிற் கொண்டு, அவனை அன்பு நெறியாலும், அறிவு நெறியாலும் வழிபடும் பாங்கினைத் திருமுருகாற்றுப்படை காட்டுகின்றது.

திருப்பரங்குன்றப் பகுதியில் அழகே வடிவாய் அமைந்த முருகப்பெருமானுடைய திருவுருவம் மிகவும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது.

''உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்——
உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்...
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்''''

என்று அந்த அழகுத் திருமேனி காட்டப்பட்டுள்ளது.

ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி உடையனாக அப்பெருமான் விளங்கு தலை விளக்குமுகத்தான், நூலின் தொடக்கத்தில், 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறுகடற் கண்டாங்கு' என்று காட்டப்படும் காலை நேரக் கடற்கரைக் கதிரவன் காட்சி உவமை கொண்டு, உருவத் திருமேனி கொண்டு விளங்கும் அவனே, சேண் விளங்கு அவிர் ஒளியாய், அருவுருவத் திருமேனி கொண்டு விளங்கும் தன்மையை உய்த்துணரச் செய்கின்றார். அந்தத் திருவுருவத்தின் திருவடி 'புலம் பிரிந்து உறையும் அடி' எனக் கூறப்படுவது கொண்டு,அதுவே அருவநிலையில் திகழும் பாங்கினையும், அந் நிலையில் திருவடி என்பது வீடுபேற்றைச் சுட்டும் தன்மையையும் உய்த்துணரச் செய்துள்ளார்.

சைவசித்தாந்தம், இறைவன் அடியும் ஆன்மாக்களின் முடியும் கூடுவதனை, வீடுபேறாகக் குறிப்பிட்டு, அதனைத் தாடலை என்னும் தொடர் கொண்டு விளக்கும். இவ்வுண்மையைக் குறிப்பால் உணர்த்தும் வகையில்,

'சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்துறையும்
செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே'

என்னும் பகுதி அமைந்துள்ளது.

உருவநிலையில் பேசப்படும் திருவடி என்பது வீடு பேறாகும் என்பதனை உரையாளர் நச்சினார்க்கினியர் ''திருவடியே வீடாயிருக்குமென்றார். அது ,'தென்னை பெருந்துறையான் காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித், தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி' என்பதனாலும், பிறரும் திருவடியைக் கூறுமாற்றானும் உணர்க'' என்று விளக்கிக் காட்டியுள்ளார்.

**உவந்தாடும் தெய்வம் :**

எத்தெய்வங் கொண்டாலும் அத்தெய்வமாக மாதொருபாகன் வருவான் என்பது சைவ சாத்திர முடிபு. இத்தகைய முடிவு உருவாவதற்கு அமைந்த ஒரு முன்னோடி போலத் திருமுருகாற்றுப்படையில் முருகன் பண்பு பேசப்படுகின்றது.

மலர் முதலியவற்றால் ஒப்பனை செய்து கொண்டு, வேலேந்தி வெறியாடுவான் வேலன். அவன் தெய்வமுற்று ஆடும் வண்ணம், நிகழ்த்தப் பெறும் குரவைக் கூத்தின் கண்ணே, முருகன், பல்வேறு ஒப்பனைகள் நிறைந்த வகை, மட நடை மகளிரோடு தோன்றிக் கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியனாய், ஆடி விளங்கும் பண்புடையவன் என்பதனைக் குன்றுதோறாடல் என்னும் பகுதி நயம்படக் காட்டுகின்றது.

குறிஞ்சி நிலத்தில் வெறியாடும் வேலனொடும், குரவை அயரும் பெண்டிரொடும் இயைந்து நின்று அவர்கள் போற்றுமாறு முருகப் பெருமான் விளங்குவான் என்று கூறும் இப்பகுதியில், பின்னைச் சிவநெறியிற் பேசப் பெறும் சகமார்க்கம் தோன்றுவதற்கான வித்து விளங்கக் காணலாம்.

## வைதிகநெறிக் கலப்பு :

தமிழகச் சமய வாழ்வில் வைதிக நெறிக் கலப்பு என்று தொடங்கியது என்று வரையறுப்பது எளிய செயலன்று. சங்க காலத்திலேயே அக்கலப்பு மிக்க அளவில் இடம் பெற்றிருப்பதனைத் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்ற சங்க நூல்களால் நன்குணர்தல் கூடும். பண்டு குறிஞ்சித் தமிழரிடம் கால் கொண்டு செழித்து விளங்கிய முருகநெறியும், வைதிகச் சார்புடைய கார்த்திகேய நெறியும் இரண்டறக் கலந்து விளங்கத் தொடங்கியது எப்போது என்று கூற இயலாது. திருமுருகாற்றுப்படையில், முருகநெறியின் கண்ணே நிகழ்ந்த கலப்பு நிலைமையினை, முழுப் பொலிவோடுங் காண முடிகின்றது.

'நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ் சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ'

என்னும் முருகன் பிறப்பும்,

மூவிருமுகனும் முறைநவின் றொழுக.... பன்னிருகையும் பாற்படஇயல.... அலைவாய்ச் சேரும் காட்சியும், மேலுமவன், தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள் ஆவினன் குடி இசையும் காட்சியும் போல்வன, தமிழகத்தில் வைதிகநெறி வந்து கலந்த கலப்பால் விளைந்த நலப்பாடாகும்.

## அந்தணர் போற்றும் நெறி :

வேதநெறி சார்ந்து, நாற்பத்தெட்டாண்டு பிரமச்சரியம் காத்து, முப்புரி நூலணிந்து, முத்தீஓம்பி, ஈர ஆடையராய், ஆறெழுத்து மந்திரத்தை நெஞ்சகத்தே அமைத்தோதி, மலர்கள் இட்டு வழிபடும் அந்தணர் வழிபாட்டினைத் திருவேரகப் பகுதியில் நக்கீரர் காட்டியுள்ளார். மலைச்சோலையில் மறியறுத்து மலர் தூவி அன்பால் ஆடிப் பாடிப் பரவும் நெறிக்கும் இரு பிறப்பெய்தி, முத்தீ ஓம்பி, மறைவழி மந்திரமோதி வழிபடும் நெறிக்கும் இடையே எவ்வளவோ வேறுபாடிருக்கக் காணலாம். 'ஊனொடுண்டல் நன்றென ஊனொடுண்டல் தீ தென ஆன தொண்டர் அன்பினால் பேச நின்ற தன்மையான்' என்னுமாறு அன்பால் நெகிழும் நெறியையும், அறிவால் துருவும் நெறியையும் முருகன் உவந்தேற்கும் பாங்கினை நக்கீரர், தம் நூல்வழிக் காட்டியுள்ளார்.

## முனிவர் முயலும் நெறி:

மரவுரி உடுத்து, மான்தோல் போர்த்து, பன்னாள் உண்ணா நோன்பு மேற்கொண்டு, நிறைந்த கல்வியராய், காமமும் கோபமும் கடிந்தவராய் விளங்கும் துனியில் காட்சி முனிவர்கள் முருகப் பெருமானைத் தம் தவநெறியால் வழிபட முற்படுவதனைத் திருவாவினன் குடிப் பகுதியில் நக்கீரர் குறிப்பிட்டுள்ளார்.

## முருகன் உறைவிடம் :

ஆற்றுப்படுக்கப்பெறும் இடங்களாகத் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், ஆவினன் குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்று ஆறு பகுதிகள் பேசப்படுகின்றன. இவை முருகன் உறையும் இடங்களாக ஆற்றுப்படுக்கப்பெற்ற இடங்கள் என்னும் கருத்திற்கு மாறாக, முருகனுடைய படை வீடுகள் எனக்கருதும் கருத்துப் பிற்காலத்தில் ஏற்பட்டது. இவ்வாறு பகுதிகளையும் நோக்குங்கால் மலையும், கடலும் சோலையும் அழகொடு விளங்கும் இடங்களாகக் கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்புமிக்க இடங்களாக அமைந்துள்ள தன்மையை உணரலாம். இவற்றுள்குன்று தோறாடல் என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டாமல், கோலமிகு குன்றங்கள் அனைத்தும் முருகன் அருட்கோயிலாம் என்னும் உண்மையை ஆழ்ந்து நோக்குவார் அறிதல் கூடும். இயற்கையிலமைந்த எல்லாப் பொருள்களும் இடங்களுமாக இறைவன் விளங்குகின்றான் என்னும் கோட்பாட்டினை, 'காடும் காவும் கவின் பெறு துருத்தியும், ஆறுங்குளனும் வேறு பல்வைப்பும், சதுக்கமும் சந்தியும், புதுப் பூங்கடம்பும், மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்' என்று நக்கீரர் முருகன் உறையும் இடங்களாகத் தொகுத்துக் காட்டும் பட்டியலால் உணரலாம். மேலும் இதுகொண்டு குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாகக் கருதப் பெற்ற முருகப்பெருமானை, குவலயம் முழுவதற்கும் தெய்வமாக ஏற்றுப் பரம்பொருள் நிலையில் தமிழ் மக்கள் போற்றும் உண்மையினையும் உணரலாம். இப்பகுதி, அணுவிற் கணுவாய் அண்டத்திற்கண்டமாய் யாண்டும் நீக்கமற நிறைந்திலங்கும் தன்மை (Immanence) இறைத்தன்மை புலப்படுமாறு முருகன் விளங்கும் பண்பினைக் காட்டி நிற்கின்றது.

## ஆற்றுப்படை மந்திரம்:

மந்திரத்தை விளக்குங்கால் தொல்காப்பியர்,

'நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறைமொழி தானே மந்திரமாகும்' எனக்

R. RAJU,
Dy. Commissioner H.Qrs.
(Retd.)

குறிப்பிடுவார். திருமுருகாற்றுப்படையில் அந்தணர் சிலர் ஆறெழுத்து மந்திரத்தைத் தம் நாவியல் மருங்கின் நவிலப்பாடி ஏத்துவது கூறப்பட்டுள்ளது. ஈண்டுக் குறிப்பிடும் ஆறெழுத்து மந்திரத்தினை 'ஓம் நமசிவாய' என்றும், நமகுமராய, சரவணபவ என்றும் குறிப்பிடுவர். அம்மந்திரம் எதுவாயினும், மந்திரத் துணையால் இறைவனை வழிபடும் முயற்சி அக்காலத்தில் நிலவிய உண்மையை இதனால் அறிய முடிகின்றது. மந்திரங்களைத் தம் நெஞ்சகத்தே நினைந்து வழிபடல், தங்கள் செவியிற்படுமாறு ஓதிவழிபடல் ,பொதுவாக வாய்விட்டுக் கூறி வழிபடல் ஆகிய மந்திர வழிபாட்டு முறை அந்நாளில் இடம் பெற்றிருந்தமையினையும் உணரலாம்.

தனியே சில தொடர்களை, சொற்களை மந்திரமாகக் கொள்வதனோடு ஒரு நூல் முழுவதையுமே மந்திரமாகக் கொண்டு பயன் கொள்ளும் தன்மையினைப் பிற்காலத்தே மிகுதியும் காணலாம். திருமுருகாற்றுப்படை முழுவதையும் ஒரே மந்திரமாகக் கொண்டு பாராயணம் செய்து பயன்பெறும் முறையும் பின்னர் தோன்றியது.

அன்புநெறி :

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அருவாய் விளங்கும் இறைவன் தன் அளப்பருங் கருணையால் உருவத்திருமேனி தாங்கி நிற்கும் நிலையில், அதனை அடைந்து அனுபவிப்பதற்குரிய நெறிகளில் அன்புநெறியே அனைத்து நெறிகளிலும் எளியதும் இன்பம் சான்றதுமாகும். புறமும் அகமுமாய்ப் பொலியும் இம்மை வாழ்விற்கு அன்பின் இன்றியமையாமையினை, 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' எனத் தொல்காப்பியம் பேசும். ஆன்ம வாழ்விற்கும் அன்பே இன்றியமையாது வேண்டப்பெறும் பண்பாகும். அதனால் அன்பினால் இறைவனை அடைய முற்படும் நெறியினைப் பண்டைத் தமிழர் பெரிதும் போற்றினர். பின்னர்த் தோன்றிய மணிவாசகரும், ஏனைய அருளாளர்களும் அன்புநெறியே முதன்மை நெறியெனக் காட்டிச் சென்றனர். அன்புநெறியின் அடிப்படை இறைவன் அருட்பண்பினை நினைந்து நினைந்து நெகிழ்ந்து பாடிப்போற்றுவதாகும். 'அருச்சனைபாட்டேயாகும்' என்பது சேக்கிழார் வாக்கு.

திருமுருகாற்றுப்படை அன்புநெறி மேற்கொண்டு இறைவனைவழிபடுமாற்றைப் பலவாறாகக் காட்டியுள்ளது. வழிபாட்டில் எந்த நிலை மேற்கொண்டவராயினும், அங்கு அவர்கள் மேற்கொள்ளவேண்டியது, அன்பால் நினைந்துருகுவதும், அதன் விளைவாக ஆடியும் பாடியும் நிற்கும் நிலைமையுமேயாகும்.

மக்கள் தேவர் போன்ற அனைத்து வகை உயிர்கட்கும் அன்புநெறியே அடிப்படையானது என்பதனை நக்கீரர் தெளிவு படுத்தியுள்ளார். முருகனைப் பரவும் சூரர மகளிர்

'கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிது'

என்று ஏத்திப் பாடி ஆடி நிற்கின்றனர். வைதிக நெறி சார்ந்த அந்தணர்கள் ஈர ஆடையினராய் உச்சிக் கூப்பிய கையராய், தற்புகழ்ந்து, ஆறெழுத்தடக்கிய அருமறைக்கேள்வி நாவியன்மருங்கின் நவிலப்பாடி, விரையுறு நறுமலர் ஏந்தி ஏத்துகின்றனர். முருகாற்றுப்படுத்தும் மலைவாழ் மக்கள்,நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி, இன்னியம் கறங்க, ஆடுகளம் சிலம்பப் பாடிப் பரவுகின்றனர். மேலும் நக்கீரர், ஆற்றுப்படுத்தப் பெறும் அடியவனிடம் நீ முருகனைக் கண்டவிடத்து அவனை எவ்வாறு ஏற்றிப் போற்றவேண்டும் என்பதனை விளக்கும்போது கூறியுள்ள புகழ்மொழிகள், அன்பு நெறிக்கு அடிப்படையான, அருச்சனைப் பாங்கிலமைந்து விளங்கும் அன்புரைகள் ஆகும். அவை பிற்காலத்தில், அன்புநெறி வழிபாட்டிற்கு இன்றியமையாது வேண்டப்பெறும் 'அருச்சனை'ப் பகுதி தோன்றுவதற்குரிய அடிப்படையாக விளங்குகிறது. 'அறுவர் பயந்த ஆறமர் செல்வ....மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே....வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ' என்று பலவாறாகப் போற்றிப் பரவும் புகழ் மொழிப்பகுதி,இக்காலத்தில் பெரிதும் வேண்டப்பெறும் தமிழ் அருச்சனைக்கு அமைந்த அரிய கால்கோளாகத் திகழ்கின்றது.

இறைக்கோட்பாடு:

பலர் இறைவனைத் தம் அச்ச உணர்வால் கண்டுபோற்றி நிற்பத் தமிழ் மக்கள் அவனை அழகுணர்வால் கண்டும் கொண்டும் போற்றுவாராயினர். அழகு அழியாதது: இளமை சான்றது. மணமும் தெய்வத்தன்மையும் மிக்கது. அழகின் இயல்புணர்ந்த பழந்தமிழர் தம் இறைவனை அழகு வடிவாய்க் கண்டனர். அழகு, இளமை, மணம் தெய்வத்தன்மை ஆகிய பண்புகளெல்லாம் அடங்கிய'முருகன்' என்னும் சொல்லால் தம் இறைவனைக் குறிப்பிட்டனர். முருகென்னும் சொல் அழகு, இளமை, மணம், தெய்வத்தன்மை முதலிய பல்பொருள் பயக்கும் சொல்லாகும். சிவம், மால், சொக்கன் எனத் தமிழ் மக்கள் கொண்ட இறைப் பெயர்களும் அழகின் அடிப்படையில் அமைந்துள்ளன. நக்கீரர் முருகனை அழகு வடிவமாகவே காட்டியுள்ளார்.

முருகன் அடியார்கட்கு அருளுமாற்றைக் கூறுகின்றபொழுது 'பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத்து இளநலங்காட்டி'யதாக நக்கீரர் கூறியுள்ளார். 'மணங்கமழ் தெய்வத்து இளநலம்' என்னும் தொடரில், தமிழ் மக்கள் கொண்டிருந்த இறைக் கோட்பாடு நுட்பத்தினைப் புலப்படுத்தியுள்ளார். இளமை முதலிய நாற்பண்பும் கலந்து நிற்க விளங்குவது இறையியல்பு என்னும் இறைத் தத்துவம் இதனால் புலப்படுகின்றது.

**ஒளி ஒலிக் காட்சி:**

கை புனைந்தியற்றாக் கவின் பெறுவனப் பாய் - அழகுப் பிழம்பாய்த் திகழும் இறையை முருகை, ஐம்புலன்களும் செம்மையுற்ற நிலையில் அவற்றால் உணர்ந்து துய்த்தல் கூடும். ஈசன் இணையடி நீழல், மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதாய், ஐம்புலன்களுக்கும் ஆராத இன்பம் தர வல்லதாய் விளங்கும் பாங்கினை அப்பரடிகள் காட்டியுள்ளார்.

ஐம்புலன்களிலும் தலைமை சான்றன கண்ணும் செவியுமாகும். 'கண்ணினும் செவியினும் நுண்ணிதின் உணர்வோர்' எனத் தொல்காப்பியம் பேசும். ஐம்புலன்கட்கும் ஆராத இன்பம் அருளும் பாங்கில் முருகாற்றுப்படையில் இறையியல்பு கூறப்பட்டிருப்பினும், கண்ணும் செவியுமாகிய இரு பொறிகளால் உணரத் தக்க ஒளி ஒலித்தன்மையில் இறையியல்பு கூறப்பட்டிருப்பினும், கண்ணும் செவியுமாகிய இரு பொறிகளால் இறையியல்பு - முருகஇயல்பு விளக்கப் பட்டுள்ளது. பிற்காலத் திருமுறைகளும் இறைவனைச் 'சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே' என்றும், 'ஓசை ஒலியெலாம் ஆனாய்' என்றும் போற்றியுள்ளது.

திருமுருகாற்றுப்படை முழுவதும் முருகனை வண்ணக்கோலம் மிக்க ஒளி இயல்பும் எண்ண இனிக்கும் ஒளி இயல்பும் சான்ற ஒருவனாகக் காட்டப்பட்டுள்ளது. 'உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு' என்ற ஒளி உவமத் தொடக்கமும், 'இழுமெனஇழி தரும் அருவிப் பழமுதிர்சோலை மலை கிழவோனே' என்று ஒலிக்கூட்ட நிறைவாக அமைந்த முடிவும் இக்கருத்தினை விளக்குவனவாக உள்ளன.

**முடிவுரை:**

பழந்தமிழ் மக்களின் புற அக வாழ்வியல் உண்மைகளை ஏனைய சங்கப்பனுவல்கள் விளக்கி நிற்பது போல், அவர்களுடைய ஆன்ம நலஞ்சான்ற மெய்யுணர்வுக் கோட்பாடுகளைத் திருமுருகாற்றுப்படை விளக்கி நிற்கின்றது. தமிழகத்தே தோன்றித் தழைத்த முருக நெறியும்வைதிகத் தொடர்பு கொண்ட கார்த்திகேய நெறியும் கலந்து நிற்கும் காட்சியினைத் திருமுருகாற்றுப்படை காட்டுகின்றது. பிற்காலத்தில் கௌமாரம் எனப் பெயர்கொண்டு, அறுசமயங்களில் ஒன்றாய் விளங்கும் முருகநெறியின் தோற்றத்திற்கான அடிப்படையாகவும் இந்நூல் திகழ்கின்றது. வைதிகத் தொடர்பு கொண்டு தமிழகத்தில் செழித்த சைவம், வைணவம் போன்ற சமய தத்துவங்கள் உருவாவதற்கான அடிப்படை வழிபாட்டுநெறி பழந்தமிழகத்தில் விளங்கியதற்கு இந்நூல் சான்றாகின்றது. முருகநெறி பண்டு செழித்து விளங்கியமைக்குத் திருமுருகாற்றுப்படைச் சான்று கிடைத்ததுபோலப். பிற நெறிகள் சிறந்தமையினை விளக்கத் தனி நூற்சான்று கிடைக்கவில்லை. எனினும் பரம்பொருளை அழகு வடிவில் உணர்ந்து, அதனைத் தாம் விரும்பிய பாங்கில், அன்புநெறி நின்று வழிபடும் கொள்கையினைத் தமிழ் மக்கள் தம் சமயக் கோட்பாடாகக் கொண்டிருந்தனர் என்பதனை விளக்கும் கருவியாகத் திருமுருகாற்றுப்படை திகழும் உண்மையை எளிதில் மறுக்க முடியாது.

# இறைவன் - உயிர் - உறவு

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள சம்பந்தம், ஒன்பது (9) வகைப்படும் என வைணவ நூல்கள் கூறும். அவையாவன:-

| | | |
|---|---|---|
| (1) பிதா புத்திர சம்பந்தம் | — | தந்தை மகன் தொடர்பு |
| (2) ரட்சக ரட்சிய சம்பந்தம் | — | காப்பாற்றுபவன் காப்பாற்றப்படுவது ஆகிய தொடர்பு |
| (3) சேஷ சேஷி சம்பந்தம் | — | அடிமை ஆண்டான் தொடர்பு |
| (4) பர்த்ரு பார்யா சம்பந்தம் | — | கணவன் மனைவி தொடர்பு |
| (5) ஞேய ஞாத்ரு சம்பந்தம் | — | அறியப்படுவது அறிபவன் ஆகிய தொடர்பு |
| (6) சுவ சுவாமி சம்பந்தம் | — | உடமை உடையவன் தொடர்பு |
| (7) ஆதார ஆதேய சம்பந்தம் | — | தாங்குவது தாங்கப்படுவதாகிய தொடர்பு |
| (8) சரீர சரீரீ சம்பந்தம் | — | உடலும் உயிருமாகிய தொடர்பு |
| (9) போக்தா போக்ய சம்பந்தம் | — | அனுபவிப்பவன் அனுபவிக்கப்படுவதாகிய தொடர்பு |

# இராமனை விரும்பிய இருமகளிர்

பேராசிரியர் திரு. செ. வேங்கடராமச் செட்டியார்,
சிதம்பரம்

கார்முகில் கமலம் பூத்தாற் போன்ற கட்டழகன், ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினான், ஓவியத்தெழுத வொண்ணா உருவத்தான், 'மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ, ஐயோ இவன் வடிவு என்பதோர் அழியா அழகுடையான்' என்று பலர் புகழ்ந்தேத்தும் படிவத்தானாகிய இராமனைக் கண்ணிற் கண்டு, அவன் பேரழகைப் பருகிக் காதல் கொண்ட மகளிர் இருவர். அவருள் சீதை நேர்மையான உண்மைக் காதலால் இராமன் அழகில் ஈடுபட்டு அவனைக் காணப் பெறாது வருந்தும் பகுதி, பாலகாண்டத்தில் கூறப்படுகின்றது. மற்றொருத்தி சூர்ப்பணகை; இவள் இராமன் அழகில் ஈடுபட்டுக் காதல் கொண்டு, தகாத முறையில் தன் காதலைத் தானே தெரிவித்தும், அவன் அன்பைப் பெறாது வருந்தும் கைக்கிளைப் பகுதி, சூர்ப்பணகைப் படலத்தில் கூறப்படுகின்றது. சீதை, இராமனைக் கன்னி மாடத்திலிருந்து கண்டபோது மன்மதனோ என்று ஐயுற்று,

''நெருக்கியுள் புகுந்தரு நிறையும் பெண்மையும்,
உருக்கி என்னுயிரொடும் உண்டு போனவன்,
பொருப்புறழ் தோள்புணர் புண்ணியத்தது
கருப்புவில் அன்று; அவன் காமன் அல்லனே'' *(617)*

என்கின்றாள். அவன் தோளில் இருப்பது கரும்பு வில் அன்று. ஆதலின் அவன் மன்மதன் அல்லன் என்று துணிகின்றமை காண்கின்றோம்.

சூர்ப்பணகையும் இராமனது பேரழகைக் கண்டு 'இவன் மன்மதனோ' என்று முன் ஐயுற்றுப் பின்,

'சிந்தையின் உறைபவற்கு
உருவம் தீர்ந்ததால்' *(2840)*

என்று காரணம் காட்டி, அவன் அல்லன்என்று துணிகின்றாள். மன்மதனுக்குரிய உருவம் சிவனுடைய நெற்றிக் கண்ணால் தீய்ந்து போய்விட்டது. ஆதலின், உருவமுடைய இவன், மன்மதன் அல்லன் என்பது இவள் முடிபு. சீதையும் சூர்ப்பணகையும்,இராமனைக் கண்டகாட்சியும், அவனழகு மிகுதி பற்றிக் கொண்ட ஐயமும், காரணங்காட்டிப் பெற்ற துணிபும்,அவன் முகம் முதலியன பற்றிக் கூறுவனவும், ஒத்த இயல்பினவாகவே யுள்ளன. ஆனால், சீதை இராமனைக் கண்டபோது, இராமனும் அச் சீதையைக் காண்கின்றான். இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்துகின்றனர். ஒருங்கிய இரண்டுடற்கு உயிர் ஒன்று ஆகின்றனர். இவர்கள் காதல் 'அன்பின் ஐந்திணை' எனப்படும். இவர்கள் முறைப்படி மணந்து இன்புறுகின்றனர்.

சூர்ப்பணகை இராமனை விண்ணிலிருந்து காண்கின்றாள்;காதல் கொள்கின்றாள்.ஆனால் இராமன் அப்போது அவளைக் கண்டிலன். காதலும் கொண்டிலன். அவள் தானே வலிய வந்து எழில்மிகு வடிவு காட்டித் தன் காமத்தையுணர்த்திய பின்னும், இராமன் அவளைச் சிறிதும் விரும்பவில்லை. எனவே,இவள் காமம், கைக்கிளையாகிய ஒருதலைக் காமத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைவதைக் காணலாம்.

இராமனைக் கண்டு காதல் கொண்ட சீதை, அன்றிரவு இராமனை நினைத்து வருந்துவதையும், கம்பர் கூறுகின்றார். சூர்ப்பணகை இராமனை எய்தப் பெறாது இரவில் அவன் நினைவால் பலவாறு வருந்துவதையும், அவரே கூறுகின்றார். சீதையின் விரகதாபச் சொற்களுக்கும், சூர்ப்பணகையின் விரகதாபச் சொற்களுக்கும் உள்ள வேறுபாடு பெரிதாகும் என்பதை, அவ்விரண்டு பகுதிகளையும் ஒப்பிட்டு நோக்கின் உணரலாம். இராமனைக் காண முடியாத நிலையில் சீதை,

''என் கன்னி மாமதில்,
எறிந்த அக் குமரனை இன்னும்
கண்ணிற் கண்டு அறிந்து, உயிர்
இழக்கவும் ஆகுமே கொலாம்''

என்று கலங்குகின்றாள். ''என் கன்னித் தன்மையாகிய பெரிய மதிலைத் தாக்கி அழித்திட்ட அந்தக் குமரனை, இன்னும் ஒருமுறை என் கண்ணாற் கண்டு அவன் நிலையை அறிந்து கொண்டு, பின் என் உயிரினை இழக்கவும் இயலுங்கொல்லோ?'' என்பது பொருள்.

இராமனைக் கண்டபோது சூர்ப்பணகை என்ன சொல்கின்றாள் பார்ப்போம். இராமனுடைய அழகிய தோள்களில் ஈடுபாடு பெரிதுடையளாய்ப் பார்த்து, பார்வையைப் பறித்தலும் இயலாது நின்ற சூர்ப்பணகை, இவனது நெடிய மார்பகத்தை இன்று ஒன்றுவேன்; அன்று எனின் அமுதம் உண்கினும் பொன்று

வேன்; இவனைப் பிரிந்துபோதல் இனி இய லாது'' என்று முடிவு செய்கின்றாள். பின்பு இராமன் விரும்பி ஏற்பதற்குரிய அழகிய வடிவந்தாங்கி அவன்எதிரில் செல்கின்றாள். சீதையின் அழகைப் பருகும் காதன்மையுடைய இராமனும் இவள் அழகினைக் கண்டு வியந்து,

பேருழைய நாகர்உல கினிற்பிறிது, வானிற்
பாருழையில் இல்ல தொரு மெல்லுருவம் பாரா,
ஆருழை யடங்கும்? அழகிற்கு அவதி யுண்டோ?
நேரிழையர் யாவர் இவர் நேர்?

என நினைக்கின்றான். அத்தகைய பேரழகுடை யவளாய்ச் சென்று தன் காதலைத் தானே சொல்லியும், அவன் உடன்படாமை அறிந்தும் பிரியகில்லாளாய்ப் பின் 'இளையவன் முனியும் நங்கை ஏகுதி விரைவில் என்று இராமன் கூறிய பின் அரிதிற் பிரிகின்றவள்,

''இன்றிவன் ஆகம் புல்லேன்,
எனின் உயிர் இழப்பேன்''

என்று நினைக்கின்றாள்.

பிரிவாற்றாமையால் இறப்பது உறுதி; ஆனால் இறப்பதற்குள் அக்குமரனை ஒரு முறையேனும் காணும் வாய்ப்பு கிடைக்குமோ என்று ஏங்கும் சீதையின் உண்மைக் காதலுக் கும், 'இன்றைக்கு இவன் மார்பகத்தைத் தழு வேனாயின் உயிர் இழப்பேன்' என்று உடற் புணர்ச்சியையே விரும்பும் சூர்ப்பணகையின் விலங்குணர்ச்சிக்கும், எத்துணை வேறுபாடு! முன்னது மலரினும் மெல்லிய காதலாதலும் பின்னது கல்லினும் வலிய காம உணர்ச்சியாத லும் தெளிவாதல் காணலாம். சந்திரனைக் கண்டு சீதை பேசுகின்றாள்,

''கொடியை யல்லைநீ, யாரையுங் கொல்கிலாய்;
மடுவில் இன்னமு தத்தொடும் வந்தனை;
பிடியின் மென்னடைப் பெண்ணொடு என்றால்
என்னைச்
சுடுதியோ? கடல் தோன்றிய திங்களே'' (640)

என்பது சீதையின் துன்பக் குரல். தன்னைச் சுடுகின்ற சந்திரனைப் பார்த்துக் கூறுகின்ற இச் சொற்களில் கடுமையைக் காணோம்; இனி மையைக் காண்கின்றோம். சந்திரனை ஏசுந் தன்மையைக் கண்டிலம்; அவனைப் புகழ்ந்து கூறுதலையே காண்கின்றோம். இன்னா செய்யும் திங்களுக்கும் இனியவே கூறும்சால்புடைமையை சீதைபால் காண்கின்றோம். 'இனிய நல்லமிழ் தத்தோடும் மெல்லியலாகிய திருமகளோடும் பிறந்த நீ, பெண்ணாகிய என்னைச் சுடுதல் பொருத்தமாக இல்லையே' என்று எவ்வளவு நயமாக இனிதாகத் தன் கருத்தைப் புலப்படுத் துகின்றாள்? சாக்காட்டை நீக்கும் அமிழ்தத் தோடு பிறந்தவன் சாக்காட்டை யுண்டாக்கு தல் பொருந்தாது. பெண்ணோடு பிறந்தவன் பெண்ணின் துயர் காணாது வருந்துதல் பொருத்தமின்று, தண்ணிதாய கடலில் தோன்றியவனுக்குச் சுடும் தன்மை எப்படி வந்தது?' என்பன போன்ற நுண்ணிய கருத் துக்களை எண்ணித், திங்களும் இரக்கம் கொள்ளுமாறு அவள் சொல்லிய சொற்கள் அமைந்துள்ளமை காணலாம். இச்சொற்களால் சீதையின் மென்மைத் தன்மையும் பெருந்தன் மையும் நன்கு புலப்படுதல் தெளியலாம்.

சூர்ப்பணகை சந்திரனுடைய நிலவொளி யில் வருந்திய நிலையில், என்ன நினைக்கின் றாள் என்று பார்ப்போம்.

''கலையுவா மதியே கறியாக, வன்
சிலையின் மாரனைத் தின்னும் நினைப்பினாள்''
(2902)

''அணவில் திங்களை நுங்க அராவினைக்
கொணர்வென் ஓடி எனக்கொதித்து உன்னுவாள்''
(2905)

என்பன காண்க. கலைகள் நிறைந்த சந்திரனைக் கறியாகவும் சிலைவல் மன்மதனைச் சோறாக வும் கொண்டு தின்ன நினைக்கின்றாள். ஆனால், அவள் கைக்குத் திங்கள் எட்டவில்லை, ஆதலால் அவ்வெண்ணத்தை விட்டு, 'அதனை விழுங்குதற்கு இராகு என்னும் பாம்பினை விரைந்து சென்று கொணர்வேன்' என்று அந்த சந்திரன்மேல் கோபம்கொண்டு நினைப்பாள், என்பது கருத்து.

இதனால் சூர்ப்பணகையின் அரக்கத் தன் மையை, எவ்வளவு நன்றாகப் புலப்படுத்தியுள் ளார், கம்பர் காண்மின்! தனக்குத் தீங்கு செய் வதாகக் கருதப்பட்ட சந்திரனைத், தானே பிடித்துத் தின்ன வேண்டும் என்னும் கருத்தின ளாய்ப், பின்பு தன் கைக்கு எட்டாமல் விண் வழிச் செல்லும் அச்சந்திரனை, இராகு என்னும் பாம்பினைக் கொண்டேனும் விழுங்கச் செய்ய வேண்டும், என்று கொலையையே விரும்புகின்ற சூர்ப்பணகையின் வன்நெஞ்சிற்கும், சீதையின் மென்னெஞ்சிற்கும் எவ்வளவு வேறுபாடு! இவ் விருவர் நிலையினையும் மேலும் ஆய்ந்து காணின், பல வேறுபாடுகள் தோன்றும். உயர்ந்த காதற்குச் சீதை வரம்பு என்றும், இழிந்த காமத்திற்குச் சூர்ப்பணகை வரம்பு என்றும் சுருங்கக் கூறலாம்.

கம்பர், சூர்ப்பணகையைச் சொலல் வல்ல வளாகவும், நமக்குக் காட்டியுள்ளார். இராம னோடு அவள் உரையாடும் பகுதியைப் பார்க் கின், அது நன்கு புலப்படும். தன்னோடு உரை யாடுவோர் குறிப்பறிந்து, அவள் விரைந்து விடைபகருந்தன்மை, நமக்கு வியப்பை யுண் டாக்கும். இராமன் இலக்குவனை நோக்கி, 'வீர இவள் மூக்கும் காதும் விரைந்தறுக்க இவள் செய்த பிழையென்ன? என்று கேட்ட போது, இலக்குவன், நல்லாள் மேல் அப்பொல் லாதாள்ஓடிய நிகழ்ச்சியைக்கூறினானாக, அவன் கூறி முடித்தற்கு முன்னமே, சூர்ப்பணகை, 'மாற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்' என்று, தான் சீதையை நெருங்கிய தற்குக் காரணம் கூறுகின்றாள். இராமனை,

''சேற்ற வளை தன்கணவன்
அருகிருப்பச் சினந்திருகச்
சூல்தவளை நீருழக்கும்
துறைகெழுநீர் வளநாடா'' (2950)

என்று விளிக்கின்றாள். இங்கு இராமனுடைய நாட்டிற்குக் கொடுத்துள்ள அடைமொழிகள் ஆழ்ந்து சிந்தித்தற்குரியன. அறிவிற் குறைந்த அஃறிணை யுயிராகிய தவளை தானும், கலவிக்குத் தகுதியின்றிக் கருவுற்றிருக்கும் நிலையிலும், தன் கணவன் அருகில் வேற்றுச் சாதியைச் சேர்ந்த பெண்சங்கு இருத்தலைக்கண்டு பிணங்கி, நீரைக் கலக்குகின்ற நாட்டினையுடைய நீ, என் போன்ற அறிவும் அழகும் நிறைந்தோர் கலவிக்குரிய பருவத்தில், கணவன் பக்கத்தில் மாற்றாள் இருத்தலை நோக்கி, மனம் பொறாது அவளுக்குக் கேடு சூழக் கருதுதல் இயல்பே என்பதனை அறிதற்குரியவனாவாய்; ஆதலால், என் செயலுக்காகக் கோபம் கொள்ளுதலாகாது என்ற குறிப்பு அவள் விளியால் பெறப்படுதல் காணலாம். இவ்வாறு வருதலைக் கருத்துடை யடை கொளியணி என்பர். அகப்பொருட்டுறையில் இதனை இறைச்சியென்னும் உள்ளுறையாகக் கொள்வர். இதனால் பொருள் பொதிந்த அவள் சொல் வன்மை தெளியலாம்.

இனி, தன்னை மூக்கறுத்த செயல் தவறு என்பதுபடக்கூறி அழுது புலம்பியவள், இராமனைக் கண்டவுடன் அவனை மணந்துகொள்ள வேண்டும் என்னும் பெருங் காமத்தால், மூக்கறுத்த அச் செயலையே தன் நன்மைக்காகச் செய்தது எனவும், தன்மேல் வைத்த பேரன்பால் செய்த தெனவும். 'அப்பால் செல்லாமல் நம்மருங்கே யிருந்து விடுவாள்' என்ற எண்ணத்தாலும், அயலார் எவரும் விரும்பிப் பார்க்க மாட்டார்கள் என்ற கருத்தாலும் செய்ததே எனவும் மாற்றிக் கூறி நிறுவும் இவள் சொற்றிறன் வியந்து பாராட்டுதற்குரியதாகும். இவ்வாறே இவள் சாம, பேத, தான, தண்டம் என்ற நால்வகை யுபாயத்தாலும் இராமனை வயப்படுத்த உரைக்கும் சொற்றிறனை ஊன்றி நோக்கியுணரலாம்.

சூர்ப்பணகையை ஒருதலைக் காமத்திற்கு மேல் வரம்பாகத் திகழுமாறு கம்பர் அமைத்துக் காட்டியுள்ளார், என்பதை உளங்கொண்டு நோக்கின், இராமனுக்கு மனைவி ஒருத்திஉளள் என்பதை யுணர்ந்த பின்னும், அவன் மேல் காதல் கொண்டு அவள் கருத்தழிதலும், சீதையை மறைத்து வைத்தேனும் அச் சீதை வடிவு கொண்டு இராமனை அணைந்து தன் ஆசையை நிறைவேற்றிக்கொள்ள எண்ணுதலும், உறுப்பு அறுப்புண்ட பின்னரும் இராமனோடு இரண்டாவது மனைவியாகவேனும் வாழ ஆசைப்படுதலும், இராமன், ''அரக்கரை அழிக்கவே வந்திருக்கின்றான்'' என்று வெகுண்டு கூறிய பின்னும், ''இராவணனைக் கொல்லுதற்கும் துணைசெய்வேன்; அவனுக்கு இளையேன்'' என்று அண்ணனைக் கொல்லவும் துணை செய்வதாகத் துணிந்து கூறுதலும், மனைவி இருப்பதால் இராமன் உடன்படாவிடினும் இளையவனோடேனும் தன்னைச் சேர்க்குமாறு கூறுதலும், அவள் நிலைக்குப் பொருத்தம் மிக்கனவேயாம் என்பது புலனாகும்.

இராவணன் சீதையைக் கவர்ந்து வரச் செல்லுமாறு அச் சீதையின் அழகைப் பலபடப் புகழ்ந்துரைத்தது கேட்ட அவ்விராணன் இரவில் சீதையின் உருவெளித் தோற்றத்தைக் கண்டு இவள் உண்மையான சீதையா? என்று அறியச் சூர்ப்பணகையை விளித்துக் கேட்ட போது,

''செந்தாமரைக் கண்ணொடும், செங்கனி
வாயினோடும்,
சந்தார்தடந் தோளொடும், தாழ்தடக்
கைகளோடும்,
அந்தார் அகலத்தொடும், அஞ்சனக் குன்றம்என்ன,
வந்தான் இவன்ஆகும் அவ்வல்வில் இராமன்''

என்று, அவள் அன்று கண்ட எழில்மிகு வடிவத்தையே உருவெளித் தோற்றமாகக் கொண்டு கூறியதும்,

''சிற்றிடைச் சீதை யென்னும், மான் கொண்டுடோடு நீயுன் வாள்வலி யுலகங் காண, யான் கொண்டாடும் வண்ணம் இராமனைத் தருதி யென்பால்'' என்று இராவணன்பால் வேண்டுவதும், சூர்ப்பணகை இராமன்பால் கொண்ட காம மிகுதியை யுணர்த்தி நிற்றல் காணலாம். இதனால் பகைவரும் விரும்பும் இராமனது பேரழகு புலப்படுகின்றது. உண்மைக் காதலுடைய சீதை இராமனை அடைந்தின்புறுகின்றாள். வஞ்சனை மிக்க நிலையிலா மனமுடைய சூர்ப்பணகை, அவனை எய்தாமலே அழிகின்றாள்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired
HR&CE Administration Dept

# சப்த மாதர்கள்

பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை,

திருமயிலாடுதுறைப்புராணம்

பிராமி மாகேசுவரி கௌமாரி வைஷ்ணவி வராகி இந்திராணி சாமுண்டி என்னும் எழுவரும், சப்த மாதர்கள் எனப்படுவர். 'சப்த மாதர்கள்' என்னும் இந்த ஏழு தெய்வ மகளிரும், மாயூரம் என்னும் திருமயிலாடுதுறைக்கு அருகில், அதனைச் சூழ்ந்துள்ள ஏழு தலங்களில், சிவபெருமானை அன்புடன் போற்றிப் பூசித்து வழிபட்டு அருள்பெற்றனர். 1. பிராமி பூசித்த தலம் திருத்தான்றோன்றீசம் என்னும் சுயம்புநாதர் கோயில். 2. மகேசுவரி வழிபட்டது கருணாம்பேட்டை. 3. கௌமாரி போற்றியது கஞ்சாறு என்னும் ஆனந்த தாண்டவபுரம். 4. வைஷ்ணவி வணங்கியது பசுபதீசுவரம். 5. வராகி இறைஞ்சியது சக்திபுரி என்னும் கழுக்காணிமுட்டம். 6. இந்திராணி வழிபட்டது தருமபுரம், 7. சாமுண்டி பூசித்தது உத்தரமாயூரம். இச் செய்தியை மகாவித்துவான் பெருங்கவிஞர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் பாடிய, திருமயிலாடுதுறைத் தலபுராணப் பாடல்கள் உணர்த்துதல் காணலாம்.

பேச லாம்புகழ்ப் பிராமிஎன் றுரைப்பவள், தான்தோன்  
றீச நாதனை, இமையவர் வாழநஞ் சுண்டு  
நாசம் இல்லியை, நலத்தகு பூசனை ஆற்றித்  
தேசு அமைந்தபல் வரத்தொடு, சிறப்பெலாம் பெற்றாள்! (1)

சிரத்து மாமதி சூடிய தேவனைக், கருணா  
புரத்து நாதனைப் புண்ணிய மூர்த்தியைப், புகழ்சால்  
உரத்து மேம்படும் மயேச்சரி பூசனை உஞற்றி,  
வரத்து மேதகு சிறப்பெலாம் பெற்றனள் வாழ்ந்தாள்; (2)

ஆறு சூடியை, அற்புதக் கூத்தனை, அவிர்கஞ்  
சாறு மேவிய சங்கரன் துணைக், கவு மாரி  
ஊறும் அன்பினில் ஒளிகெழு பூசனை உஞற்றி,  
ஏறு பற்பல வரங்களும் இன்புறப் பெற்றாள்! (3)

பரவு புண்ணிய நாதனைப், பசுபதீச் சரத்து  
விரவும் ஆதியை, அடியருக் கெளியவே தியனைப்,  
புரவு பூண்டொளிர் வயிணவி பூசனை புரிந்து,  
கரவு தீர்தரு வரமெலாம் பெற்றுளம் களித்தாள்; (4)

கரியின் தோல்திரு மேனியிற் கவினுறப் போர்த்தி,  
அரியின் கண்அடி அணிதரும் அண்ணலைச், சக்தி  
புரியின் மேவிய பொருளினை, வராகி பூசித்தாள்;  
தெரியின் மேம்படு வரமெலாம் சிறப்புறப் பெற்றாள்! (5)

கரம்வி ராயவச் சிரக்கவின் பெற்ற இந்திராணி,  
உரம்வி ராயபல் லுயிர்க்கும்நன் கருள்திருத் தரும  
புரம்வி ராயஅற் புதன் அடிப் பூசனை புரிந்தாள்;  
பரம்வி ராயபல் வரங்களும் பண்புறப் பெற்றாள்! (6)

பார மேருவிற் பரமனைப், பரவும்உத் தரமா  
யூர நாதனை, உம்பர்கள் தம்பெரு மானைத்,  
தீர மேதகு சாமுண்டி பூசனை செய்து  
வார மேயபல் வரங்களும் பெற்றுளம் மகிழ்ந்தாள் (7)

# பெரியபுராணத்தில் தத்துவ நெறிவிளக்கம்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

நமது தமிழ்நாட்டின் தெய்வப் புலவர்களுள் ஒருவர் சேக்கிழார் சுவாமிகள். அவர் இயற்றியருளியநூல் பெரியபுராணம். அஃது எத்தனையோ பல அரும்பெரும் சிறப்புக்கள் வாய்ந்தது. ஆயினும், பெரும்பாலோர் அதன் கண்வரும்கதைப் பகுதிகளை மட்டுமே அறிவர், படிப்பர். பெரியபுராண விரிவுரைகள் செய்வோரும், அதன் கதைப் பகுதிகளைமட்டுமே பொதுவாகக் கூறிச் செல்வர். பெரியபுராணம் மிக எளிய இனிய தெளிவான நடையிலேயே அமைந்திருக்கின்றது. எனினும், அதன்கண் இடையிடையே அரிய நுண்ணிய ஆழமான கருத்துக்கள் நிறைந்த பகுதிகள் பல உண்டு. அவற்றைப் பெரும்பாலோர் படிப்பதில்லை. பொதுவாக அவற்றை ஒதுக்கிவிட்டுக் கடந்து மேற்செல்வதே பெரும்பாலும் பழக்கமாக இருந்து வருகின்றது.

சேக்கிழார்:

சேக்கிழார்சுவாமிகள், நாயன்மார்களின் கதை அல்லது வரலாறுகளை மட்டுமே பாடி அருளியவர் அல்லர். கதைகளைக் கலைநுட்பமும் கருத்தாழமும் கற்பனைவளமும் தத்துவச் செறிவும் அமையும்படி அழகுறப்பாடி அளித்தவர். அவர்தம் பெரியபுராணம் வெறும் கதைகளை மட்டுமே கொண்டதன்று; எத்துணையோ பல சமய தத்துவ நுட்ப விளக்கங்களை உட்கொண்டது.

சம்பந்தர்புராணம்:

திருஞானசம்பந்தர் புராணத்தில், போதிமங்கையில், பௌத்த சமயத்தவர்களின் தலைவராக விளங்கிய சாரிபுத்தன் என்பவருக்கும், திருஞானசம்பந்தரின் அருள் ஆசிபெற்ற சம்பந்தசரணாலயர் என்பவருக்கும் இடையே நிகழ்ந்ததாக அமைந்துள்ள தத்துவ வாதப் பகுதி, மிகவும் நுண்பொருட்செறிவு வாய்ந்ததாகும். அப்பகுதியின்கண், சேக்கிழார் விளக்கியருளும் தத்துவச் செந்நெறியின் சிறப்பினைக் காணலாம். ஆதலின் அப்பகுதியிற்போதரும் பெரியபுராணப் பாடல்களின் கருத்துக்கள், இங்குச் சுருக்கமாகத் தொகுத்துப் பலரும் படித்து இன்புற, உரை நடையில் தரப்பெறுகின்றன.

தத்துவவாதம்:

பௌத்தர்கள் விடுத்த அறைகூவலை ஏற்றுக்கொண்ட சம்பந்த சரணாலயர், பௌத்தர்களின் தலைவராகிய சாரிபுத்தன் என்பவரை நோக்கி, ''இனி நாம் வாதத்தைத் தொடங்குவோம். உங்களுடைய கடவுளின் இயல்பினையும், அவர் அருளிச்செய்து விளக்கியுள்ள வீடுபேற்று இயல்பினையும் பற்றிக் கூறுக'' என்றார். அதன்படியே தொடங்கப்பெற்ற சமய வாதத்தில், சாரிபுத்தன் என்பவர், தமது பௌத்த சமயத்தின் கொள்கைகளைக் கூறலாயினர். அவர்கள் புரிந்த தத்துவ வாதம் வருமாறு:-

சாரிபுத்தன்: புத்தர் பெருமான் எங்களது பௌத்த சமயத்தின் தலைவர். அவர் எல்லையற்ற வழிகள்தோறும், எத்தனையோ பற்பல எண்ணற்ற பிறவி வேறுபாடுகளில் புகுந்து பிறந்தும் இறந்தும் பிற உயிர்களுக்கு உறுதி செய்து, பின்னர் அக்கதியினின்றும் மாறி வீடுபேறு எய்தினர். கணபங்கம் என்னும் நிலையாமை இயல்பு கூறுவது, எங்களுடையபௌத்த சமயம். அதன்கண் நின்று தானம் தவம் யோகம் என்பவற்றை முறையாகச் செய்தால் அவற்றின் பயனாக ஞானம் உதிக்கும். அந்த ஞானத்தினால் பேரின்ப முத்தியைப் பெறலாம். அங்ஙனம் ஞானம் எய்திப் பேரின்ப முக்தி பெற்றவரே, எங்களுடைய புத்தர்பெருமான். எல்லா மக்களும் உய்திபெற்று ஈடேறும்படி, அவர் தருமநெறிகளை உலகிற்கு உபதேசித்தார். அவரே நாங்கள் வணங்குகின்ற கடவுளாவார்.

சரணாலயர்: நல்லது; உங்களது தலைவர் ஆகிய புத்தர் வீடுபேறாகிய முத்திபெற்றார் என்று கூறினீர். அம் முக்தியின் இயல்பு எத்தகையது?

சாரிபுத்தன்: அறிவுள்ள உயிர்கள் எல்லாம் உருவம்-வேதனை- குறிப்பு - செய்கை - ஞானம் என்கிற, ஐந்து கந்தங்களும் சேரும் சேர்க்கையால் உண்டாவன. இவ்வைந்தும் நீங்கி அழிந்தொழிதலே வீடுபேறு ஆகிய முத்திஅல்லது நிர்வாணம் என்பது, பௌத்தர்களாகிய எங்களுடைய கொள்கை.

சரணாலயர்: உங்களது சமயத்துக்குரிய தலைவராகிய புத்தர் முத்திபெற்றார் எனில், அவர் முன்பு பெற்றிருந்த ஞானம் முதலாகிய ஐந்து கந்தங்களின் சேர்க்கையும், அவரிடமிருந்து ஒருங்கே அழிந்து கெட்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் அழிந்து கெட்டனவாயின் உங்கள் கொள்கையின்படி அவரும் அழிந்தனராதல் வேண்டும். அழிந்த பின்னர் அவரை இருப்பவராகக் கொண்டு, நீவிர் விகாரை **(Vihar)** என்னும் கோயில்களைக் கட்டி, அவற்றுள் நிற்றல் இருத்தல் ஆகிய நிலைகளில், அவருக்கு வடிவங்களையும் அமைத்து, ஊட்டுதல் பூச்சூட்டுதல் கேட்பித்தல் முதலிய வழிபாடுகளையும் செய்வது எற்றுக்கு? நீவிர் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக்கொள்பவர் யாவர்?

சாரிபுத்தன்: இருவினைக்குக்காரணமாகப் பஞ்சகந்தம் ஆகிய உடம்புகெட, எம் தலைவன் முத்தியிற் சேர்ந்திருக்கின்றார். அதனால் அவருக்குக் கோயிலும் வடிவமும் விழாவும் பூசையும் எடுத்தல் பொருந்துவதேயாகும்.

சரணாலயர்: இருவினைக்குக் காரணமான பஞ்ச கந்தங்களால் ஆகிய உடம்பு கெடுதலே முத்தி என்றீர். அங்ஙனமாயின் முத்தியிற் சேர்ந்ததும், அவருக்கு உடலும், பொருள்களை உணரும் கருவிகளாகிய கண் முதலிய கரணங்களும் இல்லாதொழிந்தால், அவருக்கு உணர்வு உதித்தல் இல்லையாகும். அவர்பொருட்டு உங்களாற் செய்யப்பெறும் வழிபாட்டை ஏற்றுக் கொள்ளுதற்கு, அவருக்கு உணர்வு வேண்டும்; அவருக்கு அவ்வுணர்வு உண்டாதற்கு வாய்ப்பு இல்லை. ஏனெனில் முத்தி நிலையில் ஐந்து கந்தங்களும் அழிந்து விடுகின்றன என்பது உங்கள் கொள்கை. ஆதலின் உங்கள் தலைவனுக்கு முத்திநிலையில் உணர்வு நிகழ்வதும், நீவிர் செய்யும் வழிபாடு புலனாவதும் இல்லை. எனவே நீவிர் அவர் இருப்பதாகக் கொண்டு இங்கு எடுக்கும் கோயில்-வடிவம்-வழிபாடு முதலியன பயனில் செயல்களேயாகும்.

சாரிபுத்தன்: அறிவு உணர்தலின்றி உறக்கத்தில் அழுந்திக் கிடக்கின்ற ஒருவனை, மற்றொருவன் நிந்தித்து மதிப்பானாயின் உறங்குபவன் அதனை உணராவிடினும், நிந்தித்து மிதித்தவனுக்கு அச்செயல்களானாய தீவினைப் பயன் வந்தேதீரும். அதுபோல, முத்தியில் இருக்கும் எங்கள் முதல்வன் எமது வழிபாடு முதலியவற்றை உணராவிடினும் கூட, யாம் செய்யும் வழிபாடு முதலியவற்றின் பயன் எமக்கு வருதல் திண்ணம்.

சரணாலயர்: ஒருவன் தனக்காகச் செய்யப்படும் ஒரு செயலின் பயனை எய்துவதற்கு, அதனை அவன் உடன்படுதலோ வெறுத்தலோ செய்தல் வேண்டும். இரண்டுமே நிகழாத போது, ஒருவன் ஒரு செயலின் பயனை எய்துவதில்லை. உம் தலைவன் பஞ்சகந்தமும் அழிந்த நிலையாகிய முத்தியில் நின்றான் எனப்படுதலால், உடன்பாடோ வெறுப்போ அவன்பால் நிகழ்தற்கு வாய்ப்பு இல்லை. ஆதலின் அவனும் வழிபாட்டினை ஏற்றுக்கொள்ளுதலோ பயன் தருதலோ இல்லை.

சாரிபுத்தன்; பயன் வருதலுக்கு உடன்பாடும் எதிர்வும் ஆகிய உணர்வுடைய மனநிலை வேண்டுவதில்லை. முன்னைய உணர்வு இன்றி உறங்கினவனுக்குப் புது நிகழ்ச்சிகளில் உடன்பாடும் எதிர்வும் இல்லை. ஆனால் அவனைக் கொன்ற ஒருவனுக்குக் கொலைப் பாவம் வரும். அதுபோல எம் இறைவனுக்கு எமது வழிபாட்டில் உடன்பாடும் எதிர்வும் இலவாயினும், வழிபாட்டின் பயன் எமக்கு வருதல் ஒருதலை.

சரணாலயர்: நன்று சொன்னாய். உறங்கினோன் கொலைப் பயன்போல, வழிபாட்டின் பயன்வரும் என்றாய். கொலையினால் பிரிக்கப்பட்ட உயிரும், உடலும் கொலைத் துன்பம் எய்திய உட்கருவிகளும் உண்டு என்பது, நின் உவமையினால் பெறப்படும். அவ்வுண்மையின்படி, உனக்கு உன் வழிபாட்டின் பலன் வருவதற்கு, உனது வழிபாட்டிற்குரிய இறைவனுக்கு உயிரும் உடலும் கருவிகளும் ஆகியவை அம் முத்தி நிலையிலும் இருத்தல்வேண்டும். அங்ஙனம் இருப்பின், அது கந்தங்கள் அழிந்த நிலை அன்றாம். அன்றாயின் நுமது புத்தன் முத்தியில் சென்றதும் இல்லையாய் முடியும். நீ செய்யும் வழிபாட்டின் பயன் நினக்கு வரவேண்டுமானால், நின் முதல்வனுக் உடல் உயிர் கரணம் ஆகியவைகள் அமைந்திருத்தல் வேண்டும்; அவன் அழியாத முத்தியில் சென்றிருப்பானாயின், உடல் உயிர் கரணம் முதலியன அவனுக்கு இல்லையாய், முன்பே கெட்டொழிந்திருத்தல் வேண்டும். இதனால் நின்னுடைய கொள்கையும் கூற்றும், ஒன்றிற்கொன்று பொருந்தாமல், முற்றிலும் முரண்பட்டு நிற்கின்றன.

மேலும் நின் தலைவன் ஒழியாத பேரின்ப முத்தியுற்றான் என்றாய்; ''ஞானமே ஆன்மா; அது நீரோட்டம் போலத் தொடர்ச்சியாய்க் கணந்தோறும் தோன்றி அழியும்; அவ்வாறு தோன்றி அழியுங்கால் வரும் வாசனையைப் பற்றுதலால் அறிவு நிகழும். அவ்வாசனையும் ஞானமும் அழிவதே, முத்தி'' என்பது நினது கொள்கை. இன்பம் அடைதற்கு அறிவு உள்ளதாதல் வேண்டும். அறிவு நிகழ்தற்குக் கந்தங்களின் செயற்பாடு வேண்டும். நீ சொல்லுவது போலக் கந்தத்துடனே அறிவும் கெடுதலே முத்தியாயின், அந்த முத்தியில் இன்பம் அடைதற்கு எத்தகைய வாய்ப்பும் இல்லை.

''கந்தங்கள் அவிந்து பொய்யாய் முடிந்த நிலையில், எம் புத்தன் முத்தியில் சேர்ந்தான்'' என்றும்; ''அதற்கும் முன்னரே அவன் எல்லாப்பொருள்களையும் உணர்ந்து, உலகம் உய்ய அறம் உரைத்துப் போயினான்'' என்றும்

கூறினாய். கணந்தோறும் தோன்றி அழியும் இயல்பிற்றாகிய அறிவினையுடைய அவன் கணந்தோறும் தோன்றி அழியும் பொருள்கள் முழுவதையும் ஒருங்கு உணர்தல் யாங்ஙனம்? நும் புத்தன் பெற்ற முத்திநிலை பொய்யாயின வாறுபோல, அவன் எல்லாம் உணர்ந்து அறம் உரைத்துப் போந்தான் என்பதும், பொய்யே யாகும்.

சாரிபுத்தன்: உணர்வானது பொதுவும் சிறப்பும் என்று இரண்டு வகைப்படும். ஓர் இடத்தில் அடர்ந்துள்ள மரங்களைப் பிரித்துக் கூறாமல், தொகுதியாக நோக்கிக் காடு என்றல் பொது உணர்வு. அங்ஙனமின்றி அங்குள்ள மரங்களைத் தனித்தனியாகச் சுட்டித் தேக்கு-வேங்கை-சந்தனம்-மந்தாரம் என்று தனித் தனியே பிரித்து உணர்தல் சிறப்புணர்வு. இவ்வாறே எல்லாப் பொருள்களின் உணர்வும், பொதுவும் சிறப்பும் என இருதிறப்படும். தீயானது விறகுக் குவியலில் வைப்பினும் சுட்டெரிக்கின்றது. விறகைப் பிரித்துத் தனித்தனியே ஒவ்வொன்றாக வைப்பினும் சுட்டெரிக்கின்றது. அதுபோல உணர்வானது, எல்லாப் பொருள் களையும் சேர்த்து ஒரு தொகுதியாய்ப் பொது வாகவும் கண்டு கூறும்; தனித்தனியாய்ப் பிரித்துச் சிறப்பாகவும் சுட்டும். இவ்வகையிலேயே எங்கள் முதல்வனும் பொருள்களை யெல்லாம் தொகுத்தும், விரித்தும் முதற்கண் தான் உணருகின்றான். பின்னர்த் தொகுத்தும் விரித்தும் ஏனையர்க்கு உரைக்கின்றான்.

சரணாலயர்: நன்று கூறினாய். உணர்வு இல்லாத சடமாகிய தீயின் செயலை, சித்து ஆகிய உணர்வின் செயலுக்கு உவமையாக எடுத்துக் காட்டினாய். பொருள்களைச்சார்ந்து நின்ற உணர்வு உருவுடையதன்று. நின் உவமை, இடப்பொருத்தம் உடையதன்று. மற்றும் நின் தலைவன் நிகழ்காலமேயன்றி, அதனை முன்னும் பின்னுமாகத் தொடர்ந்துவரும் இறப்பு எதிர்வு என்னும் காலங்களையும் தொகுத்து, முக்காலும் ஒருங்கே அறிவான் என்றாய். அங்ஙனம் நின் தலைவன் அறிவானாயின் முக்காலமும் உணரும் உணர்வுக்கு உவமை யாகக் கூறிய பொருளாகிய எரியும்கூட, நிகழ் காலத்தில் இடம்பெற்றபோது சுடுதலே அன்றி ஏனைய இறப்பு எதிர்வுகளிலும்கூடச் சென்று சுடுதல் வேண்டும். தீயானது அங்ஙனம் சுடுதல் யாண்டும் இல்லையாதலின், நீ கூறிய உவமை, காலப் பொருத்தமும் உடையதன்று.

ஆதலின், நீ கூறிய முத்தியிலக்கணம் பொருந்தாதவாறுபோல, நின் தலைவன் ஒரு கணத்திலேயே எல்லாப் பொருள்களையும் முழுதொருங்குணர்ந்தான் என மொழிந்த நின் கூற்றும் பொருந்தாமல் புரைபட்டது. எனவே இத்தகைய புரைபட்ட அறிவுடன், நின் தலை வன் ஆகிய புத்தன் கூறிய திரிபிடகம் என் னும் நூலும் புரையுடைத்தேயாகும்.

இது கேட்ட சாரிபுத்தன், மேலும் வேறு ஏதும்பேச வழியின்றி வாயடைத்து நின்றான். தான் கூறியவற்றைக் கொண்டே, தன் கூற்றுக் களை மறுத்தது கண்டு, அவன் செய்வது அறி யாது திகைத்தான். அப்போது சம்பந்தப்பெரு மான், ''சமயம் என்பது அறநெறி பிறழாத பயன்மிக்க நல்லொழுக்க வாழ்க்கையேயன்றி வெறும் அறிவுநெறி தழுவிய பயனில் வாத மும் நம்பிக்கைகளும் அன்று'' (Religion is not mere correct belief but righteous living) என்று, பல வகைகளில் அறிவுறுத்தி, அவனைச் சிந்தை திருத்தித் தெளிவுபெறச் செய்தருளி னர் என்று, சேக்கிழார் சுவாமிகள் தமது பெரிய புராணத்தின்கண் (செய்யுட்கள் 2817 முதல் 2827 வரை) கூறிச் செல்கின்றார்.

முடிவுரை :

இப் பெரியபுராணப் பகுதியில் ,நாம் ஊன்றி நோக்கி உணர்ந்து கொள்ளத் தகுவன பல உள்ளன. போதிமங்கை யில் வாதம் நிகழ்ந்தபோது, சேக்கிழார்பெரு மான் அதனை உடனிருந்து நேரேகாண்கிலர். மற்று, இங்ஙனம் நிகழ்ந்திருத்தல் கூடும் என் பதனையே அவர் நுண்ணிதின் ஓர்ந்துணர்ந்து ஆராய்ந்து பாடியருளியிருக்கின்றார். இஃது அவர்தம் நுண்மாண் நுழைபுலத்திற்குச் சிறந்த பெரும் சான்றாகும். பண்டைக் காலத்தில் ''ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள் பட்டிமண்டபத்துப் பாங்கறிந்து ஏறி'' இருந்து நிகழ்த்திய சொற்போர்த்திறன் களையே ,சேக்கிழார் பெருமான் இப்பகுதியில் பொற்புற விளக்கியுள்ளார். சமய வாதங்கள் நேர்தல் கூடாது; ஒரோவழி இன்றியமையாது நேர்ந்தால் வாதங்களை எங்ஙனம் நிகழ்த்துதல் வேண்டும் என்பதனைத் தருக்கநெறி முறை களுக்கு ஏற்பவும், தத்துவ நூற்கொள்கைகளின் அடிப்படையிலும், சுவாமிகள் நம் உளங் கொளத் திறம்பட நிகழ்த்திக் காட்டியருளி யிருக்கின்றார்.

ஆசிரியர் அருள்நந்திசிவாசாரியர், தமது சிவஞானசித்தியாரின் பரபக்கப் பகுதியில் பல வேறு மதக்கொள்கைகளையும் முறையே எடுத் துக்கூறி, அவற்றைப் பின்னர் மறுத்துரைத்து, நமக்குத் தத்துவஞான விளக்கம் செய்தருள் கின்றார். அத்துறையில், அருள்நந்தி சிவத்திற்கு ஒரு வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் விளங்கியவர் சேக்கிழார் பெருமானேயாவர் எனலாம்.

பெரியபுராணத்தில், திருஞானசம்பந்தர் வரலாற்றில், சம்பந்த சரணாலயரால் மறுக்கப் பட்டபௌத்தக் கொள்கை, மாத்தியமிகம் யோகாசாரம் வைபாடிகம் சௌத்திராந்திகம் என்னும் நால்வகைப் பிரிவுகளுள், சௌத்திராந் திகம் என்பதேயாகும். இதனையே, சித்தியார் பரபக்கப் பகுதியில் அருள்நந்தி சிவம் விரிவாக விளக்கி மறுத்துரைத்து அருள்கின்றார். எனவே ஆசிரியர் அருள்நந்திசிவத்தின் தத்துவ விளக்கச் செந்நெறிக்கு வழிவகுத்துக் காட்டிய சான் றோர் சேக்கிழார் சுவாமிகளே என்பதும், சிவ ஞானசித்தியாரின் பரபக்கப்பகுதி அமைப்புக்கு அடிகோலிய அருள்நெறிநூல் பெரியபுராணமே என்பதும், நன்கினிது தெளியப்படும்.

# சிவபெருமானின் திருப்பெயர்கள்

சிவபெருமானுக்குப் பவன் உருத்திரன் மிருடன் ஈசானன் தாணு சம்பு சருவன் உக்கிரன் பர்க்கன் பரமேசுவரன் என்னும் சிறப்புப் பெயர்கள் வேதாகமங்களில் குறிக்கப்பெற்றுள்ளன. அப்பெயர்களின் பொருள்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தனவாகும். (1) பவன்-எல்லாவற்றையும் தன்னிடமிருந்து தோற்றுவிப்பவன். (2) உருத்திரன்-உயிர்களின் பிறப்பு இறப்பு ஆகிய நோய்களை நீக்கிக் குற்றங்களையெல்லாம் ஒருங்கே போக்குபவன். (3) மிருடன்-எல்லோரையும் சுகம் அடையும்படிச் செய்து உரிய இடத்தில் சேரும்படி வைப்பவன். (4) ஈசானன்-தனக்கு மேற்பட்டோர் ஒருவரும் இல்லாதவன். (5) தாணு-சிறிதும் அசைவு இன்றி நிலைபெற்றிருப்பவன். (6) சம்பு-உயிர்களுக்கெல்லாம் வீடுபேறின்பத்தினைக் கொடுத்தருள்பவன். (7) சருவன்-கொடியவர்களைத் தண்டித்துக் கொல்லுபவன். (8) உக்கிரன்-சூரியன் சந்திரன் முதலிய கோள்களின் தோற்றம் மறைவு, கடல்கள் எல்லை கடத்தல், அடங்கி நிற்றல், நிலம் தீ நீர் வளி விசும்பு என்னும் ஐம்பூதங்களின் தோற்ற ஒடுக்கங்கள், ஆகியவற்றிற்கெல்லாம் காரணமாக நின்று, முறைப்படி நடத்துபவன். (9) பர்க்கன்-சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய மூன்றிற்கும் ஒளிகொடுப்பவன்; காயத்திரி முதலிய மந்திரங்களால் வழிபடப்பெறுபவன்; உயிர்களின் அறியாமை முழுவதையும் போக்கியருள்பவன். (10) மாதேவன்-எல்லையில்லாத பேரொளி மயமாக வீற்றிருப்பவன். (11) பரமேசுவரன்-ஆக்கல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் ஆற்றுபவன்.

''அடங்கலும் தன்பால் தோற்றம் ஆதலாற் **பவன்**; ஆன்மாக்கள்
மடங்கரும் பிறப்பு இறப்பு ஆமயம் தவிர்த் திடுத லால், தோம்
உடங்குகொல் உருத்திரன், யாவோரையும் சுகப்படுத்தி
இடங்கொள வைத்த லாலே **மிருடன்** என்று இயம்பா நிற்பர். (1)

ஒருதனக்கு உயர்ந்தோர் இல்லா உண்மையினால் **ஈசானன்**;
மருவு அசைவு அற்றுஇருக்கும் மாண்பு மேவுறலால் **தாணு**;
பொருவரும் முத்தி யின்பம் புணர்த்திடும் அதனாற் **சம்பு**,
வெருவுறத் துட்டரைக் கொல் விதத்தினால் **சருவன்** என்பார். (2)

ஒண்கதிர் முதற்கோள் யாவும் உதித்தல் அத்தமித்தல்; ஒன்றில்
எண்கடல் கரைமேல் தாவாது அடங்குதல் இருத்தல்; பூமுன்
விண்கடை யாய பூதம் வெளிப்படல் ஒடுக்கல்; ஆதி
எண்கொளத் தக நடத்தும் வலியின் **உக்கிரனே** என்பார். (3)

ஒளிகிளர் உருவால் என்றூழ் உடுபதி அழற்கு, நாளும்
ஒளிகொடுத் திடலால்; காயத்திரி முதல்உள மனுக்கள்
ஒளிகெழ உபாசித் தேத்தும் உண்மையால்; உயிர்கட் கெல்லாம்
ஒளியுற அவித்தை முற்றும் ஒழித்தலால்' **பர்க்கன்** என்பார். (4)

அளவரும் ஒளியோன் ஆகி அமர்தலினால் மாதேவன்;
தளர்வற வினை ஐந்து ஆற்றும் தன்மையாற் **பரமேசன்**; சீர்
உளபல நாமம் இன்னும் உள்ளன சிவனுக்கே; அப்
பளகு இலாதவனோ வேறோ, பரம் எடுத்து உரைத்தி என்றார்'' (5)

என்று, இவ்வாறு இப்பெயர்களின் பொருள்களை, மகாவித்துவான்-பெருங்கவிஞர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள், தாம் பாடிய திருஅம்பர்ப் புராணம் என்னும் நூலில், அழகுற விளக்கிப்பாடியிருக்கின்றார். இப்பாடல்கள் நம்மனோர் படித்துப் பெரிதும் இன்புறுவதற்கு உரியனவாகும்.

—**ஆசிரியர்.**

R. RAJU,
Commissioner H.Qrs.
HR&CE Administration Dept.

# "தேனில் விளைந்த தெள்ளமிழ்தம்"*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

''தேனில் விளைந்த தெள்ளமிழ்தம்'' என்னும் தலைப்பில், 'தேன்' என்பது மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தையும்; 'தெள்ளமிழ்தம்' என்பது, அவர் இயற்றியருளிய திருச்சிற்றம்பலக்கோவையார் என்னும் திருக்கோவையார் நூலையும், ஈண்டுக் குறிக்கும். இத்தொடர் 'அன்பினில் விளைந்த ஆரமுதே' எனவரும் திருவாசகத் தொடரினைத் தழுவி அமைந்தது. பழைய பாடல் ஒன்றில் 'தேனூறு செஞ்சொல் திருக்கோவை' என வரும் இனிய சிறந்த தொடரும், இங்கு நாம் எண்ணி இன்புறுதற் குரியது. திருவாசகம், திருக்கோவையார் என்னும் இருபெரு நூல்களும் மணிவாசகப்பெருமானால் இயற்றப் பெற்ற மாட்சிமையும், சிறப்பும் உடையன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று கூறப்படுதல்போல், நம் மணிவாசகரின் திருவாசகமும், திருக்கோவையாரும், தம்முள் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய, 'இரட்டைக் கவிதை இறையருட் பெருநூல்கள்' என்று, நாம் போற்றுதற்குத் தக்க அளப்பரும் சிறப்பும், வளப்பெரு மாட்சிமையும் உடையனவாகும்.

திருவாசகம், திருக்கோவையார் :

(1) திருவாசகம், திருக்கோவையார் என்னும் இருபெரும் நூல்களும், நம் தமிழ்மொழியின்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள், முதன்மைச் சிறப்பிடம் பெறுதற்குரியனவாய், பெரும் புகழ் வாய்ந்து திகழ்வனவாகும்.

(2) திருவாசகம், மணிவாசகரது அயரா அன்பின் திறனை விளக்குகின்றது; திருக்கோவையார், அவர்தம் அரிய புலமையறிவின் பெற்றியினைப் புலப்படுத்துகின்றது.

(3) சிவபெருமானின் அருள்நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம்; நமது அருமைச் செந்தமிழ் மொழியின் சீரிய அகப்பொருள் இலக்கணங்களைத் திறம்படத் தெளித்துணர்த்தித் தேற்றுகின்றது திருக்கோவையார்.

(4) மாணிக்கவாசகப் பெருமானின் சிவானுபவ நலங்களைத் திருவாசகத்தால் உணரலாம்; அவர்தம் அளப்பரிய செந்தமிழ்ப் புலமை நலத்தின் சிறப்பினைத் திருக்கோவையார் நமக்குத் தெள்ளிதிற் புலப்படுத்தும்.

(5) திருவாசகம் சிவநெறித் திருநூல்; திருக்கோவையார் செந்தமிழ் மொழிப் பெருநூல். திருவாசகம் இயல்-இசை நூல்; திருக்கோவையார் இயல்-இசை-நாடகம் என்னும் முத்தமிழும் அமைந்த நூல்.

(6) திருவாசகம் தெவிட்டாத தேனை அனைய சிறப்பினதெனின், திருக்கோவையார் அத்தேனிடை ஊறிய தெய்வநலஞ் சிறந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வதாகும்.

(7) இறைவனை ''நின் திருவருள்காட்டி என்னையும் உய்யக் கொண்டருளே'' (597) என்று இறைஞ்சி, தம்முயிர் உய்வது குறித்து மணிவாசகர் பாடியது திருவாசகம்; 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பரிவில், மன்னுயிர்கள் உய்வது குறித்து அவராற் கலைநலம் அமையப் புனைந்து பாடப் பெற்றது திருக்கோவையார்.

(8) மணிவாசகரின் சிறந்த அருளனுபவ நலம் (Mysticism) திருவாசகமாக வெளிப்பட்டது; மாணிக்கவாசகர் தாம்பெற்ற சிறந்துயர்ந்த அருளனுபவ நலங்களைக் கலையியலும் அழகியலும் கலந்தினிது புனைந்துபாடியது திருக்கோவையார். (Mysticism combined with aestheticism and artistry).

(9) மணிவாசகர் பெற்ற சிவானுபவத் திறங்களை அருளியல் நிலையில் விளக்குவது திருவாசகம்; அச் சிவானுபவத் திறங்கள் ஆகிய பேரின்பத்தினையே, நம்மனோர் உணர்தற் பொருட்டு, நாம் அறியும் எளிய சிற்றின்பச் செய்திகளாக உலகியல் நிலையில் வைத்து விளக்குவது திருக்கோவையார்.

---

* மதுரைத் தியாகராசர் கல்லூரியில், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆதரவில், 'கலைத் தந்தை' கரு. முத்து. தியாகராசச் செட்டியார் அவர்களின் நினைவு அறக்கட்டளை அமைப்பின் சார்பில், அவர்தம் நினைவு விழா நாளில் (30-7-81), நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவியது.

(10) மணிவாசகரின் இயல்பான உணர்ச்சித் திறங்களின் பெருக்கம் ("Spontaneous over-flow of powerful feelings") திருவாசகம்; அவ்வுணர்ச்சிகள் அமைதி நிலையில் ஒருங்கு திரட்டி உருவாக்கப்பெற்றது ("Emotions recollected - & remoulded - in tranquallity") திருக்கோவையார்.

**திருக்கோவையார்:**

திருவாசகம் திருக்கோவையார் என்னும் இவ்விரண்டும், சங்ககால இலக்கியங்களுக்கும், பிற்கால நூல்களுக்கும் இடையே, ஓர் எல்லைக் கல் போல விளங்கும் மேம்பாடுடையன. பிற்காலக் கவிதை வகைகள் பலவும் தோன்றுதற்கு வழிவகுத்துக் காட்டிய கழிபெருஞ் சிறப்பினவாய், முற்காலச் சங்கத்தொகை நூல்களின் பிழிவாய், அவற்றினின்றும் ஓரளவு வேறுபட்ட பொருளும் போக்கும் நடையும் அமைப்பும் உடையனவாய், புதுமையும் பழமையும்பொருந்தக் கலந்து, பொலிவும் வளமும் மிக்க மாட்சிமையவாய், இவ்விரண்டும் வீறுற்றுயர்ந்து விளங்குகின்றன.

சங்ககால நல்லிசைப் புலவர் பெருமக்கள் எல்லோரும், "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கமாய்" விரிந்து பரந்து விளங்கும் இவ்வுலகினையும்; இவ்வுலகின்கண் "வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும் வாய்ந்து, நூறு நூறாயிரம் இயல்பின"வாகத் திகழும் எண்ணற்ற பலதிற உலகியற் புறப்பொருள்களின் இயற்கைக் காட்சி நிகழ்ச்சிகளையும்; இவையெல்லாவற்றின் அடிப்படையாகவும் விளைவாகவும் மனித மனத்தின்கண் "ஓங்கியாழ்ந்து அகன்று நுண்ணியவாய்" எழும் உலப்பிலா உள்ளுணர்ச்சிகளையுமெல்லாம் தெள்ளிதின் உணர்ந்து, கலைநலமெல்லாம் கனியச் செழும்பொருட் பாடல்களாகத் திறம்பட வெளியிட்டருளியுள்ளனர். அவர்தம் அவ்வருமைத் திறம், நாம் சாலவும் வியந்து நயந்து போற்றி மகிழத்தக்கது.

ஆயினும், சங்ககாலப் புலமைச் சான்றோர்களின் அளவிலடங்காக் கவிதை யனுபவ உணர்ச்சிகள் அனைத்தும், நம்மனோரின் ஐம்பொறியனுபவ அளவிற்குட்பட்டு அடங்கிவிடும் இயல்பினவேயாம். மற்று, நம் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகச் செழும் பாடல்களின்கண் வெளிப்படும் மிக மேலான தூய சிவானுபவ நிகழ்வின் உணர்ச்சிகளோ, "பூண்ட ஐம்புலனிற் புலப்படா இன்பம் புணர்ந்து, மெய்யுணர்வினிற் பொங்கும்" விழுமிய உணர்ச்சிகளாகும். சுருங்கக் கூறல் வேண்டின், சங்கச் சான்றோர்கள் ஐம்பொறியளவிற் புலப்படக்கூடிய உலகியலுணர்ச்சிகளையே பெரும்பாலும் பாடிச் சென்றனராக, மாணிக்கவாசகர் ஐம்பொறியளவிற்குட்படா தோங்கும் உயரிய கடவுளருளின்பப் பேருணர்ச்சிகளைப் பாடி விளக்கினர் எனலாம்.

இங்ஙனம், தாம் ஒருவர் மட்டும் தம் தனிநிலையில் நுகர்ந்திருந்த,ஐம்பொறியளவிற் புலப்படாச் செம்பொருள் அருளனுபவ இன்ப உணர்ச்சிகளை, அவை இயல்பாகத் தாமே தம் உள்ளத்திற் பொங்கியெழுந்து வழிந்தவாறு, திருவாசகமாகத் திருவாய்மலர்ந்த மாணிக்கவாசகர், அக் கடவுளருளின்பநல உணர்ச்சிகளை, ஏனைய மக்களாயினார்க் கெல்லாமும் எடுத்துரைத்து உணர்த்தி, அவர் தம்மையும் அப் பேரின்பப் பெருநலம் தலைப்படுமாறு செய்வித்தற் பொருட்டுப் "பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச், சென்று பயன் எதிரச் சொன்ன பக்கம்" போல, பல்லாற்றானும் நினைந்து புனைந்து "மனத்தின் எண்ணி மாசறத் தெரிந்துகொண்டு, இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்" என்று தொல்காப்பியனார் விதித்தருளிய முறையில் இயற்றியநூலே, திருக்கோவையார் என்னும் தேனில் விளைந்த தெள்ளமிழ்தநூல் ஆகும்.

**காதலின்பமும், கடவுளின்பமும்:**

ஆதலின், மாணிக்கவாசகர் தாம்பெற்ற ஐம்பொறியளவின் மேம்பட்ட தூய கடவுளருளனுபவப் பேரின்ப உணர்ச்சிகளை, நம்மனோர் எளிய இனிய முறையில் உணர்ந்து கோடற் பொருட்டு, நமக்குக் கைவந்த "கண்டுகேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்" காதலின்ப அனுபவ உணர்ச்சிநிலையின்கண் வைத்துத், திருக்கோவையாரின்கண் விளக்கியருளியுள்ளார். இங்ஙனம், கடவுளின்ப நலத்தின் பெற்றியினைக் காதலின்ப நலத்தினோடு ஏற்றபெற்றிஇயைத்து விளக்கும் திருக்கோவையாரின் சிறப்பியற் பண்பு, நம்மைப் பெரிதும் வியப்பில் ஆழ்த்தி விம்மிதமுறச் செய்யப் போதுவதாகும்.

திருக்கோவையார் நூலின்கண்தான், முதன் முதலாக இத்தகைய அழகிய புதியதொரு சிறந்த விளக்கத்தினை, நாம் காண்கின்றோம், மாணிக்கவாசகர்க்கு முன்னரும் பின்னரும் எத்தனையோ பல புலவர்களும், சான்றோர்களும், காதலின்ப நலத்தையும், கடவுளின்ப நலத்தையும் பற்றி ஒரோவழி பாடியுள்ளனராயினும், அவர்களெல்லாம் நம்மருமை மாணிக்கவாசகப் பெருமானைப்போல, - "பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க" என்னும் நுட்பமுறை கடைப்பிடித்துக்-"கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத் தீற்றியவாறு" போலக் காதலின்ப நலத்தையும், கடவுளின்ப நலத்தையும் ஒன்று சேர்த்து ஒருங்கியைத்துப் பாடி, நம்மனோர்க்கு உய்யுநெறி விளக்கி, உணர்வு கொளுத்தக்காண்கின்றிலம்.

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

எனவரும் தொல்காப்பிய நூற்பா, காதலின்ப வாழ்வின் பயன், கடவுளின்ப வாழ்வினை

அடைய முயலும் படிநிலைப் பயிற்சியாதலே யாகும் என்று, மிக நுண்ணியதாகக் குறித்த அரிய கருத்தினை, உரிய முறையில் விரிவாக எடுத்து, நானூறு(400) அழகிய பாடல்களால், சுவைதுளும்பிக் கவின்மிகும் கற்பனையுணர்வுக் காட்சிகளால் முழுவதாகத் தெளிவுற விளக்கிய பெருஞ்சிறப்பு, மாணிக்கவாசகருக்கும், அவர் அருளிச்செய்த திருக்கோவையார்க்கும் உரிய தாகும்.

**காமம் சான்ற ஞானப் பனுவல் :**

இச்சிறப்புடைமை கருதியே குமரகுருபர அடிகள் ''ஐந்திணை உறுப்பின் நாற்பொருள் பயக்கும், காமம் சான்ற ஞானப் பனுவல்'' எனத் திருக்கோவையாரைத் தாம் இயற்றிய சிதம்பர மும்மணிக்கோவையின்கண் வியந்து போற்றிப் புகழ்ந்துரைத்தார்.

''திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கைஇகந்து அறிவாய், அறியாச்
செம்புலச் செல்வர் ஆயினர்; ஆதலின்
அறிவன்நூற் பொருளும், உலகநூல் வழக்கும் என
இருபொருளும் நுதலி எடுத்துக் கொண்டனர்''

என்று திருக்கோவையாருக்கு உரைவகுத்த பேராசிரியர்தாமும் குறித்திருத்தல், ஓர்ந்து உணரற்பாலது. இங்கு'அறிவன் நூற்பொருள், என்பது திருவாசகம்; அறிவன்நூற்பொருள், உலகநூல் வழக்கு என்னும் இருதிறமும் ஒரு சேரக்கொண்டு அமைந்து திகழ்வது திருக் கோவையார்.

திருப்பெருந்துறையில் இறைவனால் ஆட் கொள்ளப்பெற்ற மணிவாசகர், பின்னர்ப் பல தலங்களுக்கும் சென்று வழிபட்டு, இறுதியாகத் தில்லையில்வந்து தங்கிச் சிவயோகநிலையில் அழுந்தித் திளைத்துக்கொண்டிருந்த காலத்தில், ஒருநாள் இறைவன், ஒரு முதியவர் கோலம் கொண்டுபோந்து, ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என்று கேட்டுக் கொள்ள, மணிவாசகரால் பாடப்பெற்றது திருக்கோவை யார் என்பது வரலாறு. ஆதலின் திருவாசகத் தினை அடுத்து மணிவாசகராற் பாடப்பெற்ற திருக்கோவையாரின்கண், திருவாசகக் கருத்துக் களும் அனுபவங்களும், சொல்-சொற்றொடர் அமைப்புக்களும், பெரிதும் விரவி ஒற்றுமைப் பட்டு அமைந்து விளங்கக் காணலாம். அவ் வமைப்பின் இயல்பினையே ''தேனில் விளைந்த தெள்ளமிழ்தம்'' என்னும் மேலைத் தொடர் குறிப்பிடுகின்றது. இவ்வுண்மையைச் செவ்விதின் விளக்கும் ஒருசில சான்றுகளைமட் டும், ஈண்டு இயன்றவரை முயன்று காண்போம்.

**(1) உயிர் என வியத்தல் :**

சிவபெருமான் மாணிக்கவாசகர் பாற் பேரருள் பூண்டான். அவரை முன்னொருகால் திருப்பெருந்துறையிற் குருந்தமர நிழலின்கண், ஞானாசிரியனாகப் போந்து கலந்தாண்டு கொண்டான். பின்னர் அவருள்ளம் வருந்து மாறு, அவரைப் பிரிந்து சென்றான். சென்று தன் மெய்யடியவர் கூட்டத்தோடு சேர்ந்தான். இத்தகைய சிவபெருமான், நினைக்குந்தோறும் இன்பஞ் செய்தலின் மாணிக்க வாசகர்க்கு அமிழ்தமாக விளங்கினான். பின்னர் அவனே, மறைந்து நின்று கட்புலனாகாது துன்பஞ் செய் தலின், அவர்க்கு அணங்காகவும் இருந்தான். தில்லையம்பலம் போன்ற பல நல்ல தலங்களில் எழுந்தருளியிருப்பது மட்டுமின்றி, அச்சிவபெரு மான் மாணிக்கவாசகரின் சிந்தையிலும் நிலை பெற்றுத் திகழ்ந்தான். இங்ஙனம் சிவபெருமான் ஒருவனே, பல பண்பும் செயலும் கொண்டு இந்திரசாலம் செய்பவன்போல, மாணிக்கவாச கர்பால் திருவிளையாடல்கள் பல செய்து நின்றான். அவர்க்குக் கண்முன்னே தோன்றிக் காட்சியும் நல்கினான்.

சிவபெருமானைக் கண்ணாரக்கண்ட மணி வாசகர், அப்பெருமானே தமக்கும், ஏனைய எல்லா உலக மக்களுக்கும், உயிர்க்குயிராகத் திகழ்பவன் என மதித்துணர்ந்து, வழுத்தி மகிழ்ந்தார். 'நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றான்' (1-69), 'ஐயா என் ஆருயிரே அம் பலவா' (231), 'எண்ணகத்தாய் உலகுக்கு உயிர் ஆனாய்' (3674), 'இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே' (389), 'எங்கள் நாயகனே என் உயிர்த் தலைவா' (458), 'அணியும் அமிழ் தும் என் ஆவியும் ஆயவன்' (கோ.5), 'அம் பலத்து எம் ஆவியன்னான்' (கோ.37) என் றெல்லாம், மணிவாசகர் தமக்குச் சிவபெரு மான் செய்த பலவகை இன்னருள்கள் கருதி, அவரைத் தம் உயிர் என வியந்து புகழ்ந்து போற்றுகின்றார்.

அவ்வியப்பினை எல்லாம் மாணிக்கவாச கர், நம்மனோர்க்கு உணர்த்த விரும்புகின் றார். ஆயின், அவர் அவற்றை உடனே நமக்கு நேரே நிரல்பட, எடுத்த எடுப்பிற் கூறிவிடு வதற்கு முற்பட்டிலர். நமக்கு விருப்பம் மிக்க காமச் சுவையின்கண் வைத்தே, தமது ஞானப் பொருட் செய்தியினை, அவர் கூறத் தலைப் படுகின்றார். அதனை,

''காணா மரபிற்று உயிர்என மொழிவோர்,
நாண்இலர் மன்ற; பொய்ம்மொழிந் தனரே!
யாஅம் காண்டும்எம் அரும்பெறல் உயிரே!
சொல்லும் ஆடும்; மென்மெல இயலும்;
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்,
மழைக்கண் மாதர் பணைப்பெருந்தோட்டே''

—தொல் களவியல் மேற்கோள்.

எனவரும் பழைய சங்ககாலப்பாடலைத் தழீஇ, மணிவாசகர் பின்வரும் கருத்தமையப் பாடு கின்றார்.

''ஓர் ஆடவன் அழகிய பெண்ணொருத்தியை ஒரு பொழிலிடைக் கண்டான். அன்பின் வயப்பட்டு இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். காதலித்த இருவரும் இன்பம்பெருகத் தம்முட் புணர்ந்து மகிழ்ந்தனர். புணர்ச்சி நிகழ்ந்ததற்பின், இருவரும் பிரிய நேர்ந்தது. காதலியைப் பிரியுங்கால் காதலனின் உள்ளம் பெரிதும் வருந்தியது. பிரிந்த காதலி தன் தோழியர் கூட்டத்தைச் சென்று சேர்ந்தாள். காதலன் மறுநாளும் அப்பொழிலின்கண் வந்து நின்றான். அன்றும் தன் காதலியை அங்குக் கண்டு, தான் அவளைப் புணர்தல் வேண்டும் என்று, அவன் மிகவும் விருப்பங்கொண்டிருந்தான். தன் காதலியை அவன் அங்குக் கண்டிலன். இனிச் சிறிது பொழுதில் வருவாள் என்ற எண்ணத்தோடு, நேற்றுத் தான் அவளைப் புணர்ந்து மகிழ்ந்த இன்பத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். அந்நிலையில் அவனுக்கு ஒரு புறம் மகிழ்ச்சியும், பிறிதொரு புறம் துன்பமும் உண்டாயின. காதலியின் பேரழகில் அவன் தன் மனத்தைப் பறிகொடுத்துவிட்டிருந்தான். அவனது உள்ளக் கோயிலில் அப்பெண்ணின் வடிவம் நீங்காது நிலைபெற்றுவிட்டது. அவளது வருகைக்காக அவன் அங்கேயே நெடுநேரம் காத்துத் தவங்கிடந்தான். நெடும்பொழுது கழித்து, அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிட்ட அவ் வஞ்சகக்கள்வி, அங்கு வந்து நின்றாள். தன் உயிரினும் இனிய காதலியைக் கண்டதும், அவன் அகமிகமகிழ்ந்து ''இதோ வந்து நின்றதென் மன்னுயிரே'' என வாய்விட்டுக் கூறிப் பாராட்டிப் பெருங்களிப்புற்றான். ''உயிர் என வியத்தல்'' என்னும் அகத்துறைக்கு உரிய இச் செய்தியை,

''நேயத்த தாய், நென்னல் என்னைப்
புணர்ந்து, நெஞ் சம்நெகப்போய்,
ஆயத்த தாய், அமிழ் தாய், அணங்
காய், அரன் அம்பலம்போல்
தேயத்த தாய், என்றன் சிந்தைய
தாய்த், தெரி யிற்பெரிதும்
மாயத்த தாகி, இதோவந்து
நின்றதென் மன்னுயிரே!''

என, ஏதோ ஒரு கதை கூறுவதுபோலக் கூறுகின்றார் நம் மாணிக்கவாசகர். அவர் கூறுவது உண்மையில் ஒரு கதையும் அன்று. தமது உயிர்க்குயிராகிய சிவம் தம்மாட்டுப் பலவகைத் திருவிளையாடல்கள் நிகழ்த்தி, ''இதோ வந்து நின்றதென் மன்னுயிரே'' எனலாம்படி, பின்னர்த் தமக்குக் காட்சி நல்கிய சிறப்பினையே அவர் இங்ஙனம் குறிப்பிடுகின்றார்! இவ்வுண்மை, பின்வரும் பேராசிரியர் உரையால் செவ்விதின் அறியப்பெறும்.

''என்மாட்டு அருளுடையதாய், முற்காலத்து என்னை வந்து கூடி, அருள்இல்லதுபோல என் நெஞ்சு உடையும் வண்ணம்போய்த், தன் மெய்யடியார் குழாத்ததாய், நினைதோறும் அமிழ்தம் போல இன்பம் செய்து, கட்புலனாகாமையில் துன்பம் செய்து, அம்பலம் போலும் நல்ல தேசங்களின் கண்ணாற்ய் வந்து, என் மனத்தகத்ததாய், இத்தன்மைத்தாகலித பெரிதும் மாயத்தை உடையதாய், எனது நிலைபெறும் உயிர், இதோ இங்கு வந்து தோன்றுகின்றது என்று, வேறும் ஒரு (திருவாசக அனுபவப்) பொருள் விளங்கியவாறு கண்டுகொள்க.''

(2) புனல்தரு புணர்ச்சி :

ஒரு தலைமகன் ஒரு தலைமகளைக் காதலித்தான். அக் காதல் விருப்பம் நிறைவேறத் தோழியின் துணையை நாடினான். அவளும் அவனது வேண்டுகோளுக்கு இசைந்தாள். இசைந்த தோழி, தலைமகள்பாற் சென்று, தலைமகனின் அயரா அன்பின் திறனைப் பெரிதெடுத்துக்கூறி, அவனை ஏற்றுக்கொள்ளல் இன்றியமையாததெனத் தலைவியிடம் வற்புறுத்தி மொழிந்தாள். அதுகேட்ட தலைவியும், தான் முன்னொரு நாள் சுனைநீராடச் சென்றபோழ்து, அச்சுனை நீரின்கண் வழுக்கி விழுந்து இறக்க இருந்த நிலையில், அவ்வழியே தற்செயலாகப் போந்த தலைமகன், உடனே சுனையிடைப் பாய்ந்து, தன்னைக் காப்பாற்றிய அருஞ்செயலை நினைவு கூர்கின்றாள். அவன் காலத்தினால் செய்யாமற் செய்த அரிய பேருதவிக்கு நன்றி பாராட்டுகின்றாள். ''உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர்'' என்னும் முதுமொழியை எண்ணுகின்றாள். அருவியிற் சென்று நீராடப் புகுந்த யான், சுனையில் வீழ்ந்து ஆழ்ந்து தத்தளித்து உயிரை இழக்க இருந்த நிலையில், அங்கு உற்றகாலத்தில் வந்து என் உயிரைக் காத்து உதவிய அப்பெருந்தகைக்கு, யான் சொல்லத்தக்க நன்றியுரை யாது என்று எனக்குத் தெரியவில்லை. ''அவர்க்கு அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே'' என்று குறிப்பிட்டு, நன்றியுணர்வு காரணமாக, அத் தலைவனையே தான் மணத்தல் வேண்டும் என்று, தன் மனத்தில் உறுதிப்பாடு செய்து உடன்படுகின்றாள். 'புனல்தரு புணர்ச்சி' என்று, நம் தமிழ் அகப்பொருள் இலக்கண நூல்கள் கூறும் துறையினைத் தழுவியதாகப் பின்வரும் அழகிய திருக்கோவையார் செய்யுளை, மணிவாசகர் அருளிச் செய்கின்றார்.

''ஓங்கும் ஒருவிடம் உண்டு, அம்பலத்து
உம்பர் உய்ய, அன்று
தாங்கும் ஒருவன் தடவரை
வாய்த், தழங் கும்அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்த (அ)ன்று,
அழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்(கு), அறியேன்
சிறியேன் சொல்லும் வாசகமே!''

இப்பாடலில், தலைவி தலைவன் தன்னைச் சுனையிலே வீழ்ந்து இறவாமல் காத்து உதவிய செயலை நினைவுகூர்ந்து நின்று, நன்றி பாராட்டியதாக மட்டும் கூறி, மணிவாசகர் அமைந்துவிடவில்லை.

''தனியனேன் பெரும்பிறவிப் பவ்வத்தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு, பற்றொன்றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு, காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனிஎன்னே உய்யுமா(று) என்றென் றெண்ணி,
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை,
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்கனேற்கே!''

என்று தாம் திருவாசகத்திற் பாடியவாறுபோல, சிவபெருமான் தம்மைப் பிறவிப் பெருங்கடலில் விழுந்து அலைந்து வருந்தாமல், வாவா என்று வலித்துப் பிடித்து ஈர்த்துக்காத்து ஆண்டு கொண்டருளிய பேருதவியையும் நினைவு கூர்ந்து, அத்தகைய சிவபெருமானுக்கு என்ன நன்றியுரை கூறுவது, யாங்ஙனம் கூறுவது என்று யான் அறிகின்றிலேன் என்னும் தம் கருத்தும் உடன் இயைந்து அமைய ''அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே'' எனப்பாடிப் பரவுகின்றார். இவ்வுண்மை பின்வரும் பேராசிரியர் உரையால் தெள்ளிதிற் புலனாகும்.

**"பிறவிக் குட்டத்தில் யான் விழுந்து கெடப் புகத் தாமே வந்து பிடித்தெடுத்து, அதனினின்றும் வாங்கிய பேருதவி புரிந்த கூத்தப்பெருமானுக்குச் சிறியேன் ஆகிய யான் சொல்லுவது அறியேன் என்று வேறும் ஒரு பொருள் தோன்றியவாறு கண்டு கொள்க."**

**இன்பக் கலவிகள்:**

இம்மட்டோ! தலைவன் வரைபொருள் தேடிவரப் பிரிந்து செல்கின்றான். அவனோ விரைவில் குறித்த காலத்தில் வருகின்றிலன். அவன் குறித்த காலமும் கடந்து விட்டது. ஆனால் அவன்வரவும் இல்லை, தலைவிக்குத் தன்னைப் பற்றிய செய்தி ஏதும் தெரிவிக்கவும் இல்லை. அந்நிலையில், பிரிந்துசென்ற பிற கணவன்மார்கள் மட்டும், தத்தம் மனைவியர்க்கு அவ்வப்போது தம் செய்திகளைத் தெரிவித்துத் தூதுகள் விடுகின்றனர். அங்ஙனம் அயலவர்கள் விடுக்கும் தூதுவர்கள்மட்டும், அவரவர் இல்லத்திற்கு வருவதும் செல்வதுமாக இருக்கின்றனர். அவ்வாறு தான் வாராதொழியினும், அத்தகைய தொரு தூதினையேனும் தலைவன் தனது தலைவிக்கு விடுத்திருக்கலாம். அவன் அங்ஙனமும் செய்திலன். அதனால் தலைவி ஆற்றாமை மிக்கு அலக்கணுறுகின்றாள். ''முன்னே என் உள்ளம் உருகி மகிழ, அவர் என்பால் இன்பக் கலவிகள் செய்தார். என் உயிரைத் தாம் கொண்டு சென்று, தம் உருவத்தை என்நெஞ்சில் இருத்திவைத்தார். அத்தகைய காதலர் நம்மை விட்டு நீங்கி இத்துணை நெடுங்காலம் ஆகியும், இதுகாறும் ஒரு தூதினையேனும் அனுப்பாமல்வாளாது இருப்பது என்கருதியோ?" என்று தலைவி உள்ளம் கவல்கின்றாள். ''தூது கண்டு அழுங்கல்'' என்னும் இவ் அகத்துறைக் கருத்தினை,

''மலங்கினேன் கண்ணின் நீரை மாற்றி,
மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன், வினைக்கேடனேன்; **இனி
மேல்விளைவது அறிந்திலேன்**
இலங்குகின்ற நின்சேவடிகள் இரண்டும்
வைப்பிடம் இன்றியே,
கலங்கினேன்; கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே''

—திருவாசகம், 468

எனவரும் திருக்கழுக்குன்றத் திருப்பதிகத் திருவாசகப் பாடலின் கருத்தும் உணர்வும் கலந்து அமைந்து விளங்கத் தக்க நிலையில்,

''வருவன செல்வன தூதுகள்
ஏதில; வான்புலியூர்
ஒருவன(து) அன்பரின், இன்பக்
கலவிகள் உள்ளுருகத்
தருவன செய்(து), என(து) ஆவிகொண்டு
ஏகி, என் நெஞ்சில்தம்மை
இருவின காதலர், ஏதுசெய்வான்
இன்று இருக்கின்றதே!''

—திருக்கோவையார், 281

என்று நம் மணிமொழியார் அணிதிகழப் பாடுகின்றார். இப்பாடலில், தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் ஆற்றாமையை மட்டும் அடிகள் கூறுகின்றிலர். ''தன் மெய்யன்பர்களைப் போல யானும் இன்புறுமாறு சிவபெருமான் என்பால், உள்ளம் உருகும் இன்பக் கலவிகளை முன்பு செய்தருளினார். பின்னர் என் உயிர் போயினாற் போல, என்னை விட்டுத் தான்பிரிந்து போயினார். போயின பின்னர், ஒரு ஞான்றும் அவர் எனக்குக் கட்புலனாகாமல் மறைந்து நின்றார். அதனால் தம்மை நினைந்து யான் இடையறாது வருந்துமாறு செய்தார். அத்தகைய என் ஆருயிர்க் காதலராகிய சிவபெருமான், இனி என்பால் ஏது செய்ய இருக்கின்றாரோ? ஒருகால் என்னைக் கைவிட்டுவிடுவாரோ? நன்றே செயினும் பிழைசெயினும்நானோஇதற்கு நாயகம்?'' என்னும் வேறொரு பொருளும், இப்பாடற்கண் அமைந்துள்ள தன்மை, அனைவரும் அறிந்து இன்புறற்பாலது. இதனைப் பின்வரும் பேராசிரியர் உரையால் யாவரும் இனிது தெளிந்து மகிழலாம்:

**''தன் மெய்யன்பர்போல யானும் இன்புற, உள்ளம் உருகும் இன்பக் கலவிகளை முன்பு என்பாற்செய்து, பின்பு எனது ஆவி நீங்கிப் போயினாற்போலத் தாம் பிரிந்து போய், பின்னர் ஒருஞான்றும் என் கட்புலனாகாது யான் நினைந்து வருந்தும்படி செய்த காதலர், இன்று ஏது செய்ய இருக்கின்றாரோ! என்று வேறும் ஒரு பொருள் தோன்றியவாறு கண்டு கொள்க.''**

பெண்ணமிழ்தம் :

இனி இவ்வாறே, ''ஊடல் நீட வாடி உரைத்தல்'' என்னும் அகத்துறை அமைந்த பிறிதொரு செய்யுளையும், ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். ஊடுதல் காமத்திற்கு இன்பம் ஆதலின், தலைமகள் ஊடல் கொள்கின்றாள். ஆயின், அவள் ''உப்பமைந்தற்றாற் புலவி'' என்னும் நுட்பம் அறியாமையால், அறிந்திருந்தும் மறந்தமையால், தலைமகன் தன் ஊடலைத் தணிக்கவும் தணியாது, மேன்மேலும் ஊடி நிற்கின்றாள். ''உணர்ப்பு வரை இறப்பினும், செய்குறி பிழைப்பினும், புலத்தலும் ஊடலும் கிழவோற்கு உரிய''' ஆதலின், தலைமகனும் அவள்பாற் புலந்து ஊடல் கொள்ளத் தலைப்படுகின்றான். ''அன்று அம்மலையிடத்துத்தன்னை எய்துதற்குஉரியவாயில் ஒன்றும் இன்றி வருந்திநின்ற, யான் உய்யும் வண்ணம் தனது இணைமலர் போன்ற எழில் மிக்க கண்களின் இனிய நோக்கத்தினைத் தந்தருளி, என்னைத் தன்வயம் ஆக்கிய 'பெண்ணமிழ்தம்' தானா இவள்? இவள் அவளின் வேறாய வேறு ஏதோவொரு மாய வடிவினளே ஆதல்வேண்டும். இல்லையாயின், நாம் இத்துணைப் பணிமொழிகள் கிளந்து இரந்து நின்றும், இவள்தன் ஊடல் தீர்ந்திலாமைக்குக் காரணம் என்னை?'' எனத்தானும், தன் ஊடலால் சிறிது சினந்தாற்போல வெறுப்புணர்வுதோன்றக் கூறுகின்றான். இதனை,

''திருந்தேன் உயநின்ற சிற்றம்
பலவர், தென் அம்பொதியில்,
இருந்தேன் உயவந்து, இணைமலர்க்
கண்ணின் இன்நோக்கு அருளிப்,
பெருந்தேன் எனநெஞ்சு உகப்பிடித்து
ஆண்டநம் பெண்ணமிழ்தம்,
வருந்தேல்! அதுவன்று; இதுவோ,
வருவதுஓர் வஞ்சனையே''

—திருக்கோவையார், *394*

என்று, சொற்பொருட் சுவைநலங்கள் பெருக, மாணிக்கவாசகர் பாடுகின்றார். இப்பாடலின் கண்ணும் அவர் தம்மை ஆட்கொண்ட இறைவனின் அருட்டிறத்தை ஒராற்றால் இணைத்து இயைத்துக் கூறியிருக்கும் முறை, அறிஞர்களுக்கு ஆராப் பெருவிருந்து ஆகற்பாலது. இதன்கண்,

''தோலும் துகிலும்
குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும்
பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க
வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக்
குளிர்ந்து, ஊதாய் கோத்தும்பீ''

—திருவாசகம், *232*.

என்று திருவாசகம் திருக்கோத்தும்பித் திருப்பதிகத்தின்கண், தாம் 'தொன்மைக் கோலம்' என்று சுட்டிக் குறிப்பிட்டுச் சிறப்பித்துப்பாடிய அம்மையப்பர் (அர்த்த நாரீசுவரர்)* வடிவத்தினை நினைவுகூர்ந்து, அதனை நம்மனோர்க்கு உணர்த்தும் வகையில், அருளிச் செய்திருக்கும் முறை அறிந்துணர்ந்து இன்புறுதற்குரியது.

''சிவபெருமானை நோக்கி யாதொரு முயற்சியும் செய்யாமலே, ஒருவாற்றானும் திருந்தாத யான் இருந்தேன்; ஆனால் அவனோ, என்னைப் பிறவித் துன்பத்தினின்று உய்விக்கத், தானே எளிவந்தான்; எனக்குத் தனது இணைமலர்க் கண்ணின் இனிய நோக்கத்தினை வழங்கியருளினான்; பெருந்தேனைப் போன்று இனிமை மிக்குத் திகழ்ந்தான்; என்னுடைய கல்மனமும் கரைந்துருகும்படியாக, என்னை வலிந்து பிடித்து ஆட்கொண்டருளினான்; எளியேனை அடிமைகொண்ட அச் சிவபெருமான் மாதியலும் பாதியனாய்ப் பெண்ணொடு கூடியவன்; அம்மையப்பன் எனத் திகழ்பவன்; அமிழ்தம் போல்பவன்'' என்னும் பிறிதொரு குறிப்புப் பொருளும், மேற்சுட்டிய திருக்கோவையார் பாடலின்கண் கலந்துறைந்து நிற்றல், கவிதைநலம் உணரவல்லார்க்கெல்லாம் கழிபெருஞ் சுவை பயப்பதாகும். பின்வரும் பேராசிரியர் உரை, இதனைப் பெரிதும் வலியுறுத்தும்;

**''தன்னை நோக்கி ஒரு முயற்சியும் இல்லாத யான், பிறவித் துன்பத்தினின்று பிழைக்கும்படி, தானே அருளுடன் எளிவந்து, தன் இணைமலர்க் கண்ணினது இனிய கடைக்கண் நோக்கத்தைத் தந்து, பெருந்தேன் போன்று இனியதாய், என் கல்மனமும் நெகிழ என்னை வலிந்து பிடித்து அடிமைகொண்ட பெண்ணமிழ்தம் என வேறும் ஒரு பொருள் விளங்கியவாறு கண்டுகொள்க.''**

## திருக்கோவையாரில் திருவாசகம் :

திருவாசகத்தின் அரிய இனிய கருத்துக்களும், அழகிய சொல்-சொற்றொடர் அமைப்புக்களும், திருக்கோவையாரின்கண் ஆங்காங்கே விரவிப் பரவி வருவதனை விளக்குவதற்கு, இன்னும் எத்தனையோ பற்பல சான்றுகளைக் காட்டுதல் கூடும்! ஆயினும், இடச் சுருக்கம் கருதி, இரண்டொன்றை மட்டும் இங்குக் குறித்தல் சாலும்.

---

* "Plato held that in the beginning man and woman were one inseparable entity and that, being divided by the wrath of the gods into two they are longing for union again. This view is analogous to the Indian mythological representation of Siva, as a form of half-man and half woman, 'Umai Oru pakan' or 'Arthanareswaran'."

—*Dr. V. Sp. Manickam*
The Tamil Concept of Love. p. 28

''மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்தும்நாமே''

எனவரும் திருவாசகப் பாடலின் அழகிய கருத்தினைத் தழுவி,

''தவளத்த நீறணி யும்தடந்
தோள்அண்ணல், தன்ஒருபால்
அவள்அத்த னாம்;மக னாம்;தில்லையான்
அன்று உரித்ததுஅன்ன
கவளத்த யானை கடிந்தார்
கரத்த, கண்ணார் தழையும்,
துவளத் தருவனவோ? சுரும்பார்
குழல் தூ மொழியே''

எனவரும் திருக்கோவையார் பாடல் அமைந்திருத்தல், பேராசிரியரின் உரைத்துணைக் கொண்டு உணர்ந்து இன்புறலாம். இங்ஙனமே,

''அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆரிங்குப்,
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா,
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை, வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ?''

எனவரும் கோயில் மூத்த திருப்பதிகத் திருவாசகப் பாடல்,

''பொருளா எனைப்புகுந் தாண்டு,
புரந்தரன் மால்அயன்பால்
இருளாய் இருக்கும் ஒளிநின்ற
சிற்றம் பலம்எனலாம்
சுருளார் கருங்குழல் வெண்நகைச்
செவ்வாய்த் துடிஇடையீர்!
அருளாது ஒழியின், ஒழியாது
அழியும்என் ஆருயிரே''

எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையார் செய்யுளோடு, பெரிதொத்து நின்று திகழ்தல், இவ்விரண்டினையும் ஒப்பிட்டு உணர வல்லார்க்குச் செவ்விதின் விளங்கும்.

**தேனில் விளைந்த தெள்ளமிழ்தம்:**

இங்ஙனமெல்லாம், திருக்கோவையாரின்கண் மாணிக்கவாசகப் பெருமான்''இல்லது இனியது நல்லது'' என்று புலவர்களால் நாட்டப் பெற்ற ''புலநெறிவழக்கம்'' தழீஇய கருத்துக் களையே பாடுகின்றனராயினும், திருவாசகத் தின்கண் தாம் வெளியிட்டருளிய சிவானுபவ நலத் திறங்களையும், இடையிடையே விரவ விட்டு, ஐம்பொறி வயப்பட்ட இழிந்த காம இன்பச்சுவை ஒன்றுமேயறிந்த உலகியன் மக்கட்கு, ஐம்பொறி அளவிற் புலப்படாமல், மேற்பட்டொளிரும் மெய்யுணர்வின்ப அனுபவ நலத்தினை அறிவுறுத்தருளி, நலம் புரிந்துதவும் அருமைப்பாடு, வேண்டுந்தனையும் விரித்துரைத்து விரும்பிப் புகழ்ந்து போற்றி மகிழ்ந்து இன்புறுதற்குரியதாகும்! தேன் அனைய திருவாசகத்தின்கண் வெளிப்போதரும் சிவானுபவ நலத் திறங்கள், இடையிடையே விரவ இனிதமைந்து இயன்றுள்ள சிறப்பினைத் திறன் தெரிந்து குறித்துப் பாராட்டுதற்கே, திருக்கோவையார் ''தேனூறு செஞ்சொல் திருக்கோவை'' என்றும், ''தேனில் விளைந்த தெள்ளமிழ்தம்'' என்றும் விதந்து புகழ்ந்து போற்றிப் பாராட்டப்படுவதாயிற்று.

முடிவுரை:

''உலகியற்கைப் பொருள்களில் கூர்தலறக் கொள்கையின்படி, முதன்முதலாகத் தோன்றிய பொருள்களைவிட, நாளடைவாகப்படிப்படியே பின்னர்த் தோன்றும் பொருள்களே மேன்மேல் உயர்ந்து ஓங்கி, வளர்ச்சியுற்றுச் சிறந்து திகழக் காண்கின்றோம். ஆனால் பரிணாமம் எனப்படும் இக்கூர்தலறக் கொள்கையானது, இலக்கியங்களைப் பொறுத்தவரையில் சிறிதும் பொருந்துவதாகத் தோன்றவில்லை. மிகச் சிறந்த பேரிலக்கியங்கள் எல்லாம் துடுமெனத் தாமே முதன்முதலாகத் தோன்றுகின்றன; ஒப்புயர்வற்று விளங்குகின்றன! ஒரேஒரு முறை மட்டுமே தோன்றும் அச்சிறப்பிலக்கியங்களுக்கு அருகே நிற்பதற்குக்கூட, அவற்றிற்குப் பின்னர்ப் படிப்படியே காலப்போக்கில் தோன்றும் இலக்கியங்கள் தகுதி பெறுவதில்லை''† என்று, புகழ்மிக்க மேலைநாட்டு இலக்கிய ஆராய்ச்சிப் பேரறிஞர் ஐ.எ. ரிச்சர்ட்சு, தம்முடைய இலக்கியத் திறனாய்வு நூலின்கண் நெடிது ஆராய்ந்து உணர்ந்து குறிப்பிட்டுரைக்கின்றார். அவர்தம் கூற்று, நம்முடைய திருக்கோவையார்க்கு மிகமிகப் பொருந்தியதொன்றாகக் காணப்படுகின்றது.

இன்று தமிழில் எத்துணையோ பலப்பல கோவை நூல்கள் பாடப்பெற்றிருக்கின்றன. எனினும் அவைகள் எல்லாவற்றுள்ளும், தெய்விக அருட் சிறப்புநலம் அமைந்து, தனிப்பெருமுதன்மையும் மாட்சிமையும் மிக்குத் தன்னிகரற்றுத் திகழ்வது திருக்கோவையாரே யாகும். இன்றுள்ள எல்லாக் கோவை நூல்களுக்கும் முற்பட்டு, முதன்முதலில் தோன்றியதாகவும்,

---

† "Here is a very odd thing. In literature the best in each kind comes first, comes suddenly and never comes again. This is a disturbing, uncomfortable, unacceptable idea to people who take their doctrine of evolution over-simply. But I think, it must be admitted to be true. Of the very greatest things in each sort of literature, the **masterpiece** is unprecedented, unique, never challenged or approached henceforth."

—*Dr. I. A. Richards*,
Quoted by A. C. Bosanquet,
in his Comparative Religion.

ஏனைய பிறவற்றிற்கெல்லாம் அடிப்படையாய் - வழிகாட்டியாய் மூலஆதாரமாய் -மேல் வரிச்சட்டம் என்னுமாறு திகழ்வதாகவும், திருக்கோவையார் பெரிதும் சிறந்தோங்கி விளங்குகின்றது. கோவைநூல்களின் வரிசையில் மிகமிகப் பழமையும், பெருமையும் முதன்மையும் அருமைப்பாடும் தெய்விகநலச்சிறப்பும் பெற்றுப் பிறங்கி, ஈடும் எடுப்பும் அற்று வீறுற்று விளங்குவது, மணிவாசகப்பெருமான் அருளிய திருக்கோவையார் என்பதனை, அறிஞர்கள் அனைவரும் உளமுவந்து, இனிது ஏற்று உடன்பட்டுப் போற்றி மகிழ்வர். ஆதலின், திருவாசகம் திருக்கோவையார் என்னும் இவ்விரு பெருஞ் செந்தமிழ்த் தெய்விகத் திருமறைநூல்களையும், நாம் தக்கவாறு போற்றிப் பயின்று ஓதி மகிழ்ந்து உய்ய முயல்வோமாக!

தேனூறும் செஞ்சொற் றிருக்கோவைச் செய்யுள்கள்
நானூறும் நானூறு நன்மணிகள்!-வானேறும்
காமநலஞ் சான்ற கடவுண்மா ஞானநூல்
ஆமதன்சீர்க் குண்டோ அளவு? (1)

காதல் உணர்ச்சியினைக் கடவுள் உணர்வினொடு
தீதறச்சேர்த் துக்கோவை செய்தளித்து-ஓதுலக
மக்களெலாம் உய்யவைத்த மாணிக்க வாசகர்தாள்
எக்காலும் போற்றியுய்வோம் யாம்! (2)

நல்ல தமிழர்! சிவநெறியர்!
நயந்து தொழில்கள் நனிவளர்த்தோர்!
செல்வர்! வள்ளல்! கருமுத்து
தியாக ராசர் நினைவாக,
எல்லை இலாச்சீர்த் திருக்கோவை
யாரும், திருவா சகமும்எனைச்
சொல்ல வைத்த, நல்லோர்க்கென்
தூய நன்றி பெரிதுரித்தே! (3)

—ந.ரா. முருகவேள்

---

# திருவாசகச் சொற்பொழிவுகள்

மதுரைத் தியாகராசர் கல்லூரியில், அக் கல்லூரியை நிறுவிய ''கலைத் தந்தை'' கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்கள் நினைவு நாள் விழா, 29.7.81 புதன் கிழமையன்று காலை 10 மணியளவில் 'கலையன்னை' டாக்டர் திருமதி இராதாதியாகராசன், M.A.,Ph.D. அவர்கள் தலைமையில், மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மதுரை மாநகரத்துப் பெருமக்கள் பலரும் வந்து சிறப்பித்தனர். இறைவணக்கத்திற்குப் பின், தியாகராசர் கல்லூரியின் தாளாளர் (Correspondent) திரு. தி. கண்ணன் அவர்கள் வரவேற்புரையும், திருமதி டாக்டர் இராதாதியாகராசன் அவர்கள் தலைமையுரையும், திரு. அழகுசுந்தரம் செட்டியார், பேராசிரியர் திரு. அ. சங்கரநாராயணன், திரு. டாக்டர் கண்ணன் ஆகியோர்களின் அஞ்சலி உரைகளும் நிகழ்ந்த பின்னர், இந்திய அரசின் முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், நினைவு விழாச் சிறப்புரை ஆற்றினார்கள். தியாகராசர் கல்லூரியின் முதல்வர் திரு. டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் நன்றியுரை நவில, விழா இனிது நிறைவு பெற்றது.

'கலைத்தந்தை' கருமுத்து. தியாகராசர் செட்டியார் அவர்களின் நினைவு விழாவினையொட்டி, அவர்களின் நினைவு அறக்கட்டளை அமைப்பின் சார்பாக, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் ஆதரவில், ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், M.A.,M.O.L. அவர்கள், 29.7.81 அன்றும், 30.7.81 அன்றும், மாலை 4 மணியளவில், மதுரைத் தியாகராசர் கல்லூரியில் முறையே "பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்'' என்னும் தலைப்பிலும் ''தேனில் விளைந்த தெள்ளமிழ்தம்" என்னும் தலைப்பிலும், திருவாசகம் பற்றி இரண்டு விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். 29.7.81 அன்று நிகழ்ந்த முதல் விரிவுரைக்குச் 'சித்தாந்தச் செம்மல்' திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.L.T. அவர்கள் தலைமையேற்றார்கள். மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர்-பேராசிரியர் டாக்டர் திரு. தமிழண்ணல்,M.A., Ph.D. அவர்கள் வரவேற்புரையும், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. டாக்டர் வ. சுப. மாணிக்கனார், M.A.,M.O.L.,Ph.D. அவர்கள் கருத்துரையும், திரு டாக்டர் சுப. அண்ணாமலை, M.A.,M.Litt.,Ph.D. அவர்கள் நன்றியுரையும் வழங்கினார்கள்.

மறுநாள் 30.7.81 வியாழனன்று மாலை நடைபெற்ற விரிவுரைக்கு, மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தலைமையேற்றார்கள். தியாகராசர் கல்லூரியின் முதல்வர் திரு. டாக்டர் சுப. அண்ணாமலை, M.A.,M,Litt.,Ph.D. அவர்கள் வரவேற்புரையும், மதுரைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. ப. முருகன், M.A. அவர்கள் நன்றியுரையும் நவின்றார்கள். பல்கலைக் கழகப் பேராசிரியர்களும், மாணவ மாணவியர்களும், பொது மக்கள் பலரும் வந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.